டிசம்பர் 2012

# ஞானம்

151

**கலை இலக்கியச் சஞ்சிகை**

## புலப்பட்டும் புலப்படாமலும் விரிந்து வருகின்ற போர்வெளிகளில் பயணிக்கும் ஈழக்கூத்தர்

- சி.ஜெயசங்கர்



சிறுகதை

## பூமராங்க்

பதுளை சேனாதிராஜா

சிறுகதை

## இன்றும் இன்னும்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



கலை, இலக்கிய, கலாசார, அரசியல் ஆய்வாளர்
எழுத்தாளர், விமர்சகர்

**"திருமலை நவம்"**

விலை : ரூபா 65/=

www.gnanam.info


தரமான தங்க நகைகளுக்கு...


# NAGALINGAMS

*Jewellers*



**Designers and Manufacturers of 22KT Sovereign Gold Quality Jewellery**





101, Colombo Street, Kandy
Tel : 081 - 2232545

# CENTRAL ESSENCE SUPPLIERS

**SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS**

**Dealers in all Kinds of Food Essences, Food Colours, Food Chemicals, Cake Ingredients Etc.**

76 B, Kings Street, Kandy
Tel : 081-2224187, 081-2204480, 081-4471563

ஞானம்

பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்

ஒளி - 13 சுடர் - 5

**ஆசிரியர்**
தி.ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர்: ஞா. பாலச்சந்திரன்

**இணை ஆசிரியர்**
ஞானம் ஞானசேகரன்

**ஓவியர்**
சிவா கௌதமன்

**தொடர்புகளுக்கு**
'ஞானம்' அலுவலகம்
3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.

**தொலைபேசி**
0094 - 11 2586013, 0094 - 777 306506
0061 - 286778989 (Aus)

**தொலைநகல்**
0094 11 2362862

**மின்னஞ்சல்**
editor@gnanam.info

**இணையத்தளம்**
http://www,gnanam.info
http://www.t.gnanasekaran.lk

**உள்நாட்டு சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | : | ரூபா 1,000/= |
| ஆறு ஆண்டுச்சந்தா | : | ரூபா 5,000/= |
| ஆயுள் சந்தா | : | ரூபா 20,000/= |

| வெளிநாட்டு சந்தா | ஓராண்டு |
|---|---|
| Australia(AU$) | 50 |
| Europe(€) | 40 |
| India(Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada($) | 50 |
| UK(£) | 35 |
| Singapore(S $) | 50 |
| Other(US $) | 50 |

**வெளிநாட்டு உள்நாட்டு வங்கித் தொடர்புகள்**
SwiftCode :- HBLILKLX
T.Gnanasekaran
Hatton National Bank, Wellawatha Branch
A/C No.009010344631

மணியோடர் மூலம் சந்தா அனுப்புபவர்கள் அதனை வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக் கூடியதாக அனுப்புதல் வேண்டும் - ஆசிரியர்


## இதழினுள்ளே ...


**கவிதைகள்**

வெ. ஐ. வரதராஜன் 06
கருணாகரன் 12
குறிஞ்சிக் கவி 19
த. ஜெயசீலன் 25
பொத்துவில் அஸ்மின் 35
செ. சுதர்சன் 35

**கட்டுரைகள்**

செ. ஞானராசா 04
சி. ஜெயசங்கர் 13

**சிறுகதைகள்**

யோகேஸ்வரி சிவப்பிரகாசம் 07
பதுளை சேனாதிராஜா 20

**பத்தி எழுத்து**

கே.ஜி. மகாதேவா 26
மு.பொ. 33

**நூல் மதிப்புரை**

குறிஞ்சி நாடன் 38

**சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**

கே. பொன்னுத்துரை 41

**கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள்**

கொற்றை பி. கிருஷ்ணானந்தன் 38

**வாசகர் பேசுகிறார்** 47



ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. - ஆசிரியர்

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப்பதவி கொள்வார்

# ஈழத்துப் போர் இலக்கியமும் போரின் பின்னரான இலக்கியமும்

உலக வரலாற்றில் எங்கெல்லாம் போர்கள் இடம்பெற்றனவோ அங்கெல்லாம் உன்னதமான போர் இலக்கியங்கள் தோன்றியிருக்கின்றன. முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னரும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னரும் பல போர் இலக்கியங்கள் தோன்றின. ஒரு நாட்டுக்குள் இன மத ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளுக்காக கிளர்ந்தெழுந்து போராடிய உள்நாட்டுப் போர்களிலிருந்து பல உன்னத இலக்கியங்கள் தோன்றியதை ஐரிஷ், பலஸ்தீன இலக்கியங்கள் காட்டி நிற்கின்றன.

இரு தரப்பினர் அல்லது அதற்கு மேற்பட்டோர் ஆயுதங்களை ஏந்தி போரிட்ட போரினால் ஏற்பட்ட வலிகளைச் சுமந்து வெளிவந்தவையே இந்தப் போர் இலக்கியங்கள்.

இந்த அடிப்படையில், நமது நாட்டில் இன ஒடுக்க முறைக்கு எதிராக ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் இடம்பெற்ற விடுதலைப் போர் ஆயுத ரீதியாக முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்றது. தமிழ் கூறு நல்லுலகில் எந்தத் தமிழர்களுக்கும் கிடைக்காத அனுபவம், வாழ்வியல் நெருக்கடிகள் ஈழத்தமிழர்களுக்குத்தான் கிடைத்தது. அவை தொடர்பாக ஏராளமான இலக்கியங்கள் எழுந்துள்ளன. இந்தப் போர் இலக்கியங்கள் நவீன தமிழ் இலக்கியத்திற்கு ஒரு தனியான பகுப்பைத் தந்தன. 'பெண்ணியம்', 'மார்க்சியம்' போன்ற கருத்தியல்கள் எவ்வாறு மேலைத் தேயங்களிலிருந்து நவீன தமிழ் இலக்கியத்தில் உட்புகுந்து அவை தொடர்பான இலக்கியங்கள் எழுந்தனவோ அல்லது 'தலித்தியம்' என்ற கருத்தியல் எவ்வாறு இந்திய மாநிலங்களில்தோற்றம்பெற்றுதமிழ்இலக்கியத்தில்புகுந்துகொண்டதுவோ அவ்வாறே 'போர் இலக்கியம்' என்ற பகுப்பினை ஈழத்தமிழர்கள் நவீன தமிழ் இலக்கியத்துக்கு வழங்கியிருக்கிறார்கள். நவீன தமிழ் இலக்கியத்தில் போர் இலக்கியம் என்ற தனியான பகுப்பை உருவாக்கிய பெருமை ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளையே சாரும்.

இந்த ஈழத்துப் போர் இலக்கியங்களை தொகுத்து எதிர்காலச் சந்ததிக்கு வழங்குவது காலத்தின் கடமையாகிறது. சங்க இலக்கியங்களில்

புறநானூறு போன்ற போர் இலக்கியப் பாடங்கள் தொகுக்கப்பட்டதால் தான் 2000 வருடங்கள் கடந்த நிலையிலும் அவை நமக்குக் கிடைத்திருக்கின்றன. இல்லையெனில் அவை உதிரிப் பாடல்களாக அன்றே அழிந்து போயிருக்கும். இந்தச் சிந்தனையின் வழிநின்று ஞானம் தனது 150ஆவது இதழை ஈழத்து போர் இலக்கியச் சிறப்பிதழாக தொகுத்து வெளிக் கொணர்ந்தது. போரிலக்கியத்தின் பல்பரிமாணத்தையும் இலக்கிய வாசகருக்கு உணர்த்தும் வகையில் இந்தச் சிறப்பிதழ் தொகுக்கப்பட்டுள்ளது. பேசாப் பொருளாக இருந்த பல விடயங்கள் இதில் பேசு பொருளாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிறப்பு மலரை வெளிக்கொணர்ந்தன் மூலம் நாம் எமது சமூகப் பொறுப்பைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளோம். இத்தொகுப்பு முயற்சியானது ஒரு முன்னோடி முயற்சிதான். இத்தகைய தொகுப்பு முயற்சிகள் பல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாம் விரும்புகிறோம். அப்போதுதான் ஈழத் தமிழரின் போர் இலக்கியம் மேலும் விரிவும் ஆழமும் பெறும். இத்தகைய தொகுப்பு முயற்சிகள் எதிர்காலச் சந்ததிக்கு எமது போராட்டத்துக்கான காரணங்கள், போராட்ட அவலங்கள், அணுகுமுறைகள், அதன் சரி பிழைகள் போன்றவற்றை அறிந்து கொள்ளவும், தெளிவைப்பெறவும் அதேவேளை ஒரு ஆவணமாகவும் அமையும் எனத்திடமாக நம்பலாம்.

**போரின் பின்னரான இலக்கியம்**

ஆயுதப் போர் ஓய்ந்து ஏறத்தாழ மூன்று வருடங்கள் ஆகின்றன. ஆனால் எதற்காகப் போர் நடைபெற்றதோ அதற்கான காரணங்கள் மட்டும் அப்படியே உள்ளன. அத்தோடு இந்தப்போர் புதிய காரணங்கள் பலவற்றையும் உருவாக்கியுள்ளது. நமது சமூகக் கட்டுமானங்கள் சிதறுண்டு போயுள்ளன. போர், சமூகத்தில் ஏற்படுத்திய வலிகள் ஆழமாகவே பதிந்துள்ளன. பெருவாரி உயிர்கள் காவுகொள்ளப்பட்டு விட்டன. பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகள் இழந்த பெற்றோர்கள் கணவனை இழந்த விதவைகள், வாழ்வாதாரங்களை இழந்து நிற்கும் பெருவாரியான மக்கள், உதவிக்கரம் வேண்டிநிற்கும் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள், கைகால்களை இழந்து ஊனமுற்றோர். வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு அந்த நினைவுகளை சுமந்து கலங்கி நிற்கும் பெண்கள், திருமணம் செய்ய ஆண்கள் கிடைக்காது தவிக்கும் பெண்கள், அகதி முகாம்களில் ஆதரவின்றித் தவிக்கும் அநாதைகள், மனோரீதியாகப் பாதிப்புற்றோர்கள், மனப்பிறழ்வு அடைந்தோர் என இவர்களையெல்லாம் மனதிலிருத்தி மீள்கட்டுமான இலக்கியங்களைப் படைக்க வேண்டிய தேவை - ஒரு சமூகப் பொறுப்பு இன்று படைப்பாளிகளுக்கு உள்ளது. போருக்குப் பின்னரான இலக்கியம் இந்தத் திசையிலேதான் நகர வேண்டும்.

படைப்பாளிகள் கவனத்திற்கு,

ஞானம் சஞ்சிகைக்குத் தமது ஆக்கங்களை அனுப்புவர்கள் அவற்றை கணினியில் தட்டச்சு செய்து மின்னஞ்சலில் அனுப்புவதுடன் அதன் பிரதியை தபாலிலும் அனுப்புதல் விரும்பத்தக்கது. பிரதியில் கைத்தொலைபேசி இலக்கத்தைத் தவறாது குறிப்பிடுதல் வேண்டும். - ஆசிரியர்

அட்டைப் பட அதிதி

# கலை, இலக்கிய, கலாசார, அரசியல் ஆய்வாளரும், எழுத்தாளரும்; விமர்சகருமான "திருமலை நவம்"



"திருமலை நவம்" என்று எழுத்துலகில் பிரகாசிப்பவர் திரு.சி.நவரெத்தினம் ஆவர். இவரின் தந்தை கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை; தாய் பொன்னு. யாழ்ப்பாணம் வல்வெட்டி என்னும் கிராமத்தில் 01.07.1948இல் அவதரித்தார். இவரை 2001ஆம் ஆண்டு என்னுடைய "எதிர்பார்ப்பு" என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவுக்கு நயவுரை நல்குவதற்காக தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் முதல் முறையாகச் சந்தித்தேன்.

இவர்தனது ஆரம்பக்கல்வியைவல்வெட்டி இந்துக் கலவன் பாடசாலையிலும் பின்னர் அமெரிக்க மிஷன் கல்லூரியிலும் மேற்கொண்டார். அமெரிக்க மிஷனில் கல்வி கற்கும் போது தனது பாடப் புத்தகத்திற்குள் கதைப் புத்தகத்தை வைத்து வாசித்து வந்ததாகக் குறிப்பிடுகின்றார். வாசிப்பில் உள்ள ஈடுபாட்டின் நிமித்தம் எழுதவேண்டுமென்ற ஆர்வமும் ஏற்பட்டது. இவருக்கு எழுத்தார்வத்தை ஏற்படுத்தியவர்களுள் மிக முக்கியமானவராக அச்சுவேலி செல்வராஜா (பட்டதாரி) என்னும் ஆசிரியர் விளங்குகிறார்.

காத்தவராயன், பூதத்தம்பி, அரிச்சந்திர புராணம், அல்லி அரிச்சுனா போன்ற நாடகங்கள் அயல் கிராமங்களில் நடிக்கப் பெற்றன. இந்நாடகங்களை இவர் தொடர்ந்து பார்த்ததன் விளைவாக கூத்துக்கலையில் ஈடுபாடு ஏற்படலாயிற்று. கூத்துக்கலையில் ஈடுபாட்டை வளர்த்துக் கொண்ட இவர் உன்னைப்போல ஒருவன் என்னும் நாடகத்தை எழுதித் தயாரித்து நடித்தும் வெளிப்படுத்தினார். இந்நிகழ்வு தரம் - 7இல் கல்வி கற்கும்போது நிகழ்ந்துள்ளது. யாழ் நகரிலிருந்து 1963ஆம் ஆண்டு திருகோணமலைக்கு வந்து தற்போதுவரை சுமார் 49 வருடங்களாக திருமலையையே நிரந்தர வதிவிடமாகக் கொண்டுள்ளார்.

திருகோணமலை இந்துக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியைத் தொடரலானார். தன்னை வளர்த்து ஆளாக்கிய மாமா வல்லிபுரம், மாமி முத்துப்பிள்ளை என்போரை என்றும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்து வருகின்றார். 1959இல் தமது உடன்பிறந்த இளைய ஆண் சகோதரர் திருகோணமலையிலுள்ள 'கிணறு' ஒன்றில் தவறிவிழுந்து இறந்து விட்ட துயரையும் பகிர்ந்து கொள்கின்றார். 1963 - 1973 வரையான பத்து (10) வருட காலப் பகுதியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் (G.C.E.A/L) வரை கல்வி கற்று கல்லூரியிலிருந்து வெளியேறியுள்ளார்.

கற்கும் காலப்பகுதியில் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டதன் விளைவாக 1967இல் இவரது முதல் படைப்பு வெளியீடாக வீரகேசரியின் சகோதரப் பத்திரிகையான ஜோதியில் "சுடர் விளக்கு" என்ற சிறுகதை வெளியானது. அக்காலத்தில் திருகோணமலை நண்பர்கள் வட்டத்தால் நடாத்தப் பட்ட ஆனந்தி, அல்லி, கோணநகர் தமிழணி இயக்கம் போன்ற கையெழுத்துப் பத்திரிகைகளில் எழுதியதோடு இந்நண்பர்களின் தொடர்பும் ஏற்பட்டது. இவற்றில் பல சிறுகதைகளை எழுதியுள்ளார்.

ஆரம்ப காலத்தில் கவிதைத் துறையில் ஈடுபாடு இருக்கவில்லை. கொழும்பிலிருந்து வெளிவந்த தினகரன், ராதா, செய்தி போன்ற இதழ்களில் இவரது அதிகமான கவிதைகள் வெளிவந்தன. எழுத்துத்துறையில் திருகோணமலை இந்துக் கல்லூரியில் படித்தபோது நவம் அவர்களுக்கு நாட்டத்தை ஏற்படுத்திய ஆசான்களாக செல்வரெத்தினம், பண்டிதர்

– செ.ஞானராசா

வைரமுத்து, பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, திருமதி கந்தையா இராசநாயகி, அதிபர் க.சிவபாலன், உடுப்பிட்டி பண்டிதர் வேலுப்பிள்ளை ஆகியோரை விசேடமாகக் குறிப்பிடுகின்றார்.

1966இல் குன்றக்குடி அடிகள் திருகோணமலைக்கு விசேட அதிதியாக வருகை தந்தபோது அந்நிகழ்வுக்கு திருமலை நவம் அவர்கள் தலைமை தாங்கி நிகழ்வை சிறப்புற நடாத்தியுள்ளார். 1969இல் திருகோணமலை 'ஈழநாடு' பத்திரிகை நிருபராகக் கடமையாற்றியுள்ளார்.

1970இல் நண்பர்களோடு சேர்ந்து "முன்னோடிகள்" என்ற கலை இலக்கிய விமர்சனக் குழுவை உருவாக்கினார். இலக்கியம் சம்பந்தமான மார்க்சிய சிந்தனையை வளர்த்து மார்க்சியம் சார்ந்த சிந்தனைகள் மீதும் அரசியல் மீதும் இவருக்கு நாட்டமும் ஆர்வமும் ஏற்படலாயிற்று. இதன் மூலம் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் நா.சண்முகநாதன், கரவை கந்தசாமி போன்றோரின் தொடர்பு ஏற்பட்டது. இவர்களின் தொடர்பு மூலம் மார்க்சிய சிந்தனை மேலும் வளரலாயிற்று.

1970இல் இவருக்கு கவிதை எழுத வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. இவரது கவிதைக்கு களமாக "தினகரன்" பத்திரிகை முக்கிய பங்காற்றியுள்ளது. இந்தியாவின் வானம்பாடிக் குழுவினரின் புதுக்கவிதை தசாப்தம் ஒன்று ஆரம்பமாகியபோது புதுக்கவிதை எழுத வேண்டுமென்ற நாட்டம் ஏற்பட்டமையால் இவர் நூற்றுக்கும் அதிகமான புதுக்கவிதைகளை எழுதி ஈழத்துப் பத்திரிகைகளிலும் இந்தியப் பத்திரிகையான "விடியல்" இலும் வெளிவரச் செய்துள்ளார்.

1976ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவனாக இருந்தபோது பேராதனை தமிழ்ச் சங்கத் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். அப்போது பேராதனைப் பல்கலைக்கழக பேராசான்களாக விளங்கிய சு.வித்தியா னந்தன், கலாநிதி தனஞ்செயராஜசிங்கம், பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.தில்லைநாதன், பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, பேராசிரியர் க.அருணாசலம், பேராசிரியர் துரை மனோகரன் ஆகியோருடன் இடதுசாரி சிந்தனையின் உச்ச நிலைப்பாடு சம்பந்தமான ஆர்வத்தை ஊட்டியவரான பேராசிரியர் இராமகிருஷ்ணன் என்பவரும் குறிப்பிடத்தக்கவர்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 50ஆவது ஆண்டு பொன்விழாவை பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நெறிப் படுத்தலில் இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழத்தினரையும் அழைப்பித்து மாபெரும் விழாவாக முன்னின்று நடாத்தி யுள்ளார்.

முதன்முதலில் "ஈழத்து நவீன மேடை நாடகங்கள்" பற்றிய தொகுப்பைச் செய்தவர்; 'திருமலை நவம்' அவர்களே என்பது பாராட்டத்தக்க அம்சமாகும். இக்கட்டுரைத் தொடர் 1974இல் "தினகரன்" பத்திரிகையில் பிரசுரமாகியது. தர்மு சிவராமுவின் "நட்சத்திர வாசிகள்" என்ற நாடகத்தை பேராதனைப் பல்கலைக்கழக மேடையில் மேடையேற்றினார். நவீன நாடகத்தில் பிரபல்யமாக விளங்கிய அ. தாசீசியஸ், நா. சுந்தரலிங்கம், க. சிவானந்தம், து.பாலேந்திரா போன்றவர்களோடு (புகழ் பூத்த நாடகவியலாளர்கள்) தனக்கு தொடர்பு ஏற்பட்டதாகவும்கூறுகின்றார். இதன்விளைவாக நாடகத்துறையிலும், விமர்சனத்துறையிலும் தீவிர ஈடுபாடு ஏற்படலாயிற்று.

இவர் 1982 பெப்ரவரி 15இல் பட்டதாரி ஆசிரியராக திருகோணமலை, ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் கடமை யேற்றுக் கொண்டார். பின்னர் 1992இல் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் அதிபராகக் கடமையேற்று 2008ஆம் ஆண்டு வரை பதினாறு (16) வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இக்காலப் பகுதியில் நாடகத்திற்கான அரங்கு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் தி/விவேகானந்தா கல்லூரியில் "கலைக்கூடம்" உருவாக்கியுமுள்ளார்.

இவரது ஆக்க இலக்கிய வெளியீடுகளுக்கு உலகளாவிய ரீதியில் பரிசுகளும் கிடைத்துள்ளன. அந்தவகையில் 1990இல் நோர்வே தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பட்ட நாடகப் பிரதியாக்கப் போட்டியில் இரண்டாம் பரிசும் 2010இல் அவுஸ்திரேலியா தமிழ்ச் சங்கம் நடாத்திய உலகளாவிய கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளார்.

இவரது கலைப்புலச் செயற்பாடுகள் ஒரு புறமிருக்க கல்விப் புலச் செயற்பாடுகளிலும் பல சாதனைகள் நிகழ்த்தியுள்ளமை அறியக்கிடக்கின்றது. தரம் ஒன்று தொடக்கம்

ஒன்பது வரை இருந்த தி/விவேகானந்தர் பாடசாலையை 1AB கல்லூரியாக தரமுயர தனது இடையறா முயற்சியால் காரண கர்த்தாவாக இருந்து செயற்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2002ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் தி/விவேகானந்தா கல்லூரியைச் சேர்ந்த விவேகானந்தன் - சேரலாதன் என்னும் மாணவன் 177 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அதேபோல் 1998இல் க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் சுதர்சன் இரவீந்திரகுமார் என்பவரும் 2004இல் க.பொ.த.(உயர்தர)ப் பரீட்சையில் எஸ்.கோகிலன் என்பவரும் திருகோணமலை மாவட்டத்தில் இக்கல்லூரியைச் சேர்ந்தவர்களே முதலாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

2003ஆம் ஆண்டு சிறந்த அதிபர்களுக்கான கனடாவுக்குரிய புலமைப் பரிசிலை தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி அதிபர் திரு.சி.நவரத்தினம் அவர்களுக்கு கிடைத்தது. 2004இல் நவோதய சிறந்த அதிபர்களுக்கான ஜனாதிபதி விருதும் பெற்றுக்கொண்டார். 2005இல் வடகிழக்கில் சிறந்த அதிபருக்கான விருது கிடைத்தது. தற்போது திருகோணமலை கலை, இலக்கிய ஒன்றியத் தலைவராக விளங்கும் திருமலை நவம் அவர்களால் அவர் எழுதிய 'திருகோணமலை, இலக்கிய வரலாறு' நூல் வெளியீடு .11.02.2012இல் தி/புனித சூசையப்பர் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வை வீரகேசரி வார வெளியீடு, பிரதம ஆசிரியர் திரு.சு.பிரபாகரன் தலைமை ஏற்று நடாத்தி சிறப்பித்துள்ளார். ஆய்வுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் ஆற்றினார். குமரன் புத்தக இல்ல உரிமையாளர் திரு.க.குமரன் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டார்.

நானூறு வருடகால திருமலைப் பிரதேச கலை, இலக்கிய வரலாற்றுப் பதிவு கொண்ட இந்நூல் வெளியீடு பற்றிய நாற்பது வருட தனது கனவை நனவாக்கியுள்ளார். தற்போது வீரகேசரி திருகோணமலை நகர் நிருபராகக் கடமையாற்றும் 'திருமலை நவம்' அவர்கள் 'திருகோணமலை மாவட்ட அரசியல் பிரதிநிதித்துவம்' ஒரு வரலாற்றுப் பார்வை பற்றி தொடர்கட்டுரையையும், ஏனைய விடயங்கள் பற்றிய கட்டுரைகளையும் வீரகேசரிப் பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வருகின்றார். இவரது பணி சிறக்க 'ஞானம்' சஞ்சிகையூடாக வாழ்த்திப் போற்றி மகிழ்கின்றோம்.

## தீக்கங்குகள்

பெருநிலக் காட்டினில்
மூண்ட தீக்கங்குகள்
எங்கும் வியாபிக்கின்றன:

எரிதழலின் மூச்சால்
காடுகள் எரிந்தன
களனிகள் கரிந்தன
மாடுகள் பொசுங்கின
தொழில் பாடுகள்
நலிந்தன.

நீண்ட வனவாச காலத்தில்,
பெண்கள் குளித்த தீயில்
கற்பின் இருப்பு தெரிகிறது.

இங்கோ,
வனவாசத்தின் பின்னதாக,
தீக்கங்குகள் சூழ்ந்தபடி
நம்குலப் பெண்கள்,
நாளொரு வண்ணம்
தங்களைப் பொசுக்கியவாறு...

பிஞ்சுகளைப் பறிகொடுத்த
தாய் மனதின் தீயும்,
வாழ்வற்ற அபலைகளின்,
வறுமைத் தீயும்,
பதியைத் தொலைத்த
பாவையர் நெஞ்சத் தீயும்,
ஆக்கிரமிப்பில் ஆட்பட்டோர்
அவலத் தீயும்,
உமியின்கீழ்த் தீயாகக்
கனன்றபடி:
சூழும் தீக்கங்குகளில்
பொய்மைகள் யாவும்
வெந்து நீறாகும்.

- வே.ஐ.வரதராஜன் -

# இன்றும் இன்னும்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

கணபதிப்பிள்ளையர், வீட்டுக்கு வந்து நான்கு நாட்களாகிவிட்டன. வந்தவுடன் ஏதோ ஓர் இதம். அதன்மேல் ஒரு கனம். மூச்சு முட்டுவதுபோல் ஓர் இறுக்கம் என்ற கலவையுள் திணறியவர் இப்போது பழைய சூழல், பழைய உறவுகள், நிகழ்வுகள் எல்லாம் நினைவில் எழ அதனுள் ஆழ்ந்து கிடக்கிறார். முக்கியமாக வள்ளிப்பிள்ளைதான் அருகிலேயே அமர்ந்து விடுகிறாள்.

இருந்த வரைக்கும் இருவரும் இந்த வீட்டிற்கு எப்போது வந்து சேர்வோம் என்ற எதிர்பார்ப்புடனேயே இருந்தவர்களல்லவா? உயிர் இந்த வீட்டிலேதான் போக வேண்டும் உடல் ஆலடிச்சுடலையிலே தான் வேகவேண்டும் என்றுதான் இருவரும் ஆசைப்பட்டார்கள்.

வள்ளிப்பிள்ளை சொந்த வீட்டில் மட்டுமல்ல எந்த வீட்டிலும் சாகக் கொடுத்து வைக்காமல், வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்து தாகத்திற்குத் தண்ணீர்கூட இல்லாமல் நடந்து சென்று கொண்டு இருந்தபோது வழியிலேயே போய்ச் சேர்ந்து விட்டாள்.

“வீதியிலை
சதுப்பு நிலத்திலை
புதைச்சுப் போட்டு
காடாத்துமில்லை,
எட்டுமில்லை,
அந்திரட்டியுமில்லை,
நான் மட்டும் இந்த
வீட்டை வந்து சேர்ந்திட்டன்.”

கணபதிப்பிள்ளையரின் நெஞ்சு வலித்தது.

வள்ளிப்பிள்ளையும் இப்ப இருந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாள்!

அவரிடமிருந்து பெருமூச்சொன்று வெளியேறியது.

கல்வியின் இலக்குகள், செய்யப்போகும் தொழில், வருங்கால வாழ்க்கைத்துணை, பிறக்கப்போகும் பிள்ளைகள், அவர்களின் வளர்ச்சி, அவர்களது வளமான வாழ்க்கை என்று இவை பற்றியெல்லாம் கற்பனை, ஓர் எதிர்பார்ப்பு இருப்பது போல வாழ்க்கையின் இறுதி பற்றியும் ஒவ்வொருவருக்கும் விருப்பங்கள் இருக்கத்தானே செய்கின்றன. பிள்ளைகள் அருகில் இருந்து கவனிக்க வேண்டும். அல்லது எவரிலும் தங்கி வாழாமல் இறந்து விட வேண்டும். மகன் கொள்ளி வைக்க வேண்டும் இப்படி எவ்வளவோ.

இடப்பெயர்வு காலத்தில் கண்ட மரணங்கள் கணபதிப்பிள்ளையினதும் வள்ளிப்பிள்ளையினதும் மனங்களில் இறைவனை நோக்கிய ஒரு வேண்டுதலை உருவாக்கின.



“வேறொருவரின் வீட்டில் இறுதிக் காலத்தில் அவர்களுக்கு இடைஞ்சலாக இருந்து, பலரின் விமரிசனங்களுக்கு ஆளாகி, சொந்த மண்ணிலேயே அகதியின் பிணம் என்ற பெயருடன் இறுதியாத்திரை போகாமல், தங்கள் ஊருக்குப் போய், தங்கள் வீட்டிலே சாவை வரவேற்று, தங்களூர்ச் சுடலையிலே சாம்பராக வேண்டும்” என்று அல்லும் பகலும் இறைவனை இறைஞ்சினர்.

நமது ஆசைகளெல்லாம் நடந்தேறி விடுவதில்லையே. வள்ளிப்பிள்ளை வழியோடு போய்விட்டாள். கணபதிப்பிள்ளை அனுபவிக்க வேண்டிய துன்பங்களனைத்தும் பட்டு இருபது வருடங்களின் பின் தன் ஊருக்கு தன் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டார்.

“ஏதோ நானாவது இந்த வீட்டிலை செத்து ஆலடிச்சுடலைக்குப் போகவேணும்.”

வீட்டினுள் காலடி எடுத்துவைத்தது முதல் தன் மரணச் சடங்கு பற்றிய கற்பனைகள் தான் அவருள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

தன் உழைப்பில் தன் விருப்பத்திற்கமைய கட்டிய இந்த வீட்டை அவர் தன் மகள் சிவாஞ்சலிக்குச்சீதனமாகக் கொடுத்த போதும் தனக்கும் வள்ளிப்பிள்ளைக்கும் அதில் சீவிய உரித்து வைத்திருந்தார். இன்று இந்த வீடு

அவன் அவரது கடைக் குட்டி
மாவீரனாகி துயிலுமில்லத்திலே
அவன் துயிலச் சென்று பலவருடங்கள்.
அவனுடைய நினைவு வரும்போது
அவனது கல்லறைக்குச் சென்றுவந்த
காலமொன்று இருந்தது. இப்போது
இல்லை மரணத்தின் பின்னும்
நிம்மதியாக இருக்க எங்களுக்குப்
பொசிப்பில்லை. கல்லறைகள் கிடந்த
இடமெல்லாம் கிளறிப் போட்டார்கள்.
உயிருடன் சண்டையிட்டாலும் அர்த்த
மிருக்கும். உடலை இல்லையில்லை
அதன் எச்சத்தை பாடாய்ப்படுத்தி
என்ன பயனோ?

உடைந்து மீண்டும் மருமகன் கோணேஸால் கட்டியெழுப்பப் பட்டாலும் அவருடைய மனம் அதைத் தன்னுடையதாக அதில் உரிமை கொண்டாடிக் கொள்கிறது. அதனால் இந்த வீட்டில் இருக்கும்போது ஒரு சுதந்திரத்தை அது அனுபவிக்கிறது. மற்ற வீடுகளில் அது அப்படி ஒட்டிக் கொள்ள இயலாது தவித்தது அவருக்குத்தான் தெரிந்த உண்மை.

கத்தியும் கோடரியும் மாறிமாறி ஒலி எழுப்பி, மருமகன் கோணேஸ் பக்கத்துக் காணித்துண்டைத் துப்புரவாக்குகிறான்என்று கூறிக்கொண்டிருந்தன. அவரது கண்பார்வை அவ்வளவாகத் தெளிவில்லைத்தான். ஆனாலும் அவனுடைய செயற்பாடுகளை இங்கிருந்தே ஓரளவு பார்க்கக் கூடியதாக இருந்தது. இப்பிலிப்பில், மஞ்சமுன்னா என்று வளர்ந்து பற்றையாகக் கிடந்தவற்றை அவன் வெட்டி விழுத்திக் கொண்டிருந்தான். பின்பு நேற்றோ அதற்கு முன்னரோ இவ்வாறு வெட்டிப் போட்டிருந்தவற்றை இழுத்து வந்து வெட்டுவதற்கு அதிகம் கஷ்டமான பற்றைகளினருகே போட்டான்.

கணபதிப்பிள்ளை, வீட்டுக்கருகே குளிர்மையாக நிழல் தருமென்று மாங் கன்றுகள் வைத்து வளர்த்தார். அவர்கள் இடம்பெயரும்போது அவை காய்க்கத் தொடங்கி இரண்டு மூன்று வருடங் களிருக்கும். செம்பாட்டான், அம்பலவி, கிளிச்சொண்டன் என்று வெவ்வேறு வகை மாங்கன்றுகள். கோணேஸ் துப்பரவு செய்யுமிடத்திலேதான் அவைகள் நின்றன. அவரது கண்கள் அவற்றைத் தேடின. ஒன்றைக் கூடக் காணவில்லை.

"அட பாவிகளே!"

இழுத்து வந்து போட்ட பற்றைகளின் மேல் கோணேஸ் பற்றவைத்த நெருப்பு சுவாலித்தெரிந்து அருகில் கிடந்த வற்றையெல்லாம் பொசுக்கியது.

இதற்குமுன் எரித்த இடத்து மரங்களை வெட்டிச் சாய்ப்பதற்கு கோணேஸ் ஆரம்பித் தான்.

"சிவனேசன் இருந்திருந்தால் உதவி யாயிருந்திருக்கும்"

அவனது நினைவும் கணபதிப்பிள்ளை யருள் எழுகிறது. அவன் அவரது கடைக் குட்டி மாவீரனாகி துயிலுமில்லத்திலே அவன் துயிலச் சென்று பலவருடங்கள். அவனுடைய நினைவு வரும்போது அவனது கல்லறைக்குச் சென்றுவந்த காலமொன்று இருந்தது. இப்போது இல்லை மரணத்தின் பின்னும் நிம்மதியாக இருக்க எங்களுக்குப் பொசிப்பில்லை. கல்லறைகள் கிடந்த இடமெல்லாம் கிளறிப் போட்டார்கள். உயிருடன் சண்டையிட்டாலும் அர்த்த மிருக்கும். உடலை இல்லையில்லை அதன் எச்சத்தை பாடாய்ப்படுத்தி என்ன பயனோ?

வெயில் சாய்ந்து மாலையாகவே கணபதிப்பிள்ளையரின் கால்கள் அந்த இடத்தைச் சுற்றிவருவதற்குப் பரபரத்தன. அன்றிருந்தவற்றின் எச்ச சொச்சந் தேடும் முனைப்பு, அவர் முற்றத்துக்கு இறங்கினார்.

முன்படிக்கட்டில் அமர்ந்திருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்த கோணேஸிற்கு அவரது நோக்கம் பிடிபட்டது.

"மாமா, இது கொத்திப் பயிர்செய்து பண்பட்டுக் கிடந்த அந்தக்காலக் காணி யில்ல. காடுபத்திக் கிடந்த இடத்தைத் திருத் திறம். அடியோடை கிளறி எடுக்காமல் வெட்டுக்கட்டையள் நிறையக் கிடக்கு. காலைக் குத்திப்போடும். அல்லது இடறி விழுத்திப்போடும். பாம்பு பூச்சியளும் வரும். அங்காலை போய்த் திரியாதையுங்கோ."

கோணேஸ் தடுப்பது சரிதான் என்று அறிவுபூர்வமாக விளங்கிக் கொண்டாலும் அவரது மனம் முரண்டு கொண்டு நின்றது.

மாலைத் தேநீருடன் சிறிது அடங்கி யிருந்த இருமலும் குமுறிக் குமுறி வரவே அவர்

திரும்பிச் சென்று சாய்மனைக் கதிரையில் அமர்கிறார்.

இரவு முழுவதும் இருமல் அவரை உறங்கவிட மறுக்கிறது. இடையிடையே சிவாஞ்சலி எழுந்து வந்து பார்த்தாள். அவர் படும் அவஸ்தையைப் பார்க்கப் பொறுக்காமல் நடுச்சாமத்தில் மின்சாரமில்லாத இடத்திலே கைவிளக்கைப் பற்ற வைத்து, விறகடுப்பை எரித்து நீர் கொதிக்க வைத்து, சுடச்சுடக் கோப்பி கொடுத்தாள் சிவாஞ்சலி. இது அவளுக்குப் பழகிவிட்ட வாழ்க்கைதான்.

கொத்தமல்லி, சுக்குப்போட்டு இடித்த கோப்பி கணபதிப்பிள்ளையருக்கு இதமாக இருந்தது.

காலையிலே அப்புவைப் பார்க்கவந்த அவரது இரண்டாவது மகன் சிவானந்தனிடம் அவர் இருமலுடன் மல்லாடுவதை சிவாஞ்சலி கூறவே அவன் அவரை முச்சக்கரவண்டியில் கீரிமலை சிவன்கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் என அவர் விரும்பிய கோவில்களுக்கு அழைத்துச் சென்று வைத்தியசாலையில் மருந்தும் வாங்கி வந்தான்.

மாலையில் தேநீர் தரவந்த மகளிடம் “பிள்ளை, இந்தக் காடு பத்தின ஊரையும் உடைஞ்ச வீடுகளையும் பார்த்து எவ்வளவு கவலைப்பட்டனான்தெரியுமே! இண்டைக்கு இந்தக் கோயில்களைப் பார்த்த பிறகுதான் ஒரு ஆறுதல் வந்திருக்கு. அதுகளை மாதிரி இந்த ஊரும் திருந்தும்” என்று அவர் தன் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டார்.

“உவன் கோணேஸ் பயந்தவன், என்ரை பெடியன் என்னை எல்லா இடமும் கூட்டிக்கொண்டு போனவன் தானே.

தன் வீட்டைச் சுற்றியுள்ள இடங்களை யாவது பார்க்க வேண்டுமென்ற ஆவல் அகல மறுத்து கோணேசில் குறை கண்டது. அந்திப்பொழுது வீட்டில் எல்லோரும் ஆளுக்கொரு பக்கம் வேலைகளில் கருத்தாயிருந்தனர். கணபதிப்பிள்ளையின் மனத்தில் ஆவலும் அசாத்தியத் துணிச்சலும் மெல்லமெல்ல அதிகரிக்கத் தொடங்கின.

“பிள்ளை, எடி பிள்ளை, தம்பி, தம்பி கோணேஸ்...”

கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த சிவாஞ்சலிக்கு அப்புவின் குரல் பதற்றத்தைக் கொடுத்தது. வாளியை அப்படியே வைத்து விட்டு ஓடிச் சென்றாள்.

கணபதிப்பிள்ளையர் கீழே விழுந்து கிடந்தார். கோணேசிற்கும் அவரது குரல் கேட்டிருக்க வேண்டும். ஓடி வந்து கொண்டிருந்தான்.

“என்னப்பு என்ன நடந்தது?”

“விழுந்து போனன் பிள்ளை.”

அவர் பரிதாபமாகக் கூறினார்.

அவரால் எழுந்திருக்கவும் இயல வில்லை. அவளால் தூக்கவும் முடிய வில்லை.

“என்ன மாமா?”

கோணேஸ் வந்த வேகத்தில் விசாரித்தான்.

“காணிப்பக்கம் போய்ப் பார்ப்பமெண்டு வந்தன். கடடை தடக்கிப் போட்டுது.”

“நேற்றைக்கே போகவேண்டாமெண்டு படிச்சுப் படிச்சுச் சொன்னனான்” கோணேஸின் கைகள் பதறின.

“உதவி ஒத்தாசைக்குக் கூப்பிட பக்கத்து வீட்டிலும் ஆக்களில்லை. பாலச்சந்திரன் வீட்டுக்குக் கூப்பிட்டால் கேட்காது. ஓடிப் போய் அவனை ஒருக்கால் கூட்டிவா. பிள்ளைகளும் ரியூசனுக்குப் போட்டுதுகள்.”

கோணேஸ் சிவாஞ்சலியிடம் கூறிக் கொண்டே அவரைத் தூக்கினான்.

“கடவுளே, பிள்ளையாரே, ஐயோ, தாங்கேல்லையே” கொண்டு சென்று கட்டிலில் படுக்கவைப்பதற்கிடையில் அவர் கதறித் துடிக்கத் தொடங்கினார். அவருடைய வலதுகால் பாதம் மளமளவென வீங்கிக் கொண்டு வந்தது.

பாலச்சந்திரன் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்ட சிவாஞ்சலியின்கால்கள் அப்புவின் கதறலைக் கேட்டு தயங்கி நின்றன.

“நான் அவரைப் பார்க்கிறன். ஓடிப்போய் பாலச்சந்திரனைக்கூட்டிக் கொண்டு வா.”

கோணேஸ் அவசரப்படுத்தினான்.

சிவாஞ்சலி ஓட்டமும் நடையுமாகச் சென்று பாலச்சந்திரனுடன் வந்து சேர்ந்தாள்.

“பார் பாலன், எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. பொழுது பட்டுட்டுது. இவரை இப்பிடியே இரவு முழுக்க வைச்சிருக்கவும் ஏலாது. ஆஸ்பத்திரி டொக்ரர் எண்டு ஒண்டும் கிட்ட இல்லை. மோட்டர் சைக்கிளிலையும் இவரைக் கொண்டு போகேலாது. இங்கை ஒரு தரிட்டையும் காருமில்லை. ஆட்டோகூட இல்லை.”

கோணேஸ் மனதைக் கவிழ்த்துக் கொட்டினான்.

"சந்திரன்ரை ஆட்டோவைக் கொண்டு வரச்சொல்லி போன் பண்ணுவம் அண்ணை."

பாலச்சந்திரனின் ஆலோசனையைக் கேட்டதும் சிவாஞ்சலி ஓடிச் சென்று செல்லிடத் தொலைபேசியை எடுத்து வந்தான். அது உயிரை விட்டிருந்தது. உயிரூட்ட அந்தக் கிராமத்தில் மின்சாரமில்லை. மின்சார வசதி கிட்டிய அயல் கிராம உறவினர் வீடுகளுக்குக் கொண்டு சென்று மின்வலுவூட்டி வருவார்கள்.

"சார்ஜ் பண்ண மறந்து போனன்."

தன் மறதியையும் மின்சாரம் தருவதாக வாக்களித்து இதுவரை தராதவர்களையும் மனதினுள் வைத்தீர்த்தாள், சிவாஞ்சலி. அப்புவின் முனகல் அவளுடைய கோபத்தையும் வேதனையையும் கிளறிப் புரட்டியது.

பாலச்சந்திரன் தன் வீட்டிற்கு விரைந்தான்.

"நல்ல வேளை. எங்கையோ ஹையர் போட்டு இப்பதான் சந்திரன் வந்தவனாம். உடனை வாறானாம்."

பாலச்சந்திரன் தனது செல்லிடத் தொலைபேசி மூலம் கதைத்ததை வந்து கூற சற்று ஆறுதலாக இருந்தது.

"மாமாவை ஆஸ்பத்திரியிலை நிக்கச் சொல்லுவினம். அங்கை இருக்கத் தேவையானதுகளை எடுத்து அடுக்குப் படுத்தும். ஆட்டோ வரப்போகுது."

கோணேஸ் கூறவும் சிவாஞ்சலி துரித கதியில் இயங்கினாள்.

"நானும் வரட்டோ?"

"அங்கை ஆம்பிளையள் வார்டிலை நீர் நிக்கேலாது. நான் போறன் தானே."

சிவாஞ்சலியின் வினாவிற்கு கோணேஸ் மறுத்துக் கூறிக்கொண்டிருக்கும் போதே, தனியார் கல்வி நிலையத்திலிருந்து அப்போதுதான் வந்து சேர்ந்த நிரஞ்சன், "நான் வாறனப்பா. நான் போய் தாத்தா வோடை நிக்கிறனம்மா" என்று இடைப் புகுந்தான்.

அன்று இரவுப் பொழுதில் வைத்திய சாலைக்குச் சென்ற கணபதிப்பிள்ளையர் இருவாரங்களிருந்து, உடல்நிலை மோசமாகி உயிர் பிரிய வெற்றுடலாகவே வீடு வந்து சேர்ந்தார்.

"அப்பு, என்ரை வீட்டை போகவேணும்" என்ரை வீட்டை போகவேணும். எண்டு ஆசைப்பட்டீங்களே. வந்து ஒரு கிழமை கூட வீட்டிலை இருந்து சந்தோஷப்படக் கொடுத்து வைக்கேல்லையே."

பறையொலியையும் விஞ்சி ஒலித்த சிவாஞ்சலியின் கதறல் எல்லோரையும் கண்கலங்க வைத்தது.

அங்கிருந்த பலரும் தங்களது மூத்தோர்களின் இதே ஆசை நிராசையாகிப் போனதையும் நினைத்துக் கொண்டனர்.

"ஏதோ அப்புவின்ரை ஆசைப்படி அவற்ரை செத்த வீடு அவற்ரை வீட்டிலையே நடக்குது,"

தங்கையின் புலம்பலைக் கேட்டு எழுந்த வேதனையை சாந்தப்படுத்த கணபதிப் பிள்ளையரின் மூத்த மகன் சிவபாதம் கூறினான்.

"ஆனால் அவற்ரை ஆசை முழுமையாக நிறைவேறுமோ தெரியேல்லை."

கோணேஸ் முணுமுணுத்தான்.

"என்ன கோணேஸ் சொல்லுறாய்?"

"கிரிகை செய்ய ஐயா வந்திட்டார். போன சிவானந்தன் மச்சானை இன்னும் காணேல்லை."

சிவபாதத்தின் கேள்விக்கு இப்படியாக கோணேஸின் பதில் வந்தது.

"கிரிகைச் சாமான்கள் வாங்கப் போனவனோ?"

"இல்லை அத்தான். தேவையானதெல்லாம் சந்திரன் வாங்கிக் கொண்டந்திட்டான். மச்சான் சுடலைக்குப் போற ஒழுங்குகள் செய்யப் போனவர்."

"இப்ப அந்தியகாலச் சேவையிட்டைச் சொன்னால் சுடலைக்குக் கொண்டுபோக வாகனம் வருந்தானே?"

"ஓ, அதுவும் ஒழுங்கு பண்ணி வாகனம் வந்திட்டுது. ஆனால் சுடலை அவையின்ரை பாதுகாப்புப் பிரதேசத்திலையெல்லே இருக்கு. போய் எரிக்க அனுமதி வேணுமெல்லே? நாங்கள் மீளக் குடியமர்ந்த பிறகு இதுதான் முதலாவது செத்த வீடு. அப்பு எங்கடை சுடலையிலை தன்னை எரிக்க வேணுமெண்டு சொல்லிக் கொண்டிருந்தவர். அவரின்ரை ஆசையை எப்பிடியும் நிறைவேற்றவேணும். அ... அந்தா... மச்சான் வாறார். என்னவாம் மச்சான்?"

சிவானந்தனின் உயிரும் பிரியப் போகிறதோ என்று நினைக்கவைக்கும் தோற்றத்தில் அவன் வருவதைப் பார்க்கும் போதே கோணேஸிடம் எஞ்சியிருந்த நம்பிக்கை வழுவி விழுகிறது.

"அவை உருப்படியாய் ஒரு பதிலும் சொல்லுகினமில்லை, அங்கை போ. இங்கை

போ. பெரியவர் வரவேணும் எண்டு ஏதேதோ சொல்லி இழுத்தடிக்கிறாங்கள்."

அவனது குரலில் கோபமும் வெறுப்பும் ததும்பின.

"அப்ப என்ன செய்வம் மச்சான்?"

"பாலச்சந்திரன் ஏதோ விதமாய் சுடலைக்குப் போய் ஒரு இடத்திலை கிடந்த மரஞ்செடியளை வெட்டி, அந்த இடத்திலை எரிக்கக் கூடியதாய் செய்து, வெட்டின மரங்களை எரிக்கிறத்துக்கு விறகாக்கியும் வைச்சிட்டு வந்திருக்கிறான்."

"அவன் சுழியன்"

சிவபாதம் மெச்சினான்.

"அவன் உள்ளுக்குப் போக அனுமதிச்ச வனிட்டையே போய் ஒரு மூண்டு பேர் சவத்தைக் கொண்டுபோய் எரிக்க அனுமதி கேட்டு ஒழுங்கு செய்யிறன் எண்டான். கிரிகைக்கு நேரமாகுது எண்டு என்னைப் போகச் சொன்னான். நானும் நேரம் போகுதெண்டு வந்திட்டன். நானும் அண்ணையும் பாலச்சந்திரனும் மட்டுந் தான் சுடலைக்குப் போறதெண்டு திட்டம். இயலுமெண்டால் உன்னையும் சந்திரனை யும் கூட்டிக்கொண்டு போவம்."

கோணேஸிற்கு அவ்வளவும் நடந்து முடிந்தாலே போதும் என்றிருந்தது.

சிவபாதம் இதைக் கேட்டதும் அதிர்ந்து போனான். மனதில் கருக்கொண்டு திரண்ட திருப்தி கலைந்து சிதறுண்டது. கனத்த மனதுடன் இரு பிள்ளைகளும் இறுதிக் கிரியைகளில் ஈடுபட்டனர்.

செய்தி வந்திருந்தவர்களிடையே மெல்லப் பரவியது.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப் பிராயம், வாதப்பிரதி வாதங்கள்.

சிவபாதத்துக்கோ சிவானந்தனுக்கோ செய்யும் கிரியைகளில் மனம் என்றில்லை, 'சுடலைக்குப் போக முடியுமா?' என்ற தவிப்புத்தான். மேலெழுந்து கொண்டி ருந்தது.

வேறு சுடலைக்குப் போகுமாறு கோணேஸிடம் வந்து சிலர் ஆலோசனை கூறினார்.

"அப்புவின்ரை ஆசையை நிறைவேற்று றதுதான் எங்கடை கடமை"

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என்று குடும்பமே அந்த முடிவில் உறுதியாக நின்றனர்.

சுடலைக்குப் போக முடியாதென்பதால் வீட்டிலேயே ஆண்களும் வாய்க்கரிசி போட்டு கடமையை நிறைவேற்றினர்.

அப்புவின் உடல் இறுதியாத்திரைக்குத் தயாராக வாகனத்தில் வைக்கப்பட்டது.

"செல்லடிச்சுக் குண்டடிச்சு உருக் குலைஞ்சு
செத்தவனை.
சென்ற வழியிலையே விழுந்து செத்தவனை.
செத்துப் புதைச்சதையும் சிதைச்சார்.
இன்டைக்கு சீராய் எரிய சிதைதேடுறாயோ
அப்பு நீ."

உறவுப் பெண்கள் அந்த வாகனத்தைச் சுற்றி மாரடித்து அழும்போது செல்லம்மா அக்காவின் ஒப்பு ஊரையே அழவைத்தது.

"பாலச்சந்திரனை இன்னும் காணேல்லை."

கோணேஸ் வாய்விட்டுக் கூறினாலும் எல்லோருள்ளும் அந்தத் தேடல் தலை நீட்டத் தவறவில்லை.

'நாங்கள் வருவமெண்டு பார்த்துக் கொண்டு நிற்கிறானோ என்னவோ'

இது சிவபாதம்.

கோணேஸின் மனம் 'அப்படியிருக்காது' என்று அறுதியிட்டுக் கூறியது.

இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது.

பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லைக் கோடு அனைவரையும் நிறுத்தியது.

மேளகாரர், தேவாரம் பாடிவந்தவர்கள் கூட வந்த உறவுகள் அனைவரும் நின்றுவிட சிவபாதம், சிவானந்தன் சகிதம் பிரேத வாகனம் முன்னே நகர்ந்தது. பாலச்சந்திரன் அவசர அவசரமாக வந்தான்.

"அவை போக விடேலாது எண்டு சொல்லுகினம்."

வாகனம் நின்றது.

"நான் கதைக்கப் பாக்கிறன்" கூறியவாறு சிவபாதம் சென்றான்.

"பெரியவர் இல்லை. அவர்தான் அனுமதிகொடுக்க வேண்டும்." என்ற பதில்தான் அவனுக்கும்.

"என்ன செய்யலாம்?"

"வரத்தானே வேணும். வருமட்டும் நிண்டு பார்ப்பம்."

பிரேத வாகனத்தின் முன்னே சிவபாதம் அமர்ந்தான். சிவானந்தனும் அருகே அமர்ந்துகொண்டான்.

எல்லையுடன் நின்றவர்களிம் பாலச் சந்திரன் போய் விவரத்தைக் கூறினான்.

அவர்கள் அமர்ந்து தேவாரம் பாட ஆரம்பித்தனர். பறைமேளமும் சேர்ந்து ஒலிக்கத் தொடங்கியது.

# போர்க்களத்தின் பரிசு

போர்க்களத்தின் பரிசு
சாவழைப்பைக் கொண்டு வருகிறது எப்போதும்
எல்லா வீதிகளிலும்
எல்லா வீடுகளிலும்

"யாரும் வீரரில்லை
சாவுக்காகக் காத்திருக்கும் வாழ்வின் முன்னே"
என்று நான் சொன்னேன்

"வீரனுக்கு வாழ்வுமில்லை
போதையைத்தவிர"
என்று யாரோ சொன்னார்கள்

தினமும் பெருகியபடியிருக்கும் சாவுகள்
யுத்தத்தின் நெடியை வீசுகின்றன குரோதமாய்.

யுத்தத்தின் அழைப்பை
நிராகரித்து வெளியேறுகிறது ஒவ்வொரு சாவும்.

மரணத்தின் இறுதிப் பெருமூச்சில்
செத்தவரின் குரல் பதறிக் கொண்டிருக்கிறது.

இந்தச் சாவுகளின் முடிவிலி நிலையை எண்ணி.

இன்றும் மயானத்திலிருந்து திரும்பியவுடன்
இன்னொரு சாவுச் செய்தி வந்து அழைக்கிறது.
"மறுபடியும் மயானத்துக்கு வருக" என்று.

சாவு களை கட்டிய மயானத்தில்
ஊரின் வெறிச்சோடிய முகத்தைக் கண்டேன்
போரை வெறுத்தவனும்
போருக்குப் பலியானான்

அவனையும் வீரர்களாக்கினார்கள்

பலி மிகுந்த நாட்களில்
மரணத்தின் கூவலை
எடுத்துவரும் "பத்திரிகை"யில்
தங்களின் முகங்களை கண்டதிர்கிறார்கள்
ஒவ்வொருவரும்

வீதியில், எங்கே போவதென்று தெரியாமல்
தயங்கி நிற்பவரை
அழைத்துக் கொண்டு போகிறது சவ ஊர்வலம்.

மறுபடியும் மறுபடியும் மயானத்துக்கு வரும்
இந்த நாளில்
இதயத் துடிப்பொலியின் எண்ணிக்கை
சராசரியிலில்லை.

கருணாகரன்

# புலப்பட்டும் புலப்படாமலும் விரிந்து வருகின்ற போர்வெளிகளில் பயணிக்கும் ஈழக்கூத்தர்

சி. ஜெயசங்கர்



நாடகமும் அரங்கியலும் பாடநெறியாக அறிமுகமாகிய 1980களில் எழுந்த கேள்விகள் முக்கிய கவனத்திற்குரியன. "நாடகம் படிக்கிறதா?" "நாடகந்தான் யாரும் செய்யலாமே?" போன்ற கேள்விகள் எழுவதற்கான காரணங்கள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவை. ஏனெனில் எவராலும் கையாளப்படக் கூடிய கலையாகவே நாடக அரங்கு இருந்து வருகிறது. இது மிகவும் சாதகமான ஒரு விடயம். இதுவே நாடக அரங்கை "மக்கள் கலை" என அழைப்பதற்கான காரணமாகவும் இருந்து வருகின்றது. ஆனால் இங்கு கற்கைகள் எதுவும் நிகழவில்லை என்பதல்ல அர்த்தம். அந்த கற்கை முறைகள் அல்லது அறிதல் முறைகள் நாமறிந்த நவீன கற்கை முறைகளில் இருந்து வித்தியாசமானவை என்பதுதான் உண்மை.

காலனித்துவம் காரணமாக ஏற்படுத்தப் பட்ட நவீனமயமாக்கம் அறிமுகப் படுத்திய நவீன அறிவானது, கற்றல் என்பது பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் நிகழ்வதே அதிகாரபூர்வமாகவும், சிந்தனை ரீதியாகவும் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த ஏற்பாடு உரையாடலுக்குக் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமானது. அப்பொழுதுதான் நாடக அரங்கு ஏற்கனவே வெவ்வேறுபட்ட அறிதல் அல்லது கற்றல் முறைமைகளுக்கு ஊடாக இயங்கி வருவது பற்றிய புரிதலுக்கு வாய்ப்பு ஏற்படும். இந்தப் புரிதல் காலனித்துவ நீக்கம்பெற்ற சிந்தனை உருவாக்கங்களுக்கும், செயற்பாட்டு முன்னெடுப்புகளுக்கும் அடிப்படையானவை.

ஏனெனில் பாரம்பரிய அரங்குகளில் பயிலப்படுவதற்காகவகுக்கப்பட்ட முறைமைகள் இருந்து வருகின்றன. இசை நாடகங்களில் பயிலப்படுவதற்கான முறைமைகள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே சமூக நாடகங்கள் உள்ளிட்ட பல்வேறு நாடகச் செயற்பாடுகளும் முறைமைகளுக்கு உட்பட்டவையாகவே இயங்கி வருகின்றன. இந்தமுறைமைகள்அவர்களது செயற்பாட்டுத் தேவைக்கான அறிவையும், திறனையும் வழங்குவனவாக இருக்கின்றன.

நவீன அறிவுப்பரப்பில் நாடகம் பாடநெறியாக அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் "நாடகம் படிக்கிறதா?", "அதுதான் யாரும் செய்யலாமே?", "நாடகத்துக்கென்ன படிப்பு வேண்டிக் கிடக்கு?" என்றெழுந்த கேள்விகளில் ஆச்சரியமும், ஏளனமும் கலந்திருந்தாலும் அதனுள் ஒளிந்திருந்த உண்மை பேசப்படாமலேயே போயிற்று. இந்தக் கேள்வி உள்ளூரில் ஆடப்பட்ட நாடகத்துக்கு மட்டுமல்ல. உள்ளூர் வைத்தியம் உள்ளிட்ட பல்வேறு நெறிகள் சார்ந்தும் எழுந்திருக்க வேண்டியது. ஏனெனில் இவை காலனித்துவ எதிர்ப்பு மற்றும் காலனித்துவ நீக்கம் என்பவற்றுடன் சார்ந்த கேள்விகளே அன்றி நாடகத்திற்கு எதற்குப் படிப்பு என்ற மேலோட்டமான அல்லது வெளிவாரியான அர்த்தப்படுத்தலுடன் நின்று விடுவதல்ல.

நாடகம், நவீன நாடகமாக வரன்முறைக்கு உரியதாக "நாடகமென்றால் இதுதான்", அல்லது "இதுதான் நாடகம்" என அறிமுகம் பெற்றபொழுது ஊர்களில் நாடகமாடிய

பலர் பயந்தும், வெட்கியும் கைவிட்டதாகவும் கதைகள் உண்டு. "நவீன நாடகங்கள் என்று சொல்லி ஊரில உள்ளவங்கள நாடகம் போடாம பண்ணினதுதான் செய்தவேலை" போன்ற கூற்றுகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மைகள், அதிகாரத்தின் தொழிற்பாடு என்பன ஆராயப்பட வேண்டியவை.

ஏனெனில் நவீனமயமாக்கம் கொண்டு வந்த அறிவுமுறை விஞ்ஞான பூர்வமானதெனவும், முறைமைகளுக்கு உரியதாகவும் அங்கீகாரம் பெற்றுக்கொண்டதாகவும், ஏனையவை விஞ்ஞான பூர்வமற்றதெனவும், முறைமைகளுக்கு உள்ளாகாதவை எனவும் முறைசாராதவை எனவும் நிராகரிக்கப்படும் பார்வையும், மனப்பாங்கும் கட்டிவளர்க்கப்படுவதாக இருக்கிறது.

இந்தப் பின்னணியில் நவீன அறிவுமுறைக் குள்ளால் படிப்பதுதான் படிப்பு என அங்கீகாரமும் ஆதிக்கம் பெற்றிருந்த நிலையில்தான் "நாடகம் படிக்கிறதோ?!" என்ற ஆச்சரியக் கேள்வியும், ஏளனக் கேள்வியும் எழுகிறது. ஆச்சரியத்துக்குப் பின்னால் இருப்பது ஏனையவை முறைமைகள் அற்றவையா? என்ற வினா காலனித்துவம் மீதான எதிர்க்குரலாகவும் எழுவது கவனத்திற்குரியது. இதற்குப் பின்னால் இம்முறைமைகள் காலனித்துவத்துள் பூரண சரணாகதியாகவும் இருக்கும் வித்தியாசம் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியது.

ஈழத்தமிழர்தம் அரங்கு, நவீன அரங்க முறைகளைக் கற்றவர்களால் மட்டும் முன்னெடுக்கப் படுவதாக இல்லை. நவீன அறிவுமுறையின் அதிகாரம் காரணமாக அரங்கியல் அறிஞர்களாக, ஆய்வாளர்களாக அவர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்கள். இதன்காரணமாக அவர்கள் சார்ந்த விடயங்களே பேசும் பொருளாகியும் இருக்கின்றது. இப்படித்தான் நாடக அரங்கு இருக்க வேண்டும் என்ற நவீன சிந்தனைக்கு மாற்றாக எப்படியெல்லாம் நாடக அரங்கு இருக்கிறது, இயங்குகிறது என்று பார்க்க வேண்டிய புதிய சிந்தனைக்கும் பார்வைக்கும் உரியதாக அரங்கச் சூழல் வளர்ச்சி கொள்கிறது.

அரங்கச் செயற்பாடுகள் சமூகத்தின் பல தளங்களிலும் பல்வேறு நோக்கங்களுடன் இடம்பெற்று வருகின்றன. இவையும் மக்களின் பங்கேற்புடனும், அவர்களது சமூக நோக்குகளுடனும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை உரையாடல்களுக்கும், அடுத்தகட்ட வளர்ச்சிக்கும் முன்னெடுக்கப் படவேண்டியவை. ஆயினும் இவையெல்லாம் சேர்ந்துதான் சமூகங்களின் நிலைகளாகவும், நிலைப்பாடுகளாகவும் இருக்க முடியுமென்ற சிந்தனையின் வருகை "படிக்க என்ன இருக்கு" என்று கேட்கப்படும் அரங்கில் படிப்பதற்கு இருக்கும் பல்வகைப் பரிமாணங்களையும் புரிய வைப்பதாக இருக்கும்.

வாழ்வின் இடர்களும், இழப்புக்களும், அழுத்தங்களும், துயர்களும் மனிதர்களை ஏதோவொரு வகையில் இணைவிற்கும், இயக்கத்திற்கும் இட்டுச்செல்வதாக இருக்கும். இதன் காரணமாக எந்தவகையிலான அரங்க வெளிப்பாட்டு முறைகளின் கூறுகள் கையாளப்படக் கூடியதான ஆற்றல்கள், அனுபவங்கள் இருந்தனவோ அந்தவகையில் அரங்க முன்னெடுப்புக்கள் நிகழ்ந்து வருகின்றன.

இவ்வாறாக நவீன அரங்கே அரங்காம் என்றும் அது படித்தவர்களதும், படித்தவர்களுக்கு உரியதும் என்றும் வகுக்கப்பட்டு, கூத்து உள்ளிட்ட ஏனையவை எல்லாம் படிப்பறிவற்றவர்களது என விளங்க வைக்கப்பட்டு நவீன அரங்கு தனது சிறகுகளை விரிக்கத் தொடங்கிய பொழுது அது போர்ச்சூழலை எதிர்கொள்ளத் தொடங்கியது. சூழலின் இயல்புகள் மாற்றமடையத் தொடங்கின. வெளிப்படையான கூடல்கள், உரையாடல்கள் அற்றுப்போகத் தொடங்கின. இத்தகைய உரையாடல்களுக்குக் களமான நாடக அரங்கின் இயக்கம் குன்றத் தொடங்கிற்று. இது பாரம்பரிய, நவீன அரங்குகளுக்கும் பொருந்துவதைக் காணமுடியும்.

ஆயினும் மனிதர்கள் இயங்காமலிருக்க முடியாதவர்கள். அரங்கு மெல்ல முளை கொள்ளத் தொடங்கியது. சமூகத் தேவைகளும், நெருக்குவாரங்களும் நாடகத்தின் தேவையை வற்புறுத்துவதாக அமைந்தன. நாடகங்கள் பார்க்கப்படுவது என்பதற்கு மேலாக பங்குகொள்வதற்கும் பகிர்வதற்கும் கொண்டாடுவதற்குமுரிய களங்களாயின. இது வாழும் சூழலுக்குள்ளும், சூழலுக்கு வெளியேயும் வழிமுறைகளைத் தேடுவதற்கு இட்டுச்சென்றது.

பார்வையாளர் - ஆற்றுகையாளர் என்ற நவீன அரங்கு வகுத்த பிரிகோட்டுக்குள்

மட்டும் இயங்க முடியாததாக அரங்கு மாற்றம் கொண்டது. இது புதியன புதுக்கும் வேட்கையால் எழுந்ததல்ல. மௌனப் பகிர்வுக்கும் மேலாக நேரடியானதும் வெளிப்படையானதுமான பகிர்வுகளுக்கான வெளிகளாக அரங்கு மாற்றம் கொண்டது. புறச்சூழலில் அல்லது பொது வெளிகளில் உரையாட முடியாத விடயங்களை உரையாடும் களமாக அரங்கு வகிக்கும் வரலாற்றுப் பாத்திரம் பயன்படத் தொடங்கிற்று.

இதுவரை நவீன நாடக அரங்க உருவாக்கங்களுக்கான கூறுகளை எடுத்துக் கொள்ள பாரம்பரிய அரங்கு, சடங்குகளை நோக்கி வரித்துக்கொண்ட பயணங்களின் நோக்கத்தில் மாற்றம் ஏற்படுகிறது. சமூகமயப் பட்டு இயங்கும் பாரம்பரிய விழா, அரங்கு, சடங்குகளின் இயங்கு பொறிமுறைகள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன. பார்வை யாளர் பங்கேற்புடன் இயங்கும் பின்நவீன அரங்க முறைகள் வெளியில் இருந்தும் உள்வாங்கப்படுகின்றன.

இவையிரண்டும் தனித்தனியாகவும், ஒன்றிணைந்தும் இயங்கும் வகையிலாகவும், புதிய முறைமைகளின் உருவாக்கங்களாகவும் இந்த நாடக இயக்கம் பரிணாமம் பெற்றிருக்கின்றது.. இது சமூக அரங்கச் செயல்வாதமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பங்குபற்றல், ஆற்றல்களை வெளிப் படுத்தல், கொண்டாடுதல், அனுபவங்களைப் பகிர்தல், ஆற்றுப்படுத்தல் என இவை விரிந்து செல்லும்.

நாடக அரங்க ஆற்றுகைகள் மட்டுமின்றி ஆக்க முறைமைகளும் பங்குகொள் நிலைக்குப் பரிமாணம் பெற்றன. நாடகத் திறன்களைப் பயிற்றும் நாடகக் களப்பயிற்சிகள், களப்பயிற்சி அரங்குகளாகப் பரிணாமம் பெற்றன. அரங்குகள்திறன்களைவழங்குவதாக அன்றி பகிர்விற்கும் ஆற்றுப்படுத்தலுக்கும் உரிய களங்களாகின. புதிய திறன்கள் தேவைப் பட்டன. உளவளத்துணை போன்ற வேறு பயில்முறைகளின் இணைவு அடிப்படைத் தேவையாயிற்று. உளச்சமநிலைக்கும் இழப்புக் களிலிருந்து மனவெழுச்சிக்குமான தனிமனித, சமூகத் தேவைகளினை கூத்தும் சடங்குகளும் வழங்குவனவாக இயல்பாகவே மக்களால் எடுத்தாளப்பட்டு வந்திருப்பதும் ஏலவே அறியப்பட்டது.

மக்கள் கூடிப் பகிர்ந்து கொண்டாடும் இடங்களினை அச்சமும் இழப்புக்களும் கைப்பற்றிக் கொண்டதனால் குறைந்தபட்ச பகிர்விற்கும் கொண்டாட்டத்திற்கும் உரிய களங்களாக நவீன நாடக அரங்கின் புதிய பரிமாணம் அவசியமாகியது.

கட்டுப்பாட்டுப் பிரதேசம், விடுவிக்கப் பட்ட பிரதேசம், அகதி முகாம்கள், இடைத்தங்கல் முகாம்கள், சிறைச்சாலைகள் என ஈழத் தமிழரின் வாழ்வும் அரங்கும் காணப்படுவது யதார்த்தம்ாகியது பிரதேசங்களிற் கிடையிலான நடமாட் டங்களின் கட்டுப்படுத்தல்கள் மட்டுமன்றி கிராமங்களிற்கிடையிலான நடமாட்ட மட்டுப்படுத்தல்கள் என மக்களின் இயக்கம் உறையவைக்கப்பட்டு இருந்தது.

கொலைகள், ஆட்கடத்தல்கள், பிள்ளை பிடி, ஆட்சேர்ப்பு, அச்சுறுத்தல்கள், கொள்ளை கள், வரிகள், தடைகள், அனுமதி பெறுதல் எனப் பலவகைகளிலும் மக்களது இயக்கம் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் கட்டுப்படுத்தல்களுக்கு ஆளாகியிருந்தது. நாட்கள் பகலாக மட்டுமே பெருமளவிற்கு சுருக்கப்பட்டிருந்தது. அதையும்கூட ஊரடங் குகள், சுற்றிவளைப்புக்கள் என்பவற்றுடன் அத்தியாவசியப் பொருட்களைப் பெற வரிசை களில் காத்திருப்பதும் பங்குபோட்டு விழுங்கிக் கொண்டிருந்தன.

இத்தகைய பின்னணியில் போரை எதிர்கொள்ளும், போருக்கு மக்களைத் தயார்படுத்தும் அரங்குகள் விடுதலைப் போராட்ட இயக்கங்களால் முன்னெடுக்கப் பட்டன. இந்தவகையில் வீதிநாடகங்கள் முக்கியத்துவம் உடையவை ஆயின. மக்களின் குரலாக போரையும் வாழ்வையும் பிரதிபலிப்பதிலும் உரையாடலுக்கு கொண்டு வருவதிலும் நாடகக் குழுக்கள் முனைந்து இயங்கின.

போரினால் ஏற்பட்ட வடுக்களிலிருந்து மக்களை விடுவித்து ஆற்றுப்படுத்தும் அரங்குகள், களப்பயிற்சி அரங்குகள் என்பவை நாடகக்குழுக்களாலும், அரசு சார்பற்ற தன்னார்வக் குழுக்களாலும் முன்னெடுக்கப்படுவதாயிற்று. குறிப்பாக கணவனை இழந்த,பிள்ளைகளை இழந்த பெண்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள் அதிக கவனத்திற் கொள்ளப்பட்டனர்.

இத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது உளச்சிகிச்சை அரங்குகள் மக்களின் உள்ளக் கொதிநிலையைத் தணிவிப்பதாகவும், சாந்தப்படுத்துவதாகவும் விமரிசனங்கள்

எழுந்தன. மனிதர்கள் உளரீதியான கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகும் பொழுது அவர்களை இயல்புநிலைக்கு கொண்டுவரும் எத்தனங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பொருத்தமானதும் தேவை யானதுமான தீர்மானங்களுக்குப் போகும் நிலையில் இருக்க முடியும் என்பதும் இன்னுமொரு வாதமாயிற்று.

இவற்றுடன் கல்வி, கல்விமுறை மீதான அரங்க விமர்சனங்களுக்கப்பால் மாற்றுக் கல்வி முறைமையாக அரங்கு புதிய பரிமாணம் பெற்றது. போரும், இறப்பும், இழப்பும், இடப்பெயர்வும் கல்விகற்கும் மாணவர் சமூகங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் என்பவற்றை ஈழத்தமிழ் அரங்கு பல்வேறு வழிமுறைகளூடு முன்னெடுத்தது என்பது ஈழத்தமிழ் அரங்கில் நிகழ்த்தப்பட்ட மற்றுமொரு மிகமுக்கியமான மாற்றமாகும்

அரச சார்பற்ற நிறுவனங்கள் பெண்கள், சிறுவர்கள், மனித உரிமைகள், சுற்றுச் சூழல், மிதிவெடி, பொறிவெடி, சுகாதாரச் சீர்கேடுகள் பற்றிய விழிப்புணர்வு போன்ற விடயங்களைக் கையாண்டன. நிதி வழங்கல் மூலம் முன்னெடுக்கப்படும் இத்தகைய அரங்கச் செயற்பாடுகள் சாதகங்களுடன் பாதகங்களையும் . சேர்த்தே கொண்டு வந்திருந்தன.

நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான அரங்குடனும் குறித்த விடயத்துடன் தொடர்புகள் எதுவுமற்ற உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் நாடகக் குழுக்களை உருவாக்கி இயங்கின. இவையும் நிதிவழங்கல் காலம் முடிந்தவுடன் நின்று போய்விடும். நிதி வழங்கும் நிறுவனங்களும் தங்களது நோக்கத்திற்குக் கட்டுப்படக்கூடிய வகையிலேயே தெரிவுகளைச் செய்து செயற்திட்டங்களை முன்னெடுக்க முனைவது பெரும்படியாக இருக்கிறது.

பாரம்பரிய அரங்குகள் சார்ந்தும் இத்தகைய நிலைமைகள் காணப்படுவது ஆபத்தான கூறாகும். ஈழத்தில் குறித்த விடயத்துடன் தொடர்பற்ற உள்ளூர் அரச சார்பற்றநிறுவனங்கள்பாரம்பரிய அரங்குடன் தொடர்புபடுவது அண்மைக்காலத்தில் நிகழ்ந்தேறி வருகின்றன. இந்நிறுவனங்களுக்கு சர்வதேச நிறுவனங்களால் நிதிவழங்கப்பட்டு இருக்கின்ற நிலைமைகளும் பாரம்பரிய அரங்கை சீரழிக்கின்றன. குறித்த பண்பாட்டுச் சூழலுக்கு பொருத்தமற்ற இசைக் கருவிகளை வழங்குவது, பாரம்பரிய அரங்கக் கலைகளை அதன் அடிப்படைகள், சமய பண்பாட்டுத் தொடர்புகள் கவனத்தில் கொள்ளப்படாமல் காட்சிப் பண்டங்களாக்குதல், அழிந்து போகின்றன அல்லது அருகிப் போகின்றன என்ற முற்கற்பிதங்களுடன் இருப்பவற்றையும் ஆவணப்படுத்தல் என்ற பெயரில் உரிய இடங்களில்இருந்து எடுத்தகற்றல், பாரம்பரிய அரங்கக் கலைகள் அருகிப் போகின்றன, அவற்றைப் பேணவேண்டும், பாரம்பரிய கலைகள் தொடர்பான ஆய்வு வேண்டும் அதற்கு நிதி வேண்டும் என்ற புனைவுகளும் பாரம்பரிய அரங்குகளின் சீர்கேடுகளுக்கு காரணமாகின்றன.

இத்தகைய நிலைமைகளுக்கு மாறாக ஈழத்தமிழர்தம் பாரம்பரியக் கூத்துக்கள் மக்கள் வாழ்கின்ற பலதரப்பட்ட இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டு வருவது முக்கியத்துவமுடைய வரலாற்றுச் செயற்பாடாக விளங்கி வருகிறது. கூத்துக்கள் பாரம்பரியமாக ஆடப்பட்டு வரும் இடங்களில் மட்டுமின்றி இடம்பெயர் முகாம்களிலும், மீள்குடியேற்றங்களின் பின்பும், புலம்பெயர் நாடுகளிலும், சிறைச்சாலைகளிலும்கூட கூத்துக்கள் களரிகட்டியிருக்கின்றன. இவை முழுக்க முழுக்க அதை ஆடும் சமூகக் குழுக்களது பொறுப்பாகவும், செயற்பாடாகவும் இருந்து வருகின்றது.

மனிதர்களால் மனிதர்களுக்கு ஏற்படுத்தப் படும் போர் அனர்த்தங்களின் போது மட்டுமல்லாது, இயற்கை மனிதர்களுக்கு ஏற்படுத்தும் அனர்த்த காலங்களிலும் குறிப்பாகச் சுனாமி அனர்த்தத்தின் பின்னரான வாழ்க்கையை மீட்டெடுத்தலின்போதும் நவீன அரங்கச் செயற்பாடுகளிலும் மிகவும் வலுவுடையதானசெயற்பாடுகளைபாரம்பரிய அரங்கான கூத்தரங்கு நிகழ்த்தியிருக்கிறது.

அச்சங்கள், பீதிகளில் இருந்து விடுபட்டு மனம் ஆறி மகிழ்ச்சியை மீட்டெடுக்கும் களங்களாக கூத்துப் பழகும் வெளிகள் அமைந்திருநதன. கூத்துப் பழகவென பொதுவெளியில் ஒன்றுகூடிப் பாடல் மத்தளச் சத்தத்துக்காடல், என விரியும் இந்நிகழ்வுகள் அச்சங்களில் இருந்து மீண்டு மகிழ்ச்சியைப்பிரகாசிக்கச்செய்யஊரவர்களே கண்டுபிடித்த மருந்து ஆகும். அனர்த்தங்கள் காரணமாக முழுச்சமூகமும் எதிர்கொண்ட அழுத்தங்களை, ஏற்பட்டுள்ள வடுக்களை நீக்க சமூகத்திடம் இருந்த வழிமுறை இது.

ஈழத்தமிழர்தம் நவீன அரங்கு அறிவுபூர்வமாக முன்னெடுத்த இத்தகைய அரங்கச்செயற்பாடுகள் பாரம்பரிய அரங்கச் சூழலில் மிகவும் தன்னெழுச்சியாகவே நடைபெற்றிருக்கின்றது. பாரம்பரிய அரங்கின் உயிர்நிலைகளாக விளங்கிவரும் அண்ணா விமார்களது இருப்பும், அர்ப்பணிப்பும் ஆக்கத்திறனும் கொண்ட இயக்கமும் இதற்கு காரணமாகி இருக்கிறது. இதன் உச்சமான இயக்கத்தினை வன்னிப் பேரழிவின் பின்னரான தடுப்பு முகாம் வாழ்வில் கூத்தின் வீச்சான இயக்கம் நிகழ்த்தியிருப்பதில் காணமுடியும்.

கூத்தர்களையும், அண்ணாவி மார் களையும் "படிப்பறி வற்றவர்கள்", "பாமரர்கள்" என அடையாளப்படுத்தி அற்றுப்போகச் செய்யத்தக்க வகையில் நவீன அறிவுப்புலம் விஞ்ஞானபூர்வ அறிவு என்ற பெயரில் காலனித்துவ நலன்பேணும் புனைவுகளைச் செய்தபோதும் கூத்தின் இருப்பும் அண்ணாவியத்தின் தொடர்ச்சியும் அழிக்கமுடியாதது ஆயிற்று. ஏனெனில் அதை இன்றளவும் பயின்றுவரும் சமூகங்களின் தேவையும் நம்பிக்கையும், அர்ப்பணிப்பும் ஆகும்.

இந்நிலையில் ஈழத்தமிழர்தம் அரங்கு படச்சட்ட மேடைகளுடன் மட்டுப்படுத்திக் கொள்வது இயலாததாயிற்று. படச்சட்ட மேடை அரங்குகளிற்கு அப்பால் தனது ஆற்றுகைச் சிறகுகளை ஆற்றுப்படுத்த வேண்டியிருந்தது. போரும், இயற்கை அனர்த்தங்களும், பால் ரீதியாக, சமூக ரீதியாக நிகழ்த்தப்படும் அனர்த்தங்களும் அரங்கில் பார்க்கப்படுவதற்காக மட்டுமன்றி பங்குபற்றுவதன் ஊடாக பிரச்சினைகளை உரையாடலுக்குக் கொண்டு வருவதன் மூலமாக சமூக மாற்றங்களுக்கும் சட்டத் திருத்தங்களுக்கும் வழிவகுக்கும் பிரயோக அரங்கச் செயற்பாடுகளாக, அரங்கச் செயல்வாதங்களாகப் பரிமாணம் கொண்டு சமூகத்தின் பல்வேறு களங்களுக்குள்ளும் வேரும் விழுதுகளும் விடத்தொடங்கி வளர்ச்சி கண்டது.

ஆயினும் 'படச்சட்ட அரங்கில் முன்புபோல் ஆற்றுகைகளாகக் காணாத நாற்காலிவிமரிசகர்களும், நவீன அறிஞர்களும் நாடகம் காணாமல் போய்விட்டது' என அறிவிப்புச்செய்யத்தொடங்கினர். படச்சட்ட அரங்கே தராதர அரங்கம். மற்றெவையும் அவ்வாறான தராதரம் கொண்டவை அல்ல என வாதத்தையும் நிகழ்த்தினர். கலை மக்களுக்காக என்றவர்களுக்குள் ஒளிந்திருந்த காலனித்துவப் பேய்கள் முகங்காட்டத் தொடங்கின. இத்தகைய அரங்குகள் அழகியல் அற்றவை என்று அழகியலின் வித்தியாசங்களை மறுத்ததுடன் காலனிய மற்றும் செவ்வியல் அழகியல் அம்சங்களே அழகியல் என்றும் முனைந்தனர்.

பாரம்பரிய அரங்கின் அழகியல் குறைபாடு பற்றிய நவீன அரங்க அறிஞர்தம் குற்றச்சாட்டுகளுடன் இதனைத் தொடர்பு படுத்திப் பார்ப்பது இங்கு பொருத்தப்பாடு உடையதாகும். மக்கள் கலை, கலை மக்களுக்கானது என வார்த்தைகள் விளையாடினாலும் பாரம்பரிய அரங்கின் நிராகரிப்பும், சமுதாய அரங்கச்செயற்பாடுகள் பற்றிய தேடலின்மையும் காலனிய அறிவாலும், அழகியலாலும், செவ்வியல் அழகியலாலும் கட்டுண்டிருப்பதன் வெளிப்பாடென்றே கொள்ளமுடியும்.

ஆயினும் சமூகங்களதும் காலத்தினதும் தேவை அதற்குரிய அரங்குகளை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை ஈழத்தமிழர்தம் அரங்கு புலப்படுத்தி வருகின்றது. சமுதாய அரங்காக, தளைநீக்க அரங்காக, பிரயோக அரங்காக, சிறுவர் அரங்காக, கல்வியியல் அரங்காக, ஆற்றுப்படுத்தல் அரங்காக, எழுச்சிகொள் அரங்காக, வீதி அரங்காக, ஊர்வல அரங்காக, திருவிழாக் கொண்டாட்ட அரங்காக, களப்பயிற்சி அரங்காக வேர்கொண்டு விரிந்து இயங்கும் நவீன அரங்கும், சமுதாய மயப்பட்டு விழாவாக, சடங்காக விரியும் பாரம்பரிய அரங்கான கூத்தும் சமாந்தரமாகப் பயணிக்கின்றன. ஈழத்தமிழ்ச் சூழலில் சமூகப் பங்களிப்புடனேயே இவை நிகழ்ந்தேறியும் வருகின்றன.

நவீன நாடகக் குழுக்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், சமூகச் செயற்பாட்டா ளர்களது இணைவு காரணமாக சமூகமயப்பட்ட உரையாடல்கள், மாற்றங் களுக்கான விடய ரீதியான அரங்க முன்னெடுப்புக்கள் இப்பல்வேறுபட்ட தளங்களில் இயங்குகின்ற அரங்குகளிற்கும் வியாபிக்கத் தொடங்கியிருப்பது குறிப்பிடத் தக்க விடயமாகும். பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகள், சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள், சிறுவர் கல்வி,

சுற்றுச்சூழல், இன மத ஒருங்கிணைவு போன்ற விடயங்களை முன்னிறுத்தி செய்யப்படும் ஆற்றுகைகள் ஐக்கிய நாடுகள் சபையாலும், அரச சார்பற்ற சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்களாலும் முன்னெடுகப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் அறிமுகப் படுத்தப்படும் திட்டங்களுக்கு அமைவாகவே மேற்படி திட்டங்களை உள்வாங்குகின்றன.

உள்ளூர் நாடகக் குழுக்களால் உள்ளூர்ச் சூழலுடன் ஒத்திசைந்த வகையிலான முன்னெடுப்புக்கள் முழுக்க முழுக்க உள்ளார்ந்த தேவைகளைக் கருத்தில் கொண்டு செய்யப்படுகின்றன. அத்துடன் உள்ளூர் வளப்பயன்படுத்துகையுடனான முன்னெடுக்கப் புகளாகவும் இவை காணப்படுகின்றன.

அதேசமயம் இவற்றில் வெளியிருந்துவரும் திட்டங்கள் நிதி வழங்களுடன் நடைபெறும் பொழுது நிதிப் பெறுகைக்காக அரங்க முன்னெடுப்புக்களில் பங்கெடுப்பதும், நிதி வழங்குனர் தமது கட்டுப்பாட்டை வைத்திருக்கக்கூடிய வகையிலான தெரிவு களை நிகழ்த்தி முன்னெடுப்புக்களை மேற்கொள்வதும், நிலைமைகளை மேலும் சிக்கலடையச் செய்து வருவதும் வழமையாகி இருக்கிறது. இது இயல்பாகவே உள்ளூர் குழுக்களின் அரங்கச் செயற்பாடுகளை வலுவிழக்கச் செய்வதற்கான பங்களிப்பாக இருப்பது கண்கூடு.

இந்த றொபின்சன்குறூசோமனப்பாங்கும், மாற்றமடையாத man friday மனப்பாங்கும் இதற்குக் காரணமாகின்றது. இயல்பு வாழ்க்கை, மீள்கட்டுமானம், அபிவிருத்தி என்ற பெயரிலான அதிகாரபூர்வமானசெயற்றிட் டங்களுக்குள்உள்ளோடிநிற்கும்நவகாலனியக் கருத்தாக்கங்களும் அரங்கச் செயற்பாடு களுக்கூடாக கேள்விக்கு உட்படுத்தப்படுவது நிகழ்ந்துவரினும் இதுவொரு பேரியக்கமாகப் பரிணமிக்க வேண்டியது என்பது அவசியமாக உணரப்பட வேண்டியது.

ஏனெனில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கும் மாற்றங்களுக்கான செயற் றிட்டங்கள் நிகழ்ச்சித் திட்டங்களாக மட்டுப்பட்டுப் போவதே பெரும்படியாக இருக்கிறது. இது செயல்வாதமாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதன் தேவை வலிமையாக உணரப்பட்டிருக்கிறது. சமூகச் செயல்வாதங்களை மழுங்கடிக்கும் நடவடிக்கையாகவே அரசு சார்பற்ற நிறுவனங்களது நிகழ்ச்சித்திட்டங்கள் அமை கின்றன என்ற வாதங்களும் வலிதாகவும் நியாயமானதாகவும் உணரப்படும் உரை யாடப்படும் நிலை தொடர்ச்சியும் விரிவாக்கமும் பெறவேண்டி இருப்பதும் அவதானிக்கப்படுகிறது.

ஏனெனில் ஈழத்தமிழர்தம் நவீனகால அரங்குகளது இயக்கங்கள், அதனைப் பயின்றுவரும் சமூகங்கள், அமைப்புக்கள், குழுக்கள், மன்றங்கள், தனிநபர்களது உழைப்பிலும், பங்களிப்பிலும் உருவானவை யாகவே பெரிதும் காணப்படுகின்றன. இவை மக்களது குரலை எதிரொலிப்பவையாக இருப்பதும் காணக்கூடியது.

இந்நிலையில் "தமிழர் நாடகம் வளர்ச்சி அடையவில்லை" என்ற சுலோகமும், அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிதி வழங்கல்களுடன் கூடிய குறுகிய கால நிகழ்ச்சித் திட்டங்களும் ஈழத்தமிழர்தம் தன்னிலைப்பட்ட வளர்ச்சிப்போக்கை சிதைவுக்கு உள்ளாக்குவதற்கே வழிவகுப்பதாக இருக்கிறது. ஆயினும் ஈழத்தமிழர்தம் புதிய அரங்கப் பரிமாணங்கள் பற்றிய மேற்கு ஐரோப்பிய அறிஞர்களின் ஆய்வுகளே ஆதரவான சக்தியாக இருப்பதென்பதும் உண்மை.

நாடகமும் அரங்கியலும் பாடநெறியாக ஆய்வுக்கு உரியதாக பாடசாலை முறைமைக்குள்ளும் பல்கலைக்கழகத்தின் பாடப் பரப்பிற்குள்ளும் கொண்டு வரப்பட்டு விரிவாக்கம் பெற்றுவரினும் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக பாடத் திட்டங்கள் சமகால அரங்கச் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்ப்பதாகவும் இல்லாமல் அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதாகவும் இல்லாமல் காணப்படுவது கேள்விக்குரியதாகவும் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டியதாகவும் இருப்பது முக்கிய தேவையாக உணரப்படுகின்றது. உள்ளூர் கல்வி நிறுவன ஆய்வுகளும், பாடத்திட்டங்களும் இந்த சமகால வளர்ச்சிப் போக்குகளை உள்வாங்காமல் 1960,1970களுக்குள் தேங்கிக் கிடப்பது, கேள்விக்குட்படுத்தப்பட்டு புத்தாக்கம் பெறவேண்டி இருக்கிறது. தேக்கங்களை ஆற்றோட்டமாக்கும் செயற்பாடுகளும் ஏலவே ஆரம்பமாகி இருப்பதும் சாதகமான அறிகுறிகளாகும்.

மேலும் இனம், சாதியம், பால் உள்ளிட்ட அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான இயங்குதளமாகவும் ஈழத்தமிழர் அரங்கு இயங்கி வருகிறது. காலனித்துவத்தை எதிர்கொண்டது முதல் பின்காலனித்துவ, நவகாலனித்துவ, உலகமயமாக்கல் சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளும், தொடர் அரங்கச் செயற்பாடுகளின் காட்சியும் களமுமாக இயங்கி வருவது ஈழத்தமிழர் அரங்கின் போக்காகவும் பொறுப்பாகவும் இருப்பது அதன் சாதகமான பக்கங்களாக விரிகின்றன.


நேரடிப் போர்நிகழ் களங்களாக அல்லாத தமிழர்வாழ் பிரதேசங்களும் வெடிச்சத்தங்கள் தினசரி கேட்காதவை ஆயினும் அச்சம் மலிந்த கட்டுப்பாடுகள் நிறைந்த பகுதிகளாகவே விளங்குவதாயிற்று. தமிழர் என்ற அடையாளம் இந்த நிலைமைக்கு காரணமாகியிருக்க தமிழர்களது உயிர்நிலை ஆள் அடையாள அட்டைகளில் பாதுகாக்கப்படுபவை ஆயின. இந்நிலையில் காமன் கூத்தும் அருச்சுனன் தபசும் மலையகத்தில் மட்டுமல்லாது சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டவர்களால் தமிழகத்திலும் ஒன்றிணைவிற்கும் அடையாளப் படுத்தலுக்குமான ஊடகமாக வலிமையுடன் திகழ்வதைக் காணமுடியும்.

புத்தளம் சிலாபம் பகுதிகளில் பாண்டவர் வனவாசம் சடங்குடன் சமூக நாடக விழாக்களும், கொழும்பில் அரங்கேறிவரும் மேடை நாடகங்களும் இந்த வகையிலானவையே என்பதை விளங்கிக் கொள்ள வைப்பனவாக இருக்கின்றன.

ஈழத்தமிழர் அரங்கில் காலத்திற்கு ஏற்ப பனுவல்கள் உருவாகின தெரிவாகின. பனுவல்கள் எந்தக்காலத்திற்கு உரியவையாயினும் ஆற்றுகையில் சமகாலத்தையே சமூகங்கள் வாசித்தன பாரம்பரிய அரங்கு முதல் நவீன பின் நவீன அரங்கு வரை சமகாலத்திற்குஉரிய அரங்குகளாகபரிமாணம் பெற்றுக் கொண்டதன் பின்னணிகளில் இந்த விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

நாடகக்காரர் நாடகச் செயற்பாட்டாளர் முன்னெடுக்கும் ஈழத்தமிழர் அரங்கு பேசுபொருளின் முக்கியத்துவத்தை வலிமையாக உணர்ந்ததாகவும், அதன் தெரிவுகள் தீர்மானங்களில் சுயாதீனம் உடையதாகவும் நாடககாரர் அவர்தம் நண்பர்கள் அன்பர் ஆதரவாளர்கள் என்ற பின்புலத்தாரின் நிதி ஆதரவுடனேயே ஆற்றுகைகள் நிகழ்ந்தேறி வருவதாகவும் இருந்து வருகின்றது.

புலப்படும் போர்ப் பரப்பில் இருந்து புலப்படாப் போர்ப்பரப்புள் நுழையும் ஈழத்தமிழர் அரங்கு இனிமேல்தான் மெய்யானதும் வலிமையானதுமான சவால்களை எதிர்கொள்ளப் போகின்றது. ஏனெனில் போர் சமூகப் பண்பாட்டுப் பரப்புக்களுக்கு உரியதாகி மாற்றம் கண்டிருக்கிறது. நிர்வாகங்கள், நிவாரணங்கள், அனுசரணைகள் என்ற வழிகளில் எல்லாம் அரங்க நிகழ்ச்சித் திட்டங்கள் மாற்றி அமைக்கப்படுவது ஏலவே ஆரம்பமாகி விட்டிருக்கிறது.



சிறுகதை

# பூமராங்க்

1

அவனைக் காணவில்லை! இரண்டு நாட்களாக தேடுகிறேன். எங்கே போய் இருப்பான்?

அவன் எனக்கு சொந்தமோ பந்தமோ இல்லை. நீண்ட நாட்கள் பழக்கமோ, என்னோடு ஒன்றாக தொழில் செய்பவனோ இல்லை. வெறுமனே எங்கள் அலுவலக கென்டினில் எடுபுடி வேலை பார்த்து வந்தான் ஒருமாதகாலமாக; அவ்வளவுதான்!


ஆனால் நான் ஏன் அவனைத் தேடுகின்றேன்!

எங்கள் கென்டினில் வேலைபார்ப்பவர்கள் அநேகமாக சிங்களவர்களாகத்தான் இருப்பார்கள். அத்திப்பூ பூத்தாற்போல தமிழர்கள் வேலை செய்வார்கள். ஆனால் யாராக இருந்தாலும் கூடிப்போனால் ஐந்து மாதங்களுக்கு மேல் இருக்கமாட்டார்கள். எங்கேயாவது வேறு வேலை தேடிக் கொண்டு போய் இருப்பார்கள்.

என்ன காரணம் என்று நான் அறிய முற்படவில்லை.

அது எனக்கு தேவையில்லாததும் கூட.

கென்டின் நடத்தும் பெண்மணி முஸ்லீம் மதத்தை சார்ந்தவர். நாங்கள் மேசையில் வந்து அமர்ந்த உடனேயே அப்பெண்மணி தன் சகாக்களைப் போய் பார்க்கும்படி கூறுவாள். சில சமயங்களில் அவளே வந்து எங்களுக்கு சிற்றுண்டிகளை பரிமாறுவாள். நானும் தமிழன். அவளும் தமிழ் பேசுவாள் என்பதால் என்னுடன் அன்னியோனியமாகப் பழகுவாள். ஒரு முறை "சிங்கர் கம்பனியினால் புதுவருட "சேல்" ஒன்றை நடத்தினார்கள். மாதாந்த தவணை முறைப்படி அப்பெண் மணி ஒரு பெரிய "ரைஸ்குக்கரை" வாங்கினாள். அதற்கு கெரண்டியாக நானும் கையொப்பத்தை வைத்துக் கொடுத்தேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.



இரண்டு மாதத்திற்கு முன்பு ஒருநாள் என்னிடம் அவள் சிரித்துக் கொண்டே வந்தாள்.

நானும் பதிலுக்கு சிரித்தேன்.

"சேர்... முக்கியமா ஒரு வெஷயம் கேக்கோனும்" என்றாள்.

நான் அவளை உற்றுப் பார்த்தேன்.

"என்ன விஷயம்" என்றேன்.

"சேர்... இத கொஞ்சம் படிச்சி பாருங்க...' என்று கூறி ஒரு பைலை என்னிடம் தந்தாள்.

நான் அதை விரித்து படித்தேன்.

சுரேஸ் என்பவரின் சான்றிதழ்கள், விபரக்கோவை இத்தியாதி....இத்தியாதி.

நான் அப்பெண்மணியை பார்த்துக் கேட்டேன் "இதை ஏன் கொடுத்தீர்கள்... வேலை ஏதாவது வாங்கிக் கொடுக்க வேணுமா? உங்களுக்குத் தெரிஞ்சவரோ"

அப்பெண்மணி இல்லையென்பது போல தலையசைத்துவிட்டு பின்னர் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீங்க." என்று நான் கேட்டேன்.

"சேர்... தப்பா எடுக்காதீங்க... இந்த கென்டின்ல வேலைக்கு இந்த பொடியன சேர்க்கோனும்." என்றாள் அந்தப் பெண்மணி.

"ஏன் என்ன பிரச்சினை பத்தாம் வகுப்பு பாஸ்பண்ணியிருக்கான். ஊர் கிராம சேவகர், பொலிஸ் ரிப்போட் எல்லாம் இருக்கு..." என்று நான் அவளைப் பார்த்துக் கேட்டேன்.

அவன் இன்னொரு கடதாசி பைலை என்னிடம் நீட்டினான். நான் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன்.

பதுளை சேனாதிராஜா



நான் எப்போதும் பார்த்திராத சான்றிதழ்கள், அறிக்கைகள்.

அப்பெண்மணியை அதிர்ச்சியோடு பார்த்தேன். பின்னர் நானே கேட்டேன்.

"என்ன இதெல்லாம்"

"சேர்... கோவிக்க வாணாம்... இந்த பொடியன் முன்பு கிளிநொச்சியில இருந்து போசஸ்கிட்ட புடிபட்டது.பெறகு வவுனியா கேம்புள ஒருவருஷமாக இருந்தது" என்றாள் அந்த பெண்மனி.

"ஓ...புனர்வாழ்வு முகாமிலா"

"ஓ... சேர் அங்கெகைக்குத் தா" என்றாள் கண்களை விரித்துக் கொண்டு அந்த பெண்மனி.

நான் கையில் இருந்த சான்றிதழ்களை திரும்பவும் கூர்ந்து பார்த்தேன். புனர்வாழ்வு அளிக்கப்பட்டதற்கான சான்றிதழ், மேசன் வேலை நற்சான்றிதழ், பொலீஸ் கிளியரன்ஸ் சான்றிதழ் கேம்பில் இருந்து விடுதலையான கடிதம்!

"இந்த பொடியன் வேலைக்கு நீங்க சேர்த்துகிறது பிரச்சினை இல்லை. அதுதான் எல்லா டொக்கியூமெண்டும் இருக்கே" என்றேன் நான்.

"ஓ.... சேர்... அதுதா... ஒங்ககிட்ட காட்டினா நல்லம் என்று நெனைச்சன்" என்றார் அந்த பெண்மணி.

நான் அவளை நன்றியோடு நோக்கினேன்.

அவள் வெகுளியைபோல சிரித்து சிரித்து இருந்தாலும் நல்லது செய்ய நினைப்பதே பெரிய விஷயம் அல்லவா!

## 2

இரண்டு நாட்களுக்குப் பிறகு.. எங்கள் கென்டினில் அவனைக் கண்டேன். நடுத்தரமான உயரம், மாநிறம். இளமையை ஒப்புவிக்கும் பெரிய கண்கள், உதடுகள், நாசி, முகம், சுருண்ட கேசம்.

கொஞ்சம் அழகாக இருந்தான். வாட்டசாட்டமாக இருப்பதைப் போலவும் எனக்குப்பட்டது.

அவன் வேலைக்கு சேர்ந்து விட்டான். நான் இரண்டு நாட்கள் கென்டினுக்கு வரவில்லை. அவசரமாக வெளியில் போய் இருந்தேன்.

அவன் ஆச்சரியமாக என்னைப் பார்த்தான். அருகில் வந்தான்.

"சேர்"

"உன்பெயர் சுரேஸ்தானே"

"எப்படி கண்டுபிடிச்சிங்கள் சேர்"

"நீர் இங்கு வருவதற்கு முன்னமே உம்முடைய சான்றிதழ்களை பார்த்தேன். மற்றது சுரேஸ் என்றதும் நீர் வந்துவிட்டீரே" என்றேன் பதிலுக்கு நான்.

"சரி சாப்பிட என்ன இருக்கு" என்றேன். அவன் ஒன்றுமே கூறாமல் சிரித்துக் கொண்டு நின்றான்.

சில நாட்களிலேயே என்னுடன் அவன் கதைப்பதில் சந்தோஷமடைகின்றான் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அவனின் பரம்பரை குருநாகலைப்பகுதியில் இருந்ததாகவும் எழுதபத்திஏழாம் ஆண்டு இனக்கலவரத்தில் கிளிநொச்சிக்கு குடி பெயர்ந்ததாகவும் சொன்னான்.

தன்னைப்போல ஆயிரக்காணக்கானவர்கள் மலையகப் பகுதியில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் தான் ஒரு சிறிய கடையை நடாத்தி வந்ததாகவும் வெளிநாடொன்றுக்கு போக ஆயத்தமான போது போர் உச்சமடைந்ததாகவும் இதனால் வாழ்க்கையே சிதைந்து சின்னா

பின்னமாகியதாகவும் உதவியவர்களில் நிறையப் பேரைக் காணவில்லையென்றும் தான் இப்போது அனாதையாக மாறிப் போனதாகவும் அறிந்து கொண்டதனாலோ என்னவோ அவன்பால் ஓர் ஈர்ப்பு எனக்குள் ஏற்பட்டது.

அதற்கு பின்னர் ஒரு மாலை வேளையில் தேநீர் குடிப்பதற்காக கென்டின் வந்திருந்தேன்.

அவன் என்னைக் கண்டதும் ஓடிவந்து "என்ன சேர்... டீயும் அப்பமும்தானே" என்றான்.

"ஓம்.." என்றேன் நான்.

அவன் குறிப்பிட்டவற்றை எனக்கு கொண்டு வந்து தந்தான்.

நான் "டீ" குடித்துக் கொண்டிருந்தேன்.

அவன் தயங்கிய படியே சொன்னான்.

"ஒன்றை சொல்லப் போகிறேன். ஏதும் நினையாதிங்கோ..."

"பரவாயில்லை சொல் சுரேஸ்"

"சேர் நான் வவுனியாவில் லலிதா என்றவளை லவ் பண்ணினனான். அவள் வெள்ளவத்தையில் வீட்டிலதான் நிக்கிரா. விலாசத்தையும் ஒருத்தரோட கதைச்சி எடுத்துப் போட்டன். அவளோட கதைக்கனும் சேர்" என்று கூறி வெட்கப்பட்டான்.

"ஏன் டெலிபோன் நம்பர் இல்லையா" என்று கேட்டேன்.

'நம்பர் ரை பண்ணினனான் ஆனா கிடைக்கல' என்றான் சோகத்தோடு.

'சரி விலாசத்தை தா.. பார்ப்போம்' என்று நான் கூறவே அவன் மிகுந்த ஆவலுடன் தனது சட்டை பையில் இருந்து ஒரு துண்டை எடுத்து என்னிடம் கொடுத்தான்.

நான் விலாசத்தை வாசித்ததும் எனக்கு மிகவும் சந்தோஷமாகப் போய்விட்டது எனது நண்பரின் வீடுதான் அது!

"ஏ... எனக்கு இந்த எட்ரஸ்சை தெரியும்" என்றேன் நான்.

"சேர்.. சேர்... எப்படியாயினும் அவன்ற டெலிபோன் நம்பரை எடுத்துத்தாங்கோ" அவன் கெஞ்சினான்.

"ஏன் நீர் தேடி போக ஏலாதோ"

"சேர்... எங்கட விஷயம் அவள்ற வீட்ட விருப்பமில்ல அதனால எனக்குத் தெரியாம அவள வச்சிருக்கினம்" என்றான் சுரேஸ்.

"சரி நான் பாரக்கிறன்" என்ற நான் அலுவலகத்தில் இருந்து வீட்டுக்குப் போகும்வழியில் அவன் சொன்ன விலாசத்தில் இருந்த வீட்டுக்கே போய் கோலிங் பெல்லை அழுத்தினேன்.

ஒரு நிமிட தாமதத்தில் வயதுபோன பெண்மணியொருவர் கதவைத் திறந்த எனக்கு வழிவிட்டாள்.

நான் முன் சோபாவில் அமர்ந்து கொண்டேன். டிவியில் மெகா சீரியல் போய் கொண்டிருந்தது. சுரேஸ் கூறிய பெண்ணை தேடினேன்.

### 3

அவள் இல்லை!

"என்ன தம்பி பாக்கிறியள்! அதுசரி என்ன விசயம்பா... திடீரென்று" என்று கூறிக்கொண்டே வயதான பெண்மணியும் சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

"எல்லாம் நல்ல விஷயமாத்தான் வந்தனான்.. எங்க ரகுவரன் இன்னும் வேலயில இருந்து வரவில்லையா..." என்று கேட்டேன்.

"அவன் சிங்கபூர்ல இருக்கான். திருமணம் அங்க நடந்தது. நாளைக்கு எல்லோரும் வருவினம்".

"யாருக்கு வெடிங்? எனக்கு சொல்லவில்லையே".

"இல்லை தம்பி . இது அவசரமான ஒரு திருமணம். என்ற தமக்கையோட மகளுக்கு... உங்களுக்கு தெரியாது. இப்ப ஐந்துமாதமாக இங்கதான் இருந்தவ. நல்ல வரன் கிடைச்சேக்க உடனேயே எல்லோரும் சரி சொல்லினம் விஷயத்த உடனேயே முடித்து போட்டினம். மாப்பிள்ளை கனடாவில, அவருக்கு இன்னும் கிறீன்கார்ட் கிடைக்கல. சிங்கபூரில அதுதான் திருமணம்" என்று வயதான பெண்மணி கூறிக்கொண்டே என்னைப்பார்த்து கேட்டாள் "என்ன நல்ல விஷயம் என்று சொன்னீங்கள்... ஒன்றையும் சொல்லாமல்... பொறுங்கோ முதல்ல டீயொன்று தாரன்' என்றாள்.

'இல்லையம்மா நான் ஒப்பீசுல குடிச்சிட்டன்"

"பரவாயில்ல தம்பி... களைச்சிப் போயிருக்கிங்கோ.. பொறுங்கோ டீயை குடிச்சிட்டு போங்கோ" என்றவள் உள்ளே போனாள்.

நான் சோபாவில் இருந்த ரிமோட்டை எடுத்து செனலை மாற்றலாம் என்று எண்ணியவன் மேசையில் கிடந்த "வெடிங் கார்டை" பார்த்தேன். அவசரமாக அந்த அழைப்பிதழைப் பிரித்தேன். மணமகள் லலிதா...

**இதே சனம் பொடியன்களை அன்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினார்கள். இன்று இவர்களே தூற்றுகின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களையும், உயிர்களைப் பலி கொடுத்தவர்களையும் அன்புடன் அரவணைத்துக் கொள்ளும் மனோநிலை எத்தனை பேருக்கு இருக்கின்றது. எமது சமுதாயத்தை நாங்கள் கைதூக்கி விடக் கூடாதா?**

ஓ... என் மனசு உடைந்து போனது. இந்த விடயத்த சுரேசுக்கு சொன்னால்... அவன் எப்படி தாங்கிக் கொள்வான். ஏற்கனவே துன்பத்தின் நிழலில் அவன் தஞ்சமடைந்து.... சுக்குநூறாக மாறிவிட்டிருந்தான். இதோடு அவனின் காதலும் தோற்றுப் போனதாக தெரியவந்தால் அவனுக்கு வாழ்க்கையே இல்லாமல் போனதற்கு சமம் இல்லையா?

அவன் வாழ்வதே லலிதாவுக்காகத்தான் என்பது அவன் இதைப்பற்றி கதைக்கும்போது கண்களில் ஏற்பட்ட ஒளியும் முகத்தின் பிரகாசமும் என்னைப்போல இலக்கிய ரசனை உள்ளவர்களுக்கும் பகுதிநேர எழுத்தாளர்களாக இருப்பவர்களுக்கும் அறிந்துக் கொள்ள முடியாமலா போகும்!

எனக்கே துயரம் என்றால் அவனுக்கு எப்படி?

துன்பக்கடலை நீந்தி கரை சேர்ந்தவனை மீண்டும் அலை அடித்துக் கொண்டு கடலுக்கு போனமாதிரியல்லவா இது! என்னுள் எழுந்த ஆயிரம் ஆயிரம் எண்ணங்களை மனதிலே பூட்டி வைக்க முடியவில்லை!

வயதான பெண்மனி டீயோடு வந்தாள்.

நான் டீயை விரைவாக குடித்துவிட்டு, "ரகுவரனை காணலாம் என்று வந்தனான். வீட்டில் அன்றி மட்டுமா" என்று கேட்டுக் கொண்டே எழுந்தேன்.

"இல்லை... மற்றத்தம்பி விநோதன் வேலையால இப்போ வருவான் என்று கூறிக்கொண்டே என்னை வழியனுப்ப கதவுக்கருகில் வந்து நின்றாள்.

## 4

மீண்டும் சுரேஸ்சை கென்டினில் சந்தித்தேன். என்னைக் கண்டதும் முகம் மலர்ந்து என்னிடம் விரைந்து வந்தான்.

"சேர்..."

அவனின் முகத்தை நேருக்கு நேராக சந்திக்க என்னால் முடியவில்லை. ஏனென்றால் "பொய்" ஒன்றை சொல்லப் போகிறேன்.

"வீட்டைத் தேடி போக நேரமில்லை" என்றேன்.

"நீங்கள் தங்கியிருக்கும் வீட்டின் தெருவில்தான் லலிதா இருக்கும் விலாசம் என்றீங்களே"

"ம்... ரெண்டு நாளா எனக்கு வேலையாகப் போய்விட்டது. பரவாயில்லை. இந்த சனிக்கிழமை கட்டாயம் போய்ப் பார்த்து திங்கள் உனக்கு செய்தி சொல்லுரேன்"

அவன் அமைதியானான்.

சனிக்கிழமை கைத்தொலைபேசியில் ரகுவரனின் இலக்கத்தை தேடி கண்டுபிடித்து தொடர்பை ஏற்படுத்தினேன்.

மறுமுனையில் ரகுவரன் வந்தான்.

"ஹலோ... எங்கடா போனீர்... வீட்டுக்கு வந்தனான். நீ.. இல்லை"

"ஓம்.. மச்சான்... ஏர்ஜன்டா வெடிங்.. எரஞ்மென்ட் சிங்கபூர்லதான் வெடிங் நடந்தது, அதுதான்."

மச்சான். எனக்கு சொல்லவே இல்லை"

"ஓம்... அம்மாவின் தமக்கையின்ட மகளுக்கு. அவ இங்கதான் தங்கியிருந்தாள். எதிர்பாராமல் நல்ல வரன் கிடைச்சது. என்ன செய்யலாம்?"

"சரி தான், ஆனா மச்சான் உனக்கு ஒன்று சொல்லட்டா கோவிக்காத" என்று நான் கொஞ்சமாக வார்த்தைகளை இழுத்தேன்.

"சொல்லு.. உம்மோட எனக்கென்ன கோபம்..."

"மச்சான் அவளுக்கு ஊரிலே யாரோடும் ஏதும் தொடர்பிருந்ததோ"

சில கணங்கள் அமைதியாக ரகுவரன் இருந்தான். பின்னர்,

"ஹலோ... மச்சான் உனக்கு எப்படியடா தெரியும்" என்று வினாவினான்.

"ஓம் எனக்குத் தெரியும். அது பெரிய கதை. உன்னைப் பார்த்து அது பற்றி சொல்லுரன்" என்றேன் நான்.

"மச்சான்... அவள் இந்த திருமணம் வேண்டாம் என்று பிடிவாதமாக இருந்தாள். சுரேஸ் என்று ஒரு பொடியனாம். அவனைத்தான் முடிப்பேன் என்று. வீட்டிலே பிரச்சினையாகிவிட்டது. ஆனால் வீட்டார் அதைப்பற்றி கவலைப்படவில்லை..."

"ஏன் மச்சான்" என்றேன் கவலையோடு நான்.

"பின்ன... அவன் இயக்கப் பொடியன்களோடு சேர்ந்திருந்தானாம். இப்ப புனர்வாழ்வு முகாமில இருக்கிறானாம். அவன் அங்கே இருந்து விடுதலையாக வெளியில் வந்து திருமணம் செய்தாலும்... அவர்களின் அந்தஸ்த்து குடும்ப மரியாதை எல்லாம் போய்விடுமாம். அதோடு பொடியன் நல்லா படிக்கவுமில்லை. நாளைக்கே குடும்பமாகினால் தொழில் இராதாம். இன்னொன்றையும் கதைத்தார்கள்! அவனுக்கு நாளைக்கு ஒன்றென்றால் அவன் சார்பில் கதைக்கவும் ஒருவரும் இல்லையாம். பிறகு அநாதையை எப்படி சேர்த்துக் கொள்ளலாம் என்று நிறைய கதைகள் சொல்லினம்"

ரகுவரன் கூறிய விடயங்கள் எனக்கு வேப்பம் இலையைப்போல கசந்தது. நான் நிதானமாக அவனிடம் கேட்டேன்.

"மச்சான்... நீ... என்ன இதற்குச் சொன்னாய்"

"உனக்கு தெரியும்தானே மச்சான். நாங்கள் இலக்கியகாரர்கள். அதன்படி வாழவும் முயற்சிப்பவர்கள். இதேசனம் பொடியன்களை அன்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினார்கள். இன்று இவர்களே தூற்று கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களையும், உயிர்களைப் பலி கொடுத்தவர்களையும் அன்புடன் அரவணைத்துக் கொள்ளும் மனோநிலை எத்தனை பேருக்கு இருக்கின்றது. எமது சமுதாயத்தை நாங்கள் கை தூக்கி விடக் கூடாதா. நானும் எத்தனையோ தடவை வீட்டார்களிடம் கூறிவிட்டேன். அவர்கள் எதற்கும் மசியவில்லை. இந்த விடயமாக முன்னரே தெரிந்திருந்தால் நாங்கள் ஏதாவது செய்திருக்கலாம்..." அவன் ஏக்கமாக மறுமுனையில் இருந்து பேசினான். எனக்கு ரகுவரனை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது! பெருமையாக இருந்தது!

## 5

திங்கள் சுரேஸை நான் சந்தித்தபோது அவன் வந்திருந்தவர்களுக்கு உணவுகளை பரிமாறிக் கொண்டிருந்தான். முன்பைவிட அவன் லாவகமாக தனது வேலையினை செய்வதை என்னால் உணர முடிந்தது.

ஐந்து நிமிடங்களுக்கு பிறகு என்னிடம் அவன் வந்தான்.

"சுரேஸ் எத்தன மணிக்கு வேலையால வெளியால கிளம்பலாம்?"

என்னை அவன் விநோதமாகப் பார்த்தான்.

"ஏன் சேர்" என்றான்.

"இல்லை உன்ர விடயமாக தான் கதைக்கோனும்"

"மாலை ஐந்து மணிக்கு"

"சரி.. நான் வேலையினை முடிஞ்சு இங்க வாரேன். என்னோட வெளிக்கிடனும் ... என்ன..?"

அவன் சந்தோசமாக "சரி" என்றான்.

அன்று மாலை அவனுடன் "கோல்பேர்ஸ்" இல் அமர்ந்து விடயத்தை அமைதியாகக் கூறினேன். அவனின் மனதை தேற்றிய படியாக சொன்னேன். ஒரு தந்தையைப் போல, தாயைப்போல அவனுக்கு ஆறுதல் கூறினேன்.

கலங்கிய கண்களை அவன் மணிக்கட்டினால் துடைத்துக் கொண்டான்.

அவனால் கதைக்க முடியவில்லை.

அவனை மீண்டும் எங்கள் கென்டினுக்கு கொண்டு வந்துவிட்ட போது கதைத்தான்.

"சேர் இந்த சனங்கள் இப்படி மாறிப்போகும் என்டு நான் கனவிலும் நினைக்கல"

நான்கு நாட்கள் ஓடிவிட்டன.

அவன் இயல்பாக இருப்பவனைப் போல முயற்சிசெய்வது எனக்குத்தெரிந்தது. இன்னும் கொஞ்சநாட்களில் அவன் முழுமையாக "பிரச்சினையில்" இருந்து விடுபடுவான் என்று தோன்றியது. அதற்கிடையில்தான் இரண்டு நாட்களாக அவனைக் காணவில்லை.!

திங்கள், செவ்வாய்க்கிழமை முடிந்து இன்று புதன் கிழமை! ஏங்கே போய் இருப்பான்?

## 6

என் கண்களை நாலா பக்கமும் சுழல விடுகிறேன்.

அவனைத் தான் காணவில்லையே!

எனது மனம் தவியாய் தவித்தது! எங்கே போயிருப்பான்?

நான் சற்று நிதானமாக யோசித்தேன்.

"கென்டின்" நடத்தும் பெண் மணியிடம் போனேன்' அவள் வாடிக்கையாளர்களிடம் பணத்தை வாங்கி மிகுதி சில்லறைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் என்னைக் கண்டுவிட்டுச் சிரித்தாள். பிறகு சொன்னாள்,

"என்ன சேர் ஏதும் வேணுமா.. சேர் சேதி தெரியுமா? ஓங்கட பிரென்ட் சுரேஸ்" சனிக்கிழம போல போனது"

எனக்கு தலை சுற்றியது. வானமே உடைந்து தலையில் விழுவது போல இருந்தது.

நான் அதிர்ச்சியானேன்.

"சேர், என்ன யோசிக்கிறீங்க..?"

அந்தப் பெண்மணியின் குரல் என்னை மீண்டும் சுயநினைவுக்கு கொண்டு வந்தது.

நான் என்னை சுதாகரித்துக் கொண்டே "என்ன நடந்தது?" என்றேன் அவசரமாக.

"சேர் சனிக்கிழமை பொடியன் கோல்பேர்ஸ்க்கு போரதுனு செல்லிட்டு போன, இரவைக்கி வரல.. எங்கடவர்கிட்டயும் இத சென்னேன். பொடியன்கிட்ட போனும் இல்ல. ஞாயித்துகெழம யாரோ ஜீப்புல வந்து எறங்கி "பொடியன் உட்டு பேக் எங்கைக்கு இருக்குதுனு கேட்டு பேக்க தொறந்து பாத்துட்டு செட்டிபிக்கேட் எல்லாத்தையும் எடுத்துட்டு போர்" என்றாள் அந்தப் பெண்மணி.

"அட நீங்க யாருனு கேக்கலையா?" என்றேன் பதற்றமாக நான்.

"தம்சே கட்ட வானவானு அவங்க சென்னாங்க" என்ற அவள் அப்பாவியாக நின்றாள்.

நான் ஒன்றும் பேசாமலே கென்டினுக்கு வெளியிலில் வந்து எனது அலுவலக நாற்காலியில் அமர்ந்தேன்.

"டெலிகொம்" தொலைபேசி விபரக்கோவை எந்த மேசையில் இருக்கிறது என்பதை முதலில் "தேடவேண்டும்" என நான் நினைத்தேன்.

(நிறைவு)

## காத்திருப்பு

த.ஜெயசீலன்

கால நதிக்கரையில் காத்துள்ளேன்.
காலநதி
சீரான வேகத்தில்
பயணஞ்செய் தோடிடுது!
கால நதியின் கரையெல்லாம் யௌவனங்கள்.
கால நதியின் கரைகளெங்கும் விளைநிலங்கள்.
கால நதியின் கரையெங்கும் நகரங்கள்.
கால நதியின்மேல் கணக்கற்ற ஓடங்கள்.
கால நதியினிலும் கரையினிலும் மானுடர்கள்.
கால நதியில்
கரைபுரளும் பாடல்கள்.
கால நதியின்மேல்
கண்சிமிட்டும் பெருங்கனாக்கள்.
"கால நதியில் மகிழ்ச்சி மட்டும் ததும்பிடுதா?"
கேட்க ஒருஅசரீரி
சுட்டுவிரல் நீட்டிற்று.
ஆங்கே அந்தக் கரைகளிலே....
சிதைந்திடிந்த
கோட்டைகள், தகர்ந்த கொத்தளங்கள்,
திட்டமிட்டு
வேட்டையாடப் பட்ட நகரின் சிதிலங்கள்,
புதைந்தும் பாதி புதையாதும்
அழுகிற
புழுக்கள் புரளும் சடலங்கள்,
துண்டுதுண்டாய்
அவயவங்கள்,
அங்கிருந் தடிக்கும் பிணவாடை,
மூக்கைத் திருப்பிஎன் முன்பார்த்தேன்
காலநதி
ஓடிக் கலக்கும் கழிமுகமும் மாகடலும்
தூரக் கிடக்க
துயரும் மகிழ்ச்சியதும்
சமவிகிதமான நதியின் கரையிலொரு
சாட்சியென்று:
வாழ்வு தருகின்ற படிப்பினையைச்
சோதித்துப் பார்க்கின்ற சூழலை எதிர்பார்த்து:
"வாழ்வுவைக்கும் பரீட்சைகளில்
வாழ்வேனோ வீழ்வேனோ
யானென்'' றெதிர்வுகூறும் ஞானமற்று:
நம்பிக்கை
நீள, 'இயற்கை நியாயத்தில்'
பாரபட்சம்
வாராது என்றென் மனஞ்சொல்ல
சிறுபதர்நான்
கால நதிக்கரையில் காத்துள்ளேன்!
காத்திருப்பேன்!!

# தமிழகச் செய்திகள்

கே.ஜி.மகாதேவா

## 'ஞானம்' போர் இலக்கியச் சிறப்பு இதழுக்கு தமிழ்நாட்டில் கிடைத்த பெரும் வரவேற்பு

தாய்வீட்டில்தனது பிரசவத்தைவைத்து, அந்தத் தாய்மைக்கதகதப்பு அன்னையின் அரவணைப்பில் தணிவதற்குள் தொப்புள் கொடி உறவைத்தேடி தாய்த் தமிழகம் வந்து தனது 'குழந்தை'யை அறிமுகப்படுத்திய 'ஞானம்'; தமிழகத்தில் திருச்சி, தஞ்சாவூர், சென்னை பல்கலைக்கழகங்கள் மட்டத்தில் மட்டுமின்றி முக்கிய நகரங்களிலும் பெரும் வரவேற்பைப் பெற்று, தமிழ் அறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், விமர்சகர்களின் 'முன்னோடி இலக்கியம்' என்ற முத்திரையைப் பதித்துவிட்டது.

**மரணமே வாழ்வான நிஜத்தின் சாட்சியம் 'ஞானம்'**

தமிழ் நாட்டில் இப்படியானதொரு தரமான முழு இலக்கிய சஞ்சிகை இல்லையே என்று ஏக்கத்துடன் வருத்தப்பட்ட தமிழகத்தின் மூத்த இலக்கிய நடுநிலை விமர்சகர்கள்; "ஈழத்துப் போர் இலக்கியமாக வெளிவந்திருக்கும் 'ஞானம்' நூற்று ஐம்பதாவது இதழ், மரணமே அங்கு வாழ்வாகி விட்ட நிஜத்தைப் பிரதிபலிப்பதன் மூலம் ஈழத் தமிழருக்கு ஏற்பட்ட கொடுமைகள், இனப்படுகொலைகளை நாளைய சந்ததி, நூற் றாண்டுகள் கழிந்தும் விளக்கமாக அறிந்து கொள்ள 'ஞானம் போர் இலக்கியச்சிறப்பிதழ்' ஒரு கண்கண்ட சாட்சியாக இருக்கும்" என்று பதிவு செய்துள்ளனர்.

நவம்பர் மாதம் இருபத்து ஐந்தாம் திகதி 'ஞானம்' 150ஆவது இதழ் வெளியிடப்பட்டு, அடுத்த பத்து நாட்களில் அதன் அறிமுகவிழாவை தமிழ் நாட்டின் பல நகரங்களில் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனும் நிர்வாக ஆசிரியர் ஞா.பாலச்சந்திரனும் சிறப்பாக நடத்தினர். முதலில், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலும், இதனைத் தொடர்ந்து நாமக்கல், திருச்சி நகர்களிலும் பின்னர் கோயம்புத்தூரிலும், கடைசியாக சென்னை பல்கலைக்கழகத்திலும் 'ஞானம்' போர் இலக்கியச் சிறப்பிதழ் அறிமுகம், கலந்து ரையாடல் நடைபெற்றது. எதிர்நோக்கிய எல்லாக் கலந்துரையாடல்களிலும் தி.ஞானசேகரன்; சிறப்பிதழில் உள்ள முக்கிய சில கவிதைகள், கட்டுரைகள், கதைகளின் கருப்பொருளை சுருக்கமாகக் கூறி, போர் இலக்கியப் படைப்புகளின் உண்மை நிலையை தெளிவுபடுத்தி, இப்படைப்புகள் ஒவ்வொன்றும் நிதர்சனத்தை மட்டுமே பேசுகின்றன என்று தெரிவித்தார். இதன் அடிப்படையில் சந்தேகங்களும், கேள்வி களும் தாராளமாகத் தலை தூக்கின. பிரதம ஆசிரியரும் சளைக்காமல் நிதானமாகப் பதில் அளித்து திருப்திப்படுத்தினார்.

**திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக சந்திப்பில் மனதைத் தொட்ட 'கோணேஸ்வரிகள்' கவிதை**

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில், பெரியார் உயர் ஆய்வுமையத்தில், மையத்தின் தலைவர் பேராசிரியர் இரா. தாமோதரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், கலாநிதி பட்ட ஆய்வாளர்கள் உட்பட ஆய்வு மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். போர் இலக்கியச் சிறப்பிதழ் குறித்து அறிமுகப்படுத்திய தி.ஞானசேகரன்,




திருகோணமலையில் பண்ணிரண்டு பொலிஸா ரின் காமப்பசிக் கொடுமைக்கு இலக்கான கோணேஸ்வரியின் அவலத்தைப் பிரதி பலிக்கும் 'கோணேஸ்வரிகள்' கவிதை யைப் படித்தபோது, வரிவரியாக இரு தடவைகள் கூறியபோது, அந்த உண்மைச் சம்பவ இடத்துக்கே அழைத்துச் சென்ற உணர்வு ஆய்வு மாணவிகளுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்கள், கண் கலங்கி விட்டனர். கலாநிதி (முனைவர்) பட்ட ஆய்வாளர் ம.லோகேஸ்வரன் தமது நன்றி உரையில், "ஞானத்தின் போர் இலக்கியச் சிறப்பிதழ் உலகத் தமிழருக்குக் கிடைத்த ஒரு ஆவணம் என்றும், பல்கலைக்கழக மாணவர்களின் பல்வேறு துறை ஆய்வுகளுக்கு இச்சிறப்பிதழ் ஒரு ஆர்வத்தைத் தூண்டுவதுடன், "பெரும் துணையாகவும் இருக்கும்" என்றும் குறிப்பிட்டார்.

**இலக்கிய வளர்ச்சியில் 'ஞானம்': தஞ்சை மாணவி கலாநிதி பட்டம்**

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் டாக்டர்.எம்.திருமலையை 'ஞானம்' தி.ஞானசேகரன் சந்தித்து சிறப்பிதழைக் கையளித்தபோது பெரு மகிழ்வுடன் பார்வையிட்டு, அதன் வடிவமைப்பு உள்ளடக்கம் கண்டு; "மிகவும் நேர்த்தியாக உள்ளது. படைப்புகளும் ஆர்வத்தை தூண்டுகின்றன" என்று பாராட்டினார். துணைவேந்தர் இவ்வருடம் பெப்ரவரி மாதம் தான் பதவியேற்ற விபரம் அறிந்து ஞானத்துக்கும் பல்கலைக்கழகங்களுக்குமிடையே ஏற்பட்ட இலக்கியப் பாலம் குறித்து பிரதம ஆசிரியர் விளக்கினார்.

"தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு பல வருடங்களாக 'ஞானம்' சஞ்சிகையை





அனுப்பிவருகின்றோம். இதன் ஆக்கங்கள் மீது இலங்கையில் சில பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாணவ, மாணவிகள், கற்கை நெறிக்காகவும், பட்டப்படிப்புக்காகவும், டிப்ளோமா பரீட்சைக்காகவும், ஆய்வுகள் மேற்கொண்டு சித்தியடைந்துள்ளனர். இந்த வரிசையில் தஞ்சைப் பல்லைக்கழக மாணவி மா.ஷீலா, 'ஞானம்' முதல் இருபத்துநான்கு இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளை ஆய்வு செய்து, இலக்கியத்தில் பட்ட மேற்படிப்பு (எம்.பில்) பெற்றுள்ளார். இதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி.கு.ரேணுகாதேவி 'ஞானம்' முதல் ஐம்பது சஞ்சிகைகளில் உள்ள பல்வேறு ஆக்கங்கள் மீதும் ஆய்வுமேற்கொண்டு, இலங்கை தமிழிலக்கிய வளர்ச்சியில் 'ஞானம்' இதழின் பங்களிப்பு குறித்து கலாநிதி (பி எச்.டி) பட்டம் பெற இருக்கின்றார்" என்று 'ஞானம்' இலக்கியத்தரம் குறித்து தி.ஞானசேகரன் துணைவேந்தரிடம் விபரித்தபோது அவர் ஆச்சரியப்பட்டார். இங்குள்ள மாணவ, மாணவிகளின் 'ஞானம்' ஆய்வு முயற்சிகளுக்கு பல்கலைக்கழகம் துணை நிற்கும் என்றும் சஞ்சிகையின் முதல்தர இலக்கியப் பணிகளுக்கு பாராட்டு தெரிவிப்பதாகவும் கூறினார்.

**"போர்ச்சூழலை இலக்கிய வழியாகப் பார்த்தோம்" – கு.சி.பா.**

நாமக்கல் செல்வம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இந்திய நாவலாசிரியர் கு.சின்னப்ப பாரதி தலைமையில்; செல்வம் கல்வி நிறுவனங்கள் தாளாளரும், கு.சி.பா. அறக்கட்டளைத் தலைவருமான டாக்டர் பொ. செல்வராஜ், செல்வம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் பேராசிரியர் நா.செந்தில்குமார் மற்றும் இலக்கிய விமர்சகர்கள், பேராசிரியர்கள், தமிழாசிரியர்கள், கவிஞர்கள் பலரும் பங்குகொண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. கு.சின்னப்பபாரதி தமது தலைமை உரையில்; "ஞானம் சஞ்சிகையின் 150ஆவது இதழ் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழாக வெளிவந்து தமிழ் இலக்கியத்தில் ஒரு முன்னோடியாக முக்கிய ஆவணத்தைப் பதிவு செய்திருக்கிறது. இலங்கையில் முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற போர்ச்சூழலை இலக்கிய வழியாகப் பார்வையிட 'ஞானம்' கடுமையாக உழைத்திருக்கிறது. இலங்கையிலும் சரி, புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் சரி, இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் நிறையவே படைக்கின்றார்கள். அந்தப் படைப்புகளில் தமிழ் மக்களின் வலிகள் பதிவு செய்யப்படுகின்றன. இந்த வகையில், காலத்தின் கட்டாயம் அறிந்து போர் இலக்கியத்தை துணிச்சலுடன் கதை, கட்டுரை, கவிதை, நேர்காணல் வடிவங்களில் உண்மை நிலையைத் தொகுத்து, தனது இலக்கியப்பணி மூலம் நாளைய சமுதாயத் தேவையை நிறைவு செய்திருக்கிறது. 'ஞானம்' வெளியீடாக வந்த 'ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்' முக்கியமான பதிவு, வரலாற்றில் ஆவணமாக பாதுகாக்கப்பட வேண்டியது. இப்போர் இலக்கியம் நிச்சயமாக என்றும், நிரந்தரமாகப் பேசப்படும்" என்று சான்றிதழ் கொடுத்தார்.



**"ஈழத் தமிழ்ப் படைப்பாளிகள் தமிழை சுவாசிக்கிறார்கள்"**

திருச்சி நகரில் 'இனிய நந்தவனம்' சிற்றிதழ் சார்பில், அதன் நிர்வாக ஆசிரியர் ரெ. முகமது அபுபக்கர் சித்திக் தலைமையில் அவரது இலக்கிய கூடத்தில் 'ஞானம்' ஆசிரியருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. திருச்சிமாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் ஜவஹர் ஆறுமுகம் தலைமையில் எழுத்தாளர்கள், பல்துறைக் கலைஞர்கள், தமிழாசிரியர்கள், இலக்கிய அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். தலைவர் தமதுரையில், ஞானத்தின் இலக்கியப் பங்களிப்பு தமிழ் இலக்கிய தளத்தில் ஒரு வழிகாட்டி என்று பெருமை கூற; ஜவஹர் ஆறுமுகம், "தமிழ்




நாட்டில் தமிழை வைத்து அரசியல், பணம், புகழ் என்று பிழைக்கிறார்கள். ஆனால், இலங்கையில் தமிழ்ப் படைப்பாளிகள் உணர்வு பூர்வமாக தமிழை நேசிக்கிறார்கள். சுவாசிக்கின்றார்கள்" என்று தெரிவித்தார். மலேசிய சமூகசேவகரும், தொழில் அதிபருமான ஏ.எல்.அருண்; "ஞானம் சஞ்சிகையின் போர் இலக்கியம் சர்வதேச ரீதியில் பேசப்பட வேண்டும். மலேசிய தமிழருக்கு, ஞானத்தின் போர் இலக்கியத்தின் அவசர அவசியத்துக்கு, மலேசியா வருமாறு ஆசிரியரை அன்புடன் அழைக்கின்றேன். சிறப்பிதழை மலேசியாவில் பரவலாக அறிமுகப்படுத்தி, ஈழத் தமிழர்தம் போர் வலியை இலக்கியரீதியாக உணரச்செய்ய வேண்டிய முழுப்பொறுப்பையும் எமது அமைப்பு ஏற்றுக்கொள்ளும்" என்று அழைப்பு விடுத்தார். 'நந்தவனம்' ஆசிரியர் த.சந்திரசேகரன், ஞானம் இதழின் தூய்மை யான இலக்கியப் பணியை பட்டியலிட்டு, போர் இலக்கியம், தமிழ் இலக்கியத்தில் ஒரு மைல்கல் என்று கூறினார். பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனுக்கும், நிர்வாக ஆசிரியர் ஞா.பாலச்சந்திரனுக்கும் பலர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

**"ஞானம் போன்று முழு இலக்கிய சஞ்சிகை தமிழ் நாட்டில் இல்லை" கோவை கலந்துரையாடலில் ஞானி**

கோயம்புத்தூர் நகரில் சிபி கல்வி நிறுவனத்தில் 'தமிழ் ஞாயிறு கோவை ஞானி தலைமையில் நடைபெற்ற அறிமுக விழாவிலும் கலந்துரையாடலிலும் இலக்கிய ஆர்வலர்கள், விமர்சகர்கள், பத்திரிகை யாளர்கள், வந்திருந்தனர். ஆரம்பத்தில் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன், 'ஞானம்' போர்க்கால இலக்கியம் பற்றி விரிவாக அறிமுகம் செய்தார்.

"தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர் என்று உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்தாலும், அவர்கள் உலகப் போரை சந்தித்திருக்கலாம். அந்தச் சூழலில் வாழ்ந்திருக்கலாம். ஆனால், தங்கள் இனத்துக்கு எதிராக ஏவி விடப்பட்ட போரைச் சந்தித்திருக்கமாட்டார்கள். இலங்கைத் தமிழர்கள்தான் போரை சந்தித்தவர்கள். வலிகளைச் சுமப்பவர்கள். இப்படியான ஒரு காலகட்டத்தில்தான் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழை கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. விளைவுகளைக் கண்டு பயப்படாமல், உண்மைச் சம்பவங்களை உண்மையாக, பாதிக்கப்பட்ட படைப்பாளிகளிடமிருந்து பெறுவதென்று முடிவுசெய்து, அவர்களிட மிருந்தே கவிதை, கதை, கட்டுரை பெற்றுக் கொண்டோம். படைப்புகளின் கருப்பொருள்



எல்லாமே சொந்த அனுபவம் பேசுபவை. இங்கு 'யாவும் கற்பனை' இல்லை. மரணமே வாழ்வாகி விட்ட நிஜத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியம்இது. தலித்இலக்கியம், பெண்ணிய இலக்கியம் போல், போர் இலக்கியம் இது. போர்எங்கு நடக்கிறதோ அங்கெல்லாம் போர் இலக்கியம் வெளிவந்திருக்கிறது. ஆனால் அவை எல்லாம் இரண்டு நாடுகளுக்கிடையே நடந்தவை. இலங்கையில் மொழி, இனம், கலாசாரம் என்று ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக கட்டவிழத்து விடப்பட்ட போரை மையமாக்கிக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியம் இது. ஞானத்தில் வந்தது மட்டுமல்ல, எமது தேடல், பல்வேறு இதழ்களிலும் வெளியான போர்ப் பாதிப்பு படைப்புகளையும் மறுபிரசுரம் செய்துள்ளோம். ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தில், போர் இலக்கியத்தை தனியாக வகுத்து, தொகுத்தவர்கள் ஈழத்துப் படைப்பாளிகள் எனும் பெருமை எங்களுக்கு இருக்கிறது" என்று 'ஞானம்' பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் விளக்கமளித்தார்.

தலைமை வகித்த கோவை ஞானி; "ஞானம் ரொம்ப தரமான இலக்கிய இதழ். இலக்கியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, இப்படியான ஒரு இதழ் தமிழ் நாட்டில் வெளிவராதது பெரிய குறை. அங்கு வாழும் எழுத்தாளர்களும், புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர்களும் தங்களுக்கு எதிரான போராட்டங்களை பதிவு செய்து கொண்டே வருகின்றனர். ஈழவிடுதலைப்போரில் இந்தியா மட்டுமல்ல, அரசியல் கட்சிகள், தமிழக அரசியல் வாதிகள் எடுத்த நிலைப்பாடு பாதிப்பைக் கொடுத்தாலும், ஈழத்தில் அந்த மக்கள் சுமந்த வலிகளுக்கு முன்பாக நாங்கள் தலைகுனிந்து நிற்கிறோம்" என்று வருத்தம் தெரிவித்தார்.

**"நூறு ஆண்டுகளின் பின்னரும் வெட்டு முகத்தை தரிசிக்கலாம்"**

"போர் இலக்கியங்கள் ஒன்றும் புதிதல்ல. உலக வரலாற்றில் எங்கெல்லாம் போர்கள் நடைபெற்றனவோ, அங்கெல்லாம் போர் இலக்கியங்கள் தோன்றி உள்ளன. குறிப்பாக; முதலாம், இரண்டாம் உலகப்போரின் போது மட்டுமல்ல, நாடுகளில் புரட்சி வெடிக்கும்போது கூட போர் இலக்கியங்கள் பிறக்கின்றன. இவற்றுடன் ஒப்பிடும்போது நாம் வேறுபட்டு காணப்படுகின்றோம். முதலாம், இரண்டாம் உலகப் போர் பல நாடுகளுக்கிடையே நடந்தவை. நமது நிலைப்பாடு; நாட்டுக்குள் மொழி, இனம், மதம், கலாசாரம் ஒடுக்கப்படும்போது, பீறிட்டு எழும் உணர்வுகளின் எழுச்சியாக போர் இலக்கியம் பிறக்கிறது. மூன்று தசாப்தங்களைக் கொண்ட விடுதலைப்போர் ஆயுதரீதியாக முள்ளிவாய்க்காலில் முடிந்தது. மக்களின் வாழ்க்கையும் பல பிரிவுகளாக முடங்கியது. அமைதிச் சூழல் முற்றிலுமாக சிதைந்தது. தமிழ்த் தேசியப் போரின் அடிப்படைகளும், அவை வழியான விளைவுகளுமே ஈழத்துப் போர் இலக்கியங்களின் பின்னணியாகும்." என்று 'ஞானம்' நிர்வாக ஆசிரியர் ஞா.பாலச்சந்திரன் தமது விளக்க உரையில், ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழின் தோற்ற அவசியம் குறித்து பேசுகையில் தெரிவித்தார். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இடம் பெற்ற அறிமுகம், கலந்துரையாடலில் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் அறிமுகத்தின் பின்னர் ஞா.பாலச்சந்திரன்; 'ஞானம்' இதழின் ஆரம்பம் முதல் 150ஆவது சிறப்பிதழ் வரையான பின்னணி பற்றி விளக்கமாகக் கூறி; மாதம், தவறாமல் வெளிவரும் கலை இலக்கிய இதழ் 'ஞானம்' என்றும், இதுவரை வெளிவந்த போர்க்கால இலக்கியங்களிலிருந்து மாறுபட்டுக் காணப் படும் 'ஞானம்' போர் இலக்கியச் சிறப்பிதழில் காணப்படும் படைப்புகளில், களத்தில் பெற்ற அனுபவ எழுத்துக்கள் நிறைய உண்டு என்றும், தமிழ் இலக்கிய உலகின் அங்கீகாரம் பெற்றது 'ஞானம்' என்றும் பெருமை கூறினார்.

**சென்னைப் பல்கலைக்கழகத்தில் திரண்ட ஆய்வு மாணவர்கள்**

'ஞானம்' போர் இலக்கியச் சிறப்பிதழின் மற்றுமொரு அறிமுகம் - கலந்துரையாடல் சென்னை பல்கலைக்கழகத்தில் நடை பெற்றது. பல்கலைக்கழக பிரதான மண்ட பத்தில் பேராசிரியர் அரசு தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில்; சிறப்பித ழின் அவசியம், படைப்புகள் குறித்து பிரதம ஆசிரியரும், நிர்வாக ஆசிரியரும் விளக்கிய பின்னர், ஆய்வு மாணவர்கள் தங்களது சந்தேகங்களையும், வினாக்களையும் எழுப்பி யதும், தி. ஞானசேகரன் விளக்கமாகப் பதில் அளித்தார். நிர்வாக ஆசிரியரும் படைப்புகளின் வகுத்தல், தொகுத்தல் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். இருநூற்றுக்கும்






அதிகமான மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

**"வெட்டுண்ட கைமீதும் கடிகாரம் ஓடும்!"**

'ஞானம்' ஆசிரியரின் ஒருவார கால அறிமுகம் - கலந்துரையாடலில், போர் இலக்கியச் சிறப்பிதழ் குறித்த விமர்சனத்தைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டது. தமிழ் அறிஞர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலருடன் நான் தொடர்பு கொண்டபோது, இரண்டு வார அவகாசம் அவசியம் தேவை என்று கூறிவிட்டனர். ஆனாலும் விடாக் கண்டனாக நான் தொடர்பு கொண்டதில், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயலகத் தமிழ்த்துறை பேராசிரியர் தெ.வெற்றிச்செல்வன், 'ஞானம் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்' குறித்த தமது விமர்சனத்தை வெளியிட்டார்.



"மலரின் நுழைவாயிலாக அமைந்திருக்கிற முன்னுரை மிகவிரிவான ஆழமான காத்திரமான ஈழத்தேசிய வரலாற்றுப் பிழிவு எனலாம். போலவே மு.பொ. நண்பர் மதுசூதனன், தனபாலசிங்கம் ஆகியோருடன் ஞானம் ஆசிரியர் நிகழ்த்தியுள்ள கலந்துரையாடல் உலகளாவிய போரிலக்கியப் பின்னணியில் ஈழப்போரிலக்கிய



இடத்தை ஆய்கிறது. புதுவை இரத்தினதுரை எம்.ஏ. நுஃமான் என எதிரெதிரான கருத்தியல் நிலைப்பாடுள்ளோர் குறித்து மொழிதலுக்கான ஜனநாயகபூர்வமான இடத்தை வழங்கியுள்ளதெனலாம். இஸ்லாமிய படைப்பாளிகள்-போராளிகள் மீதான முஸ்லீம்களின் விமர்சனம் தமிழ்தேசியர்களின் போர்குறித்த சுயவிமர்சனம் போரின்போக்கு சவால்கள் பின்னடைவுகள் படிப்பினைகள் முகங்கொடுக்கவேண்டிய விடயங்கள் என பூரணத்துவமான அடையாளங் கொண்டிலங்குகிறது மலர். கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நுண்கலைகள், நிகழ்த்துக்கலைகள் எனப் பன்முகங்காட்டும் மலர் படிப்போர் ஊன் உருக மட்டுமல்ல தமிழ்தேசிய எதிர்காலத்தை வடிவமைக்க வல்ல உந்துசக்தியைத் தந்திருக்கிறது எனலாம்.

"போரும் காதலும் தமிழில் மட்டுமல்லாது, பல மொழியினங்களில் பண்டுதொட்டு உள்ளுறைந்திருக்கிறது. போரற்ற உலகுக்கான போராட்டம் நடந்துவருவதாகச் சொல்லப்பட்டாலும் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு காரணங்களை மையமிட்டுப் போர்கள் நடந்தே வந்திருக்கின்றன. சொல்லப் போனால் போரற்ற உலகு என்பதே ஒரு நகைமுரண்தான். இயற்கையான எதிர்வுகளிடையே அல்லது மாவோ வார்த்தையில் சொன்னால் நட்பு மற்றும் பகை முரண்களிடையே போராட்டம் என்பது தவிர்க்கவியலாதது. மேலும் அந்தப்போராட்டமே உலகை இயக்கிவருகிறது எனலாம். இது இயல்பானது. ஆனால் இன்றைய போர்கள் செயற்கையாக உருவாக்கப்படுபவை. வலுத்த நாட்டுப் பிணந்தின்னிக் கழுகுகள் இளைத்த நாட்டு வானில் எப்போதும் பறந்தலையும் காலமிது.

சொந்த நாட்டு மக்களை அகதிகளாக்கி அலைக்கழிக்கும் யுகமிது. இனக்குழு காலத்திய தகவமைப்புப் போர்கள்; உடைமைச் சமூக அமைப்பில் மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை எனத்திரளும் சொத்துடைமைக் கண்ணோட்டத்தில் குருதி சிந்திய போர்கள்... மன்னராட்சி கால ராஜாதிராஜ அதி வீர ராஜ ராஜகுல திலக ராஜகம்பீர பராக்கிரம அமோக விளைச்சலின் அறுவடைக்களமான போர்கள்... பேரரசுகால விரிவாக்கங்கள்... பாசறைகள்... ஏகாதிபத்திய ராணுவ முற்றுகைகள்... அவசரநிலைப் பிரகடனங்கள்... சாதி / மத / இன / நிற வெறிகள் என போர் தன்னை பலபடித்தான அடையாளங்களோடு நிலைநிறுத்தியே வந்திருக்கிறது. வந்துகொண்டும் இருக்கிறது. எனினும் போரற்ற உலகு குறித்தே இன்றும் சிந்திக்கப்படுகிறது. இந்த இடத்தில்தான் போரற்ற என்கிற சொல்லாடலில் தெளிவு தேவையாயிருக்கிறது. இந்தத் தெளிவை பாரதிதாசனில் நாம் பெறமுடியும். கெட்ட போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம் என்று அவர் பேசுவதில் கெட்ட என்கிற சொல் பெறுகிற அழுத்தம் மிக முக்கியமாக நோக்கத்தக்கது. எனவே போர் வேண்டும். ஆனால் கெட்ட போர் என்பது கூடாது என்பதில் ஒரு தெளிவு கிடைக்கிறது.

"போரும் இலக்கியமும் என்கிற பொருண்மையில் ஆய்வு செய்தோமானால் உலகளாவிய வலைப்பின்னல்கள் பல அகப்படக் காணலாம். இந்த இயங்குதளத்தில் தான் ரஷ்யப் புரட்சி - இலக்கிய சாட்சியம், சீன நாட்டுப் புனைவுகள், பர்மிய ஆக்கங்கள், வியட்நாமியப் படைப்புகள், பாலஸ்தீன எழுத்துக்கள் காலனிய கால, பின்னைக் காலனிய காலப் பதிவுகள் என விரிந்து செல்கின்றன. புறத்திணைப் படைப்புகள் தொட்டு இன்றைய ஈழத்துப் படைப்புகள் / புலம்பெயர் / புகலிட ஆக்கங்கள் வரை தமிழில் இத்தகைய வரைபடங்களை நாம் அவதானிக்க முடியும். ஆனால் புறத்திணைப் படைப்புகள் அக்காலப் போர் நெறிகளை ஒட்டி இரண்டு தரப்பினரின் போர் வீரர்கள் சார்ந்ததான பதிவுகளைத் தருகிறது. எங்கும் சாமான்ய மக்கள் போரின் வன்கொடுமைக்காளாக்கப்பட்ட நிலைகுறித்து காணவியலாது. இன்றைய ஈழச்சூழல் விவரணைக்கு அப்பாற்பட்ட கொடுஞ்செயல்களை இலக்கியப் பதிவாகக் கொண்டது. அதிநவீன அழித்தொழிப்பு மூலம் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து துவம்சம் செய்து உலகளாவிய அதிர்ச்சிப் பார்வைகளை அலட்சியப்படுத்தி கடைவாயில் வழியும் குருதிநக்கியபடி நகர்வது. கலை இலக்கிய ஆவணங்களை தீக்கிரையாக்கி ஆட்டம் போடுவது. பெண்மையின் யோனி பாய்ச்சி குழந்தையை வெட்டிச் கூறுபோடுவது. மனித உரிமையின் காதில் பென்சில் செருகி சுத்தியல் கொண்டு அடிப்பது. எடுத்துச் சென்ற குண்டுகள் ஒருவேளை யுத்த முனையில் பயன்படுத்த தேவையில்லாத நிலையில் திரும்ப நேர்ந்தால் சக ராணுவ வீரர்களின் கேலிக்கு ஆளாக நேரிடுமே என்று போகிற வழியில் பொழுதுபோக்காக யார் வீட்டிலாவது வீசிச்செல்வது. குண்டுகள் பதுக்கியிருக்கிறாயா எனக் கேட்டு மார்பகங்களுக்குள் கைவிட்டுத் துழாவுவது எந்த நேரத்திலும் பெண்டாள வன்கொடுமைக்கு ஆளாக்கத்துடிப்பது. இன அழிப்பின் உச்சமாய் குடும்ப அறுவைசெய்வது. முள்வேலி முகாமுக்குள் அடைப்பது கொத்துக் குண்டுகள் வீசி குரூரமாய் அழிப்பது. உலகின் மூலைமுடுக்குகளில் குப்பைகளைப்போல மனித அகதிகளைக் கொட்டிக்குவிப்பது பயம் பதற்றம்... அலைந்துழல்வின் அநாதரவுத் தன்மை தூக்கமின்மை என தீராத மனநோய்களைக் கொடைகொடுப்பது. புதிய மொழிச்சூழல் பண்பாட்டுச் சூழல் கல்வி வேலைவாய்ப்பு இப்படிப் பல நிலைகளில் உளமுறிவுகளைத் திணிப்பது... இத்தகைய பின்புலத்திலிருந்துதான் படைப்பாக்கங்களைத் தொகுத்திருப்பதன் மூலம் ஈழப்போரின் இயங்கியல் நீட்சியாக ஞானம் போர் இலக்கியச் சிறப்பிதழ் மிக முக்கியமான காலப் பதிவாக ஈழத்தமிழ் மக்களின் மனசாட்சியாக அடையாளப்பட்டிருக்கிறது.

"மலரை முழுக்கப் படிக்க கால அவகாசமற்று ஓரிருநாட்களில் எழுதப் பணிக்கப்பட்ட இம்மதிப்புரை இன்னும் முழுமைபெற வேண்டிய நிலையில்.

முடிவாக ஈழப்போர் முடிந்து அமைதியான வாழ்வு வரும்வரை இத்தகைய முயற்சிகளின் தேவையை மிகுந்த அக்கறையோடு தமிழ்ச்சமூகம் உள்வாங்கவேண்டும். தேன்கூடு படத்திற்காக ருத்ரதாண்டவ தாளகதியில் எழுதிய வரிகளோட முடிக்கிறேன்.

"வெட்டுண்ட கைமீதும் கடிகாரம் ஓடும்
விடியாமல் முடியாது வெஞ்சமர் ஈழம்
தக தகிட தக தகிட திகிட தித்தோம்"

# மு.பொ. பக்கம்



## அது 1962ஐ ஒட்டிய காலம்

எஸ்.பொன்னுத்துரையின் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டு மட்டக்களப்பில் நடந்தேறிய இலக்கிய விழாவில் பங்குபற்றுமாறு இலங்கையெங்குமிருந்த தமிழ்எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியோர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த விழாவில் பங்குபற்றிய மு.தவும் நானும் ஏனைய வடபகுதி எழுத்தாளர்களோடும் சேர்ந்து யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தோம். பொல்காவலையில் இறங்கிய நாங்கள் யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் ரயிலில் ஏறிக்கொண்டோம். நாங்கள் ஏறிய கொம்பாட்மென்டில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் சிங்களப் பொலிசார் சிவில் உடையில் இருந்தனர். (எம்மோடு வந்த எழுத்தாளர்கள் இருப்பதற்கு இடந்தேடி வெவ்வேறு கொம்பாட்மென்டுக்களுக்கு போய்விட்டிருந்தனர்) பொலிசார் குடித்து விட்டிருந்தனர் என்பது அவர்கள் பெரிதாகச் சிங்களத்தில் கதைத்துக்கொண்டும் கூச்ச லிட்டுக் கொண்டும் இருந்ததில் தெரிந்தது. அவர்கள் இருந்த இடத்தில் இன்னும் இரண் டொருவர் இருக்கக்கூடியதாக இருந்தும், அவர்கள் இருந்து கொண்டிருந்த விதமும் கதைப்பும் சிரிப்பும் அவர்களுக்கருகே போய் அமர்ந்துகொள்வது ஒரு அசௌகரியமான விஷயமே என்பதைக் காட்டிற்று. என்றாலும் வெகுநேரம் நின்று கொண்டு பிரயாணம் செய்து களைத்துப் போன மு.த, தான் இருப்பதற்காக அல்லது என்னை இருக்க வைப்பதற்காக அவர்களைக் கொஞ்சம் தள்ளி இருக்குமாறு கேட்டார். ஆனால் அவர்கள் அதற்கு செவிமடுப்பதாய் இல்லை. மாறாக ஏதோ கேலி பண்ணிச் சிரித்தனர். மு.த. விடவில்லை. மீண்டும் அவர்களிடம் அன்பாக இருப்பதற்கு இடம்விட்டுத்தருமாறு கேட்டார். ஆனால் அவர்கள் கூச்சலையும் கேலியையுமே பதிலாகத் தந்தனர். மு.தவின் வார்த்தைகள் தடித்தன. திடீரென ஒருவன் மு.த வை தள்ளிவிட்டு அவர்கன்னத்தில்அறைந்தான். அவ்வளவு தான் அவன் கை அவனிடம் திரும்புவதற்கு முன்னரே மு.தவின் கை அவன் மூஞ்சியைப் பதம் பார்த்தது. நானும் இதற்குள் இழுபட்டுக்கொள்ள அங்கிருந்த அனைவரும் எழுந்து இருசாராரையும் விலக்குப் பிடித்துவிட முயற்சித்த போது கொம்பாட்மென்டே பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. ஒருவாறாக அமைதி திரும்பியது.

அதன் பின்னர் அவர்கள் போட்டு வந்த காட்டுக் கூச்சலும் வெறியாட்டமும் தானாகவே அடங்கிற்று. அந்த இடம் அமைதிக்குரிய இடமாக மாறியதோடு இருப்பதற்கான இடமும் கிடைத்தது.

இந்நிகழ்வு பற்றி நானும் மு.தவும் பின்னர் கதைத்துக் கொண்ட போது, நான் பின்வருமாறு கேட்டேன். "ஒருவேளை நாங்கள் ஏறிவந்த ரயில் கொழும்பு நோக்கிச் செல்வதாய் இருந்திருந்தால் எங்கள் நிலை என்னவாய் இருந்திருக்கும்?"

மு.த தனக்கேயுரிய வழமையான சிரிப்போடு "இதுதான் எங்கள் பிழையான சிந்தனை முறை. இதனால்தான் தமிழினம் இவ்வாறு ஒடுக்கப்படும் இனமாக மாறியுள்ளது. எதையும் அந்தந்த இடத்தில் அந்தந்த நிலையில் முடித்துக்கொள்ளும் மனநிலை நமக்கு வேண்டும். எதையும் எந்தநேரமும் எதிர்கொள்ளத் தயாரான மனநிலை வேண்டும். இந்த விஷயத்தில் நான் முஸ்லிம்களின் வீரத்தை மெச்சுவேன். அவர்கள் எவ்வளவு சிறுபான்மையினராய் இருந்தாலும் சிங்கள இனவாதிகளின் மத்தியில் அவர்களுக்கொரு சவாலாகவே வாழ்கின்றனர். தனியொருவனாக இருக்கும்போது கூட முஸ்லிம் ஒருவன் தன் அடையாளத்தை மிக வீரத்தோடு பேணுவதை பல இடங்களில் கண்டிருக்கிறேன். சிங்களவர் கூடும் பொது

இடங்களில் தமிழர் தம் மொழியை பேசப் பயந்தவர்களாய் இருக்கும்போது முஸ்லிம்கள் அவ்வாறான இடங்களில் தமிழை சத்தம்போட்டு பேசிக்கொண்டு போகும் அழகே அழகு" என்று பெரிதாகவே பேசியதில் நிறைய உண்மை உண்டென்பதை யாரும் மறுக்க முடியாது. (பார்க்கவும்: வெளிவரவிருக்கும் அடிபெயர்க்கும் நினைவுகள் மு.த. வாழ்க்கை வரலாறு)

இன்றுள்ள முஸ்லிம் சமூகத்தின் நிலை எவ்வாறு உள்ளது? இதற்குப் பதில் தருவதாய் என்.ஆத்மா 'கவிதைகள் காணாமல்போன இரவு' என்ற கவிதையில் பின்வருமாறு கூறுகிறார்.

*"என் சிற்றினத்தின் மீதான*
*இருபக்கப் பேரினவாத அமுக்கம்" பற்றியும்*
*முன்னொருபோதும் நாமறியாதுள*
*எமதுரிமைகள் பற்றியும்*
*அமைச்சனாகிப் போன ஒரு சூதாடியின்கையில்*

*அகப்பட்டுள்ள எங்கள்*
*அரசியல் இயக்கத்தின் அவலம் பற்றியும்*
*நானுட்பட இச்சமூகத்தின்*
*அலட்சிய இருப்பு பற்றியும்*
*கவலை பேசினோம்*
*வாய் சவுக்கும் வரை குமுறிக் குமுறி*
*வெம்பினோம் தான்."*

*1996*இல் வெளியான 'மிக அதிகாலை நீல இருள்' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் ஒன்றில் உள்ள வரிகள் இவை. இவ்வளவு தீர்க்கதரிசனத்தோடு இன்றுள்ள முஸ்லிம் தலைமைகள் பற்றியும் மக்கள் பற்றியும் ஆத்மா எழுதிய வரிகள் என்னை வியக்கவைக்கிறது. இக்கவிதையை இன்றுள்ள முஸ்லிம் தமிழ் அரசியல் சூதாடிகளுக்கு சமர்ப்பிக்கலாம் போல் படுகிறது.

## நான் படித்த புத்தகம்


### ஈழத்துப் போர் இலக்கிய சிறப்பிதழ்

**த**மிழில் யுத்த இலக்கியத்திற்கு நீண்ட கால மரபு இருக்கிறது. புறநானூறு என்ற மாபெரும் இலக்கியத் தொகுப்பின் மூலம், யுத்தத்தை தமிழ்ச் சமூகம் எப்படி அணுகியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், நவீன உலகில் தமிழர்கள் கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தங்கள் விடுதலைக்கான யுத்தம் ஒன்றை நடத்தினார்கள். குருதி வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட அந்த யுத்தத்தின் மாபெரும் தொகை நூல் ஒன்றினை இலங்கையிலிருந்து வெளிவரும் 'ஞானம்' கலை இலக்கிய சஞ்சிகை 600 பக்கங்களில் பெரும் சிறப்பிதழாகக் கொண்டு வந்துள்ளது. யுத்தத்தின் இருண்ட காலப் பதிவுகளையும், தீராத குருதியின் சுவடுகளையும் ஈழத்திலிருந்து கதைகளாகவும் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் ஏராளமான படைப்பாளிகள் பதிவு செய்தார்கள்.




அவற்றின் தேர்ந்தெடுத்த பக்கங்களைக் கொண்ட இந்தத் தொகுப்பு, தமிழின் ஒரு புதிய இலக்கிய வகைமையை முன்னிறுத்துகிறது. கனத்த இதயத்துடன் கடந்து செல்லவே முடியாத பக்கங்கள் இவை. தமிழர்களின் துயர வரலாற்றின் பெரும் ஆவணமாக இந்தத் தொகுப்பு என்றும் இருக்கும்.

"உயிர்மை" இதழ் ஆசிரியர்
மனுஷ்ய புத்திரனுக்கு, ஞானம் ஆசிரியர்
ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழை
"உயிர்மை" காரியாலயத்தில்
(சென்னை) வைத்து வழங்குகிறார்.
எழுத்தாளர் மனுஷ்ய புத்திரன்
ஞானம் போர் இலக்கியச் சிறப்பிதழ்
குறித்து *31-12-2012*
'குங்குமம்" சஞ்சிகையில்
எழுதியிருந்தார்.
அதனை இங்கே பார்க்கலாம்.



காலையில் எழுந்து
கதவை திறந்தேன்
வானம் என் வாசலில்
விழ்ந்து கிடந்தது.

ஆங்காங்கே நட்சத்திரங்கள்
சருகாய் கிடந்தன.
சுற்றுமுற்றும்
தேடிப்பார்த்தேன்
சூரியனை காணவில்லை....
உடைந்து விழுந்த நிலா
புற்தரையெங்கும்
பனியாய் படர்ந்திருந்தது....

வீதிக்கு வந்தேன்
வீதியை காணவில்லை
இரவோடு இரவாக வெள்ளம்
இழுத்துக்கொண்டு போனதாக சொன்னது
மூழ்கி கிடந்த மின்சார கம்பம்.

அழுவதற்காக உதடுகளை
திறக்க முயன்றேன்
ஆமைப்பூட்டுக்கொண்டு
யாரோ பூட்டியிருக்கின்றார்கள்.

விறுவிறு என்று ஓடிச்சென்று
நேற்று கவிதை எழுதிய
நோட்டை திறந்தேன்
கவிதையையும்
காணவில்லை
எஞ்சியிருந்தன
வெறுஞ் சொற்கள் மட்டும்....!!

**கவிஞர்**
**பொத்துவில்**
**அஸ்மின்**

# பேய்மகளிர் ஆண்பாலில் முளைத்தல்

நிணச்சுவை விரும்பி
ஈமப்பெருங்காடென ஆயிற்று
மாம்பழ நாடு

மரணத்தை விளைக்க
மண்டையோட்டை விதைத்து
நிணவயல்
குருதிபாய்ச்சி நனையுமொருகாலம்

வானச் சூரியனோடு
நட்சத்திரங்களையும் உதிர்த்துவிட்டு
விசரியாய்த் திரியுமென்
நிலக்காதலக் கனவு

புல்வெளியே
பயணப்புழுதித் தெருவே
அஞ்சலிக்கீதமிசைக்காதலையும்
பறவையே
மனமடி பெருத்தலையும் நிலமூச்சை
எப்போது விடுவேன்?

இறந்த துண்டங்களைக் கூட்டி
நெருப்பிட்டுக் கூழாக்கி
ஆடுமொரு வேள்விக்கூத்தில்
நீலவுடல்
சிவப்பைக் கழுத்தணிய
பேய்மகளிர் ஆண்பாலில் முளைத்தது.

செ.சுதர்சன்

# கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள்

28



## கன்னத்தில் நீ அறைந்தால்...

கொற்றை பி. கிருஷ்ணானந்தன்

அது ஒரு பிரபல்யமான கல்லூரி. கடற்கரையோடு அண்டிய பிரதேசத்தில் மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி. ஒழுங்குகள் கட்டுப்பாடுகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படுவதிலும் ஆங்கிலேய அதிபர்கள் காலத்திலிருந்து இந்நாள்வரை பேர் சொல்லப்படும் கல்லூரி

மோகனசுந்தரன் அங்கு அதிபராக நியமனம் பெற்று வந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டிருந்த நிலையில் ஒரு மாணவனுக்கு கன்னத்தில் அறைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நடந்தது இதுதான். ஜோன்சன் என்கிற A/L மாணவன் ஒருவன் இப்போது கொஞ்ச நாட்களாகச் சின்னதாகத் தாடி(Ponting)விட்டுக் கொண்டுவரத் தொடங்கியிருந்தான். அதை நீக்கும்படி அதிபர் ஒருநாள் சொல்லிப்பார்த்தார்.. இரண்டாம் நாள் சொல்லிப் பார்த்தார். மூன்றாம் நாள் கண்டிப்பான உத்தரவாகச் சொல்லிப் பார்த்தார்.

சனிஞாயிறு கழித்து திங்கட்கிழமை காலை Assembly யின் போது ஜோன்சன் அதே தாடியுடனே காணப்பட்டான். அதிபருக்கு வந்த கோபத்தில் கொஞ்சமும் யோசிக்காமல் கன்னத்தில் பலமாக அறைந்து விட்டார். சகல ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியிலும் இச்சம்பவம் நடைபெற்ற படியால் சரி பிழை விமர்சனங்களுக்கு அப்பால் இதன் எதிர் விளைவு என்பதிலேயே எல்லோருடைய சிந்தனையும் இருந்தது.

காரணம் ஜோன்சனின் தந்தையார் பெரிய சம்மாட்டியார். முரட்டுத்தனத்துக்குப் பெயர் பெற்றவர். அடிதடிக்கு அஞ்சாதவர். அதிபர் இது பற்றிக் கேள்விப்பட்டதும் கொஞ்சம் பயந்து போனார்தான். ஆனால் அதைக்காட்டிக் கொள்ளவில்லை.

அடுத்தநாள் எதிர்பார்த்தது போலவே ஜோன்சனின் தந்தையார் அல்பிரட் கல்லூரிக்கு வந்து விட்டார். அதிபரின் அலுவலகத்துக்கு வெளியே குறுக்கும்நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். முகத்தில் கோபம் கொப்பளித்திருந்தது. பிரதி அதிபர்வந்து அவரை வெளியே உள்ள கதிரையில் உட்காரும்படி வேண்டியும் அவர்உட்காரவில்லை. கல்லூரியில்ஒரு பதட்டநிலை காணப்பட்டது. அதிபர் தனது அலுவலகத்தில் இருந்தார். பிரதி அதிபர் வந்து அதிபருக்கு நிலைமையை விளங்கப்படுத்திவிட்டு ஏதும் பிரச்சினை வராமலிருக்க பொலிஸ் நிலையத்திற்கு அறிவிப்போமா என்று கேட்டார் அதிபர் மறுத்து விட்டார். அவரை உள்ளே அனுப்பும்படி கூறிவிட்டு யோசித்துக் கொண்டிருந்தார்.

உள்ளே வந்தார் ஜோன்சனின் தந்தையார். அதிபர் நிதானமாகச் சொன்னார். "வாருங்கோ வாருங்கோ மிஸ்டர் அல்பிரட் இருங்கோ.. ஜோன்சன் உங்கடை மகன் எண்டு கேள்விப்பட்டவுடனே இவனின்ரை போக்குப்பற்றி உங்களுக்குச் சொல்லியனுப்பத்தான் நினைச்சனான். நடந்ததெல்லாம் அறிஞ்சிருப்பியள். நீங்கள் இந்த ஊரிலை ஒரு பெரிய மனிசன் சரிபிழை நியாயம் எல்லாம் அறிஞ்சு அதன்படி நடக்கிற ஒருவர். இந்தப்பாடசாலை வளர்ச்சியிலை அக்கறையாக இருக்கிற ஒரு ஆள் எண்டு நான் அறிஞ்சு வச்சிருக்கிறன். ( முழுவதும் பொய்) பிழையெண்டு கண்டால் கொஞ்சமும் தயங்காமல் தடிக்கேக்கிற ஒரு நல்ல மனுசன். இப்படிப்பட்ட ஒரு நல்ல மனுசனுக்கு இப்படி ஒரு பையன் சொல்வழி கேளாதவனாக இருக்கிறான் எண்டு நினைக்கேக்கை எங்களுக்குப் பெரிய ஆச்சரியமா இருக்கு.

ஜோன்சனின் தந்தையாரின் முகம் மெல்ல மெல்ல குளிர் நிலவாக மாறிக்கொண்டு வந்தது.

"சேர் நீங்கள் அவனுக்கு குடுத்த தண்டனை போதாது. அவனுக்குப் பெரிய தண்டனை குடுத்து நல்ல ஒரு பையனாக மாற்ற வேண்டு மெண்டு சொல்லிவிட்டுப் போகத்தான் நான் இப்ப வந்தனான்.. உங்கட சொல்லுக்குக் கட்டுப் படாத ஒருவன் எனக்குத் தேவையில்லை. சேர். அவனை வீட்டிலையும் இனி நான் கவனிச்சுக் கொள்ளுறன். நீங்களும் அவனுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஒரு நல்ல பெடியனாக உருவாக்க வேணும் அதைவிட மேலாக பள்ளிக் கூடத்தக்கு என்ன உதவி ஒத்துழைப்புத் தேவையோ தயங்காமல் என்னைக் கேளுங்கோ. நான் எல்லாம் செய்வன். அவனுக்காக நான் உங்களிட்டை மன்னிப்புக் கேட்கிறன். நான் போயிட்டு வாறன் சேர். .

அதிபருக்குக் கைலாகு கொடுத்து விடைபெற்றார் தந்தையார்.

---

# பழசும் புதுசும்

**29**

**கொற்றை பி. கிருஷ்ணானந்தன்**

வவுனியாவில் உள்ள வங்கிக் கிளை ஒன்றின் முகாமையாளர் தான் ஹரிகேசன். அங்கிருந்து மாற்ற உத்தரவு கிடைத்து, அன்று பிரியாவிடை முதலான சம்பிரதாய நிகழ்வுகள் நடந்தேறிவிடைபெற்றார். அவருடைய பெட்டி படுக்கை மற்றும் பரிசுப் பொருட்களுடன் வவுனியா பஸ் நிலையத்திற்கு போய்ச் சேரவேண்டும். ஒழுங்கு பண்ணியபடி ஒட்டோவும் வந்து நின்றது.

வங்கி அலுவலக உதவியாளனான (PEoN) பரமநாதன் வந்து ஹரிகேசனுடைய உடமைகளை ஒட்டோவில் ஏற்றி, தானும் ஏறிக் கொண்டான்.

"பரமநாதன், உனக்கேன் சிரமம், நானே கொண்டு போறன் நீர் வரவேண்டாம் நில்லும்"

"இல்லை சேர், இல்லை சேர், பஸ் ஸ்ரான்ட் மட்டும் நான் வாறன். எனக்கொரு சிரமமும் இல்லை சேர்."

பரமநாதனின் பதிலில் ஹரிகேசன் திருப்திப் பட்டுக் கொண்டார்.

ஓட்டோ பஸ் ஸ்ரான்ட் வந்தடைந்தது. மூட்டை முடிச்சுக்களை ஒட்டோவில் இருந்து பரமநாதன் கீழே எடுத்து வைக்க ஹரிகேசனும் சேர்ந்து எடுத்துவைக்க முற்பட்டார்.

" நீங்க விடுங்க சேர், நீங்க விடுங்க சேர். அது நான் செய்வன். நீங்க விடுங்க சேர்."

கூறிக்கொண்டே பரமநாதன் இரண்டு கைகளிலும் பைகளைத்தூக்கினான். ஹரிகேசன் தோளில் போட்ட பையுடன் பரமநாதனுக்குப் பின்னே யாழ்ப்பாண பஸ்ஸினை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

இந்த நேரம் பார்த்து யாழ்ப்பாணத்தில் இருந்து வவனியா வந்த பஸ்ஸில் பயணித்த புதிய முகாமையாளர் சந்திரகாந்தன் பெட்டி படுக்கையுடன் பஸ்ஸிலிருந்து இறங்குவதைப் பரமநாதன் அவதானித்தான்.

சுந்திரகாந்தன் ஏற்கனவே உதவி முகாமையாளராக வவுனியாக் கிளையில் கடமையாற்றி யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகிப் போனபடியால் அவரை பரமநாதனுக்கு முன்னரே தெரியும்.


பரமநாதன பழைய முகாமையாளருடைய பையைத் தொப்பென்று நிலத்தில் வைத்தான். புதிய முகாமையாளரை நோக்கி ஓடினான். அவனிடமிருந்து பெட்டி படுக்கை களை வாங்க முற்பட்டான்.

" விடுங்க சேர் விடுங்கோசேர். நான் கொண்டுவாறன்"

கூறிக்கொண்டே மறுக்க மறுக்க அவரது கையில் இருந்து பிடுங்கினான். புதிய முகாமையாளர் பின்தொடர யாவற்றையும் சுமந்து கொண்ட பரமநாதன் இன்னொரு ஓட்டோவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.




குறிஞ்சி நாடன்




நூல்: கவியின் ஏக்கம் (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: ஆ.முல்லை திவ்யன்
வெளியீடு : குரு பிரின்டர்ஸ் - திருநெல்வேலி
விலை : ரூபாய் 150/=

நூலாசிரியர் ஆ.முல்லை திவ்யன் கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவை பிறப்பிடமாகக் கொண்டு கரவெட்டியையும் பொலிகண்டியையும் வசிப்பிடமாகக் கொண்டவர். யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர். கவிஞர் ஆனந்த மயிலின் புதல்வர்.

இவர் 'நல்லதோர் கனவும் அந்தரிப் போரும்' என்ற கவிதை நூலை முன்பு இலக்கிய உலகுக்களித்தவர். 'கவியின் ஏக்கம்' இரண்டாவது நூல். இந்நூல் 64 பக்கங்களைக் கொண்டு, 38 கவிதைகளை உள்ளடக்கியது. அட்டைப்படம் அழகுற அமைந்துள்ளது. சிறுவரும் படிக்கக் கூடிய பெரிய எழுத்துரு. கவிதைத் தலைப்புக்கேற்ப ஒவ்வொரு கவிதைக்கும் நிழற்படம் அமைந்துள்ளது.

ஏக்கம் என்ற கவிதைத் தொகுதியில் கவிஞர் தனது ஏக்கத்தினை வெளியிடுகிறார். வாழும் ஊர், சமூகம், இயற்கை, காதல், தாய் பாசம், மொழி என்பன பாடுபொருளாக அமைந்துள்ளன. சுடரொளி, வலம்புரி, தினக்குரல், உதயன், நெய்தல் மலர், சூரிய காந்தி போன்ற சஞ்சிகைகளில் பல கவிதைகள் வந்துள்ளன. கவிஞர் இளகிய இதயம் கொண்டவராகவும் சமூக அநீதிகளைக் கண்டு கொதிப்பவராகவும், பிறமத நல்லெண்ணம் கொண்டவராகவும் மிளிர்கிறார்.

'பரிபூரணன் மேல் பழி' என்ற கவிதையில்,

ஓரினம் என்றோம்
ஒன்றாக நின்றோமா?
ஓர் குலம் என்றோம்.
குலபேதம் காட்டாதிருந்தோமா?
அயலவர் என்றோம்
கூடி வாழ்ந்தோமா

என்று சமூகத்தை சாடுகிறார். குடியிருப்புக் கல்லறை அவரது ஏக்கத்தையும் சோகத்தையும் வெளித்தள்ளுகிறது. காதலியின் முகவரி, தெரியாத ஏக்கம், தாய்ப் பாசம் என்பன ஏக்கத்தை காட்டும் கவிதைகள்.

ஆசிரியர் மேலும் பல தொகுதிகளைக் கொண்டு வர வாழ்த்துகிறோம்.




நூல்: மழலை அமுதம் கவிதைத் துளிகள்
ஆசிரியர்: P.P.அந்தோனிப்பிள்ளை
வெளியீடு: லக்ஷ்மி பதிப்பகம் கொழும்பு
விலை: ரூபாய் 150/=


ஆசிரியர் பி.பி.அந்தோனிப்பிள்ளை மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கலை இலக்கியப் பணிகளில் ஈடுபட்டு சிறந்த கவிஞராகத் திகழ்பவர். இவர் சிறுவர் பாடல்கள், கட்டுரைகள் என்று சுமார் 25 நூல்களை எழுதி இலக்கியத் தொண்டாற்றியவர். சிறந்த நாடகக் கடத்து கலைஞருமாவார். இவருடைய ஆக்கங்களுக்காக பல சான்றிதழ்களும் பரிசுகளும் பெற்றவர். இவரது முதல் நூல் 1989இல் வெளிவந்தது. இலங்கை தேசிய வானொலி 'கவிதைக்கவசம்' பகுதியில் இவரது கவிதைகள் தவறாது வெளிவருவதுண்டு.

'மழலை அமுதம்' என்ற இந் நூல் 51 பக்கங்களைக் கொண்டது. இதில் 47 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. சிறுவர்களுக்கு ஏற்றவிதத்தில் எளிய மொழியை கையாண்டுள்ளார். தலைப்புக்குத்தக்க படங்களையும் சேர்த்து கவர்ச்சியான அட்டைப்படத்துடன் வெளியிட் டுள்ளார். இவரது கவிதைகள் சமுகப்பிரச்சினைகளையும், சிறுவர்பிரச்சினை களையும் கோடிட்டுக் காட்டுகின்றன. கவிதைகள் ஏதோ ஓர் செய்தியை சுமந்து வருகிறது.

'உடைந்த உள்ளம்' என்ற கவிதை, அடியை மறக்கலாம். ஆனால் திட்டுவதை மறக்க முடியாதென்கிறது. சிறுவர் உரிமை என்ற கவிதை உரிமையுடன் வாழும் உரிமை எமக்குண்டு உறுதியுடன் பேணும் கடமை உமக்குண்டு என்கிறது.

'மாணவர் புலம்பல்' என்ற கவிதை மாணவர்மீது திணிக்கப்படும் பாடப் பழுவை உணர்த்துகிறது. 'ஆயுட்கால தலைவர்' என்ற கவிதை பணத்தால் பதவியை தக்கவைத்து கொடுமை செய்யும் துரோகியின் நடத்தையை காட்டுகிறது. 'ஞானமும் ஊனமும்' என்ற கவிதை குறும்பு செய்வது குழந்தை இயல்பு குற்றம் பொறுப்பது பெரியோர் கடமை என்று எடுத்துக் காட்டுகிறது.

கவிதைகள் புதுக் கவிதை வடிவாக அமைந்துள்ளன.




நூல்:
என்கடன்
(கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்:
வே.ஐ.வரதராஜன்
வெளியீடு:
ஜீவநதி
விலை:
ரூபாய் 200/=

மேற்படி நூலின் ஆசிரியர் அரியாலையைச் சேர்ந்தவர். வே.ஐ.வரதராஜன் என்பது இயற் பெயர். இவர் அரியாலையூர் பிரபல கவிஞர் வே.ஐயாத்துரையின் மகனாவார். முப்பத்தேழு வருடகால அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். இந்நூல் இவரது முதனூலாகும். தனது வாழ்வின் அரச உத்தியோகத்தின் அனுபவங்களை பிழிந்து தந்துள்ளார்.

இந்நூல் அறுபத்து நான்கு பக்கங்களைக் கொண்டு முப்பத்தைந்து கவிதைகளை உள்வாங்கியுள்ளது. இவரது ஆக்கங்கள் ஜீவநதி, ஞானம், வீரகேசரி, மல்லிகை, உதயன், வலம்புரி போன்ற சஞ்சிகைகளில் இடம்பெற்றுள்ளன. மரபுக் கவிதைகளில் நல்ல கைவண்ணம் இருந்தும் புதுக்கவிதை வடிவில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கவிதைகள் ஒவ்வொரு செய்தியை நமது சிந்தனை விருந்தூட்டுகின்றன. இவரது தமிழார்வத்திற்கு காரணம் கலாநிதி தாவீது அடிகளார் என்று நன்றியுள்ள நினைப்பதுடன் தனக்கு முகவரி தந்தது 'கலைமுகமே' என்கிறார்.

கவிஞர்கள் மிகவும் மென்மை உள்ளம் படைத்தவர். சைக்கிளுக்குக் காற்றாடிக்கச் சென்றார். ஊழியரை நோக்கி வருந்துகிறார்.

'வறுமைக் கோடுகள் முகத்தில் தெரிய
பிழைப்புடன் ஒன்றும் பலமற்ற கால்கள்
கரங்களில் நழுவும் காற்றழுந்தும்பம்பி'

என்று இரக்கப்படுகிறார் முற்றத்து முருங்கை - இழந்து போன வாழ்வைக் காட்டுகிறது. 'தொலைந்த கிராமங்கள்' கவிஞரின் சமூக அக்கறையை விளம்புகிறது.

'வாழையிலை விருந்தும், வாசல்வழிக் கோலமும் வகையிழந்து காணும் சாயங்கால மணியொலிக்க உரோசை அடங்கும்' இது இராணுவ கெடுபிடியில் பின்னர் நடந்த சம்பவம்

சமூகத்தை கண்டிக்கும் மற்றோர் கவிதை வருமாறு:

கைத்தொலைப் பேசியுடன், இராமர்கள்
சீதையை வீட்டில் பூட்டி, விடுதிகள்
தோறும் மாயமானைத் தேடும் படலங்கள்.

கவிஞரின் சமூக பளிச்சிடுகிறது.





நூல்:
நானாக நான்
சிறுகதைத் தொகுதி
ஆசிரியர்:
சிதம்பர பத்தினி
வெளியீடு:
ஹரிகணன்பிரிண்டர்ஸ்,
யாழ்ப்பாணம்.
விலை:
ரூபாய் 550/=

நூலாசிரியர் பத்தினியம்மா திலக நாயகம் போல் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி. சாகித்யரத்னா செங்கை ஆழியான் செம்பியன் செல்வன், கலாபரமேஸ்வரன் ஆகியோருடன் எழுத்துலகில் பிரவேச மானவர். இவர் யாழ். அரச உதவி அதிபராகவும், பிரதி அரச அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றவர். இலக்கிய உலகில் ஆளுமை மிக்க படைப்பாளி.

சிறுவர் இலக்கியம், கவிதை, சிறுகதை, குறுநாவல், ஆய்வு, வரலாறு, விமர்சனம் என்றவாறு பதினைந்துக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். பல பரிசில்களைப் பெற்ற இவர் 'கலை ஞானச் சுடர்' என்ற விருதினையும் பெற்றுள்ளார். இவரது ஆக்கங்கள் பழமை வாதிகளைக் கண்டிப்பதாகவும், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்க வேண்டியும், மூடப்பழக்கங்களை அகற்றவும் துணைசெய்கின்றன.

இந்நூல் *190* பக்கங்களையும் கொண்டு, பதின்மூன்று சிறுகதைகளையும் ஒரு குறுநாவலையும் கொண்டுள்ளது. அஃறிணைப் பொருட்களை கதாபாத்திர மாக்கியும் அதன் மூலம் படிப்பினையையும் கொடுத்துள்ளார். வாயில்லா ஜீவன்களை மனிதர் வருத்தும் கொடுமையான நிகழ்வு களையும் வடித்துள்ளார்.

'இருந்தும்இல்லாத'கதையில்ஊதாரியான தாயின் அறிவற்ற போக்கையும் கணவனின் கொடுமையையும் ஆணாதிக்கப் போக்கையும் கண்டிக்கிறார். "தண்ணீரிலே தாமரைப்பூ' என்ற கதை, பிரசித்தமான ஒரு டாக்டர் எஞ்சினியர் கணவனை மணந்து மாமியார், நாத்தனார் கொடுமையை அனுபவிக்கும் காட்சியையும், விவாகரத்து கோரவிருந்தவர் தனது மகனின் எதிர்காலம், தமிழ்ப்பண்பாடு, குடும்ப கௌரவம் கருதி தனது எண்ணத்தை மாற்றித் கொள்வதையும் கதாசிரியர் சித்தரித்துள்ளது வாழ்த்துக்குரியது. கையா லாகாத கைப்பொம்மையாகவிருக்கும் கணவர்மாருக்கும் சாட்டையடி கொடுக்கும் படியாக கதை அமைந்துள்ளது. மேலும் பல நூல்களை அவரிடம் எதிர்பார்க்கலாம்.




நூல்:
எண்ணமும்
எழுத்தும்
ஆசிரியர்:
எஸ்.சந்திரபோஸ்
வெளியீடு:
அஸ்ரன்
பப்ளிகேசன்,
கொழும்பு 6.
விலை:
ரூபாய் 400/=

'எண்ணமும் எழுத்தும்' என்ற இந்த நூலின் ஆசிரியர் எஸ். சந்திரபோஸ் அவர்களாவார். இவர் ஒரு பட்டப்பின் பட்டதாரி. ஆசிரியர் தொழிலை மேற்கொண்டவர். சமூக நோக்குடையவர். சிறந்த சிந்தனையாளர். தமிழ்க் கல்வியுலகிலும் இலக்கியவுலகிலும் தனக்கென ஒரு வாசகர் கூட்டத்தையுடையவர். தனது ஆக்கங்கள் சமூகத்தை மேம்படச் செய்ய வேண்டுமென்று கருதுபவர்.

இவரது இருபது படைப்புக்களைத் தாங்கி 'எண்ணமும் எழுத்தும் நூற்றிப் பதினெட்டு பக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. மூத்த எழுத்தாளர்களின் படைப்புகள் பற்றி அறியாத இளம் எழுத்தாளர்களுக்கு இந்நூல் சிலரைப் பற்றி முழுமையான அறிவைப் பெற வாய்ப்பளிகிறது. எழுத்தாளர்களின் அரசியல் சித்தாந்தம், அவர்களது படைப்பு, வாழ்வியல் அனுபவங்கள், அவர்களது நம்பிக்கைகள், முயற்சிகள், ஏமாற்றங்கள், வெற்றிகள் இவைகளை இளையோர் அறிந்து கொள்ள உதவும் நூலாகிறது.

பாரதி, குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம், எழுத்துப் போராளி எஸ். பொன்னுத்துரை, இலங்கை முற்போக்குச் சங்க எழுத்தாளர் பிரேம்ஜி, கே.டானியல், வாழ்நாள் சாதனையாளர் மல்லிகை ஜீவா, என்.கே.ரகுநாதன், பகுத்தறிவுப் பகலவன் செல்வா போன்றவர்களின் வரலாற்றை மிக அற்புதமாக எழுதியுள்ளார். சில சிறுகதைகள், சில கவிதைகள், வன்னி நிலமும் வாழ்வும் என்பன போன்ற அம்சங்களை நூலில் காணலாம்.

இந்நூல் ஆசிரியரின் ஆழமான அறிவையும், சீரிய சிந்தனையையும் தெளிவாக விளக்குகிறது.

**நூல் அறிமுகத்திற்கு நூல்களை அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். ஒரு பிரதியை மட்டும் அனுப்பினால் அதற்கான நூல் அறிமுகம் இடம்பெற மாட்டாது. ஒரு வருடத்திற்குள் வெளிவந்தநூல்களே நூல் அறிமுகத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.**

*குறிஞ்சி நாடன்*

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

கே. பொன்னுத்துரை

### தேவமுகுந்தனின் கண்ணீரினூடே தெரியும் வீதி

தேவமுகுந்தனின் கண்ணீரினூடே தெரியும் வீதி சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா கொழும்புத் தமிழச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் (17.11.2012) வைத்தியகலாநிதி எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்தினை திருமதி லலிதாம்பிகை சண்முகநாதன் பாட, வாழ்த்துரைகளை வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன், விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் ஆகியோர் வழங்கிய இந்நிகழ்வில் வெளியீட்டுரையை திருமதி வசந்தி தயாபரன், மதிப்பீட்டுரைகளை உமாவரதராஜன், சி.விமலன், அ. யேசுராசா ஆகியோர் வழங்கினர்.

முதற்பிரதியை ஆ. செல்வேந்திரன் பெற்றுக் கொண்டார்.

### மூத்தோர் கௌரவிப்பும் நூல்கள் வெளியீடும்

உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனின் நூல் வெளியீட்டுக்குழுவினர் நடத்தும் மூத்தோர் கௌரவிப்பும், நூல்கள் வெளியீடும் (18.11.2012) கொழும்புத் தமிழ்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இளைப்பாறிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியகலாநிதி வீ. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கொழும்புத் தமிழ்சங்கத் தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்க, நூலின் முதற் பிரதியை திரு. திருமதி ஏ. எம். சுப்பிரமணியம் - மாலதி தம்பதியினர் பெற்று சிறப்புச் செய்தார்கள்,

முதலாவது அமர்வு க. இ க. கந்தசாமி அரங்கில் மூத்தோர் கௌரவிப்பு நடைபெறும் பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து, செல்வி. ந. காயத்திரியின் இறை ஆராதனையும், செல்வன் ந.ஸ்ரீராமின் வரவேற்புரையும் இடம் பெற்றது.

ஆசியுரையை யோகாசனப் பேராசான் ந. ஆறுமுகம் வழங்க, வாழ்த்துரையை எஸ். திருநாவுக்கரசு, மு.கதிர்காமநாதன் ஆகியோர் வழங்கினார்கள்.

மூத்தோர் கௌரவிப்புக்கான தொடக்கவுரையை கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை நிகழ்த்த, மூத்தோர்களுக்கான கௌரவிப்பு நடைபெற்றது

வை. செல்வராணி அரங்கில் நடைபெற்ற நூல் வெளியீட்டில் உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனின் "மூத்தோர் பராமரிப்பு" (ஆங்கில மொழிபெயர்ப்பு) இந்த நூலைப் பற்றி சட்டத்தரணி சோ. தேவராஜா உரையாற்ற, "ஆஸ்துமாவுடன் வாழ்வதெப்படி?" இந்த நூல் பற்றிய உரையை வைத்தியகலாநிதி எஸ். சண்முகதாஸ் நிகழ்த்தினார்.

நூல் வெளியீட்டை தொடர்ந்து ஏற்புரையை நூலாசிரியர் உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனும் நன்றியுரையை செல்வி. ந. காயத்திரியும் நிகழ்த்தினார்கள்.

நிகழ்வுகளை எஸ் பாலசந்திரன் தொகுத்து வழங்கினார்.

### பிரான்ஸ் வி.ரி.இளங்கோவனின் "இலக்கிய மாலை"

பிரபல எழுத்தாளர் பிரான்ஸ் வி.ரி.இளங்கோவனின் "இலக்கிய மாலை" நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வு கொழும்புத் தமிழச் சங்க விநோதன் மண்டபத்தில் (01.12.2012)

மூத்த எழுத்தாளர் அன்னலெட்சுமி இராஜதுரை தலைமையில் "இலக்கிய புரவலர்" ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்வாழ்த்தினை ப.க. மகாதேவா பாட, கருத்துரைகளை "தினக்குரல்" பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம், எழுத்தாளர் தம்பி ஐயா தேவதாஸ் ஆகியோர் வழங்க நான்கு நூல்களின் அறிமுகவுரைகளை "ஞானம்" ஆசிரியர் வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன், "யாத்ரா" ஆசிரியர் அஷ்ரப் சிஹாப்தீன், மேமன்கவி, எம்.ஏ.சி. இக்பால், கலாபூஷணம் கலைஞர் தம்பி தில்லைமுகிலன், ஆகியோர் வழங்க நூல்களின் சிறப்பு பிரதிகளை சட்ட ஆலோசகரும், பிரசித்த நொத்தாரிசுமான க.மு. தர்மராசா, பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் ஆகியோர் பெற்றுச் சிறப்பு செய்தனர்.

நூலாசிரியர் வி.ரி.இளங்கோவனுக்கு கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி.பாஸ்கரா பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்தார்.

## இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வக ஒன்றுகூடல்

இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் தனது இரண்டாவது ஒன்றுக்கூடலை கொழும்பு வெள்ளவத்தை பிரின்ஸ் அகடமியில் ஆய்வக செயலாளர் அஷ்ரஃப் சிஹாப்தீன் தலைமையில் நடத்தியது.

போருக்குப் பின்னரான முஸ்லிம் அரசியலில் மாற்றம் அவசியமா? என்ற தலைப்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் உரையாற்றினார்.


அதனைத் தொடர்ந்து "முஸ்லிம் படைப்பாளிகளின் போர்க்கால இலக்கியம்" என்ற தலைப்பில் "ஞானம்" ஆசிரியர் வைத்தியகலாநிதி தி.ஞானசேகரன் உரையாற்றினார். உரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெற்றது.

## தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) பரிசளிப்பு

தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) பரிசளிப்பு 2011 விழாவும், மூத்த எழுத்தாளர்க்கான கௌரவமும், அமரர் சோ. சிவபாதசுந்தரம் நூற்றாண்டு நினைவுரையும் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தகவம் தலைவர் மாத்தளை கார்த்திகேசு தலைமையில் (09.12.2012)நடைபெற்றது.

தமிழ்வாழ்த்தினை திருமதி நிலானி கோபிசங்கர் பாட, மூத்த எழுத்தாளர் "மக்கத்துச்சால்வை" எஸ்.எல்.எம். ஹனீபா பற்றிய பாராட்டுரையை வைத்தியகலாநிதி எம். கே. முருகானந்தன் நிகழ்த்த, திரு.திருமதி விஜயகுமார் தம்பதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்தனர்.

எஸ்.எல்.எம். ஹனீபாவின் ஏற்புரையை தொடர்ந்து அமரர் சோ. சிவபாதசுந்தரம் நூற்றாண்டு நினைவுரையை தெ. மதுசூதனன் நிகழ்த்தினார். தொடர்ந்து 2011 ஆண்டுகளில் சிறந்த சிறுகதைகளுக்கான பரிசளிப்புகளை வழங்கினார்கள். நன்றியுரையை ஆ. விஜயகுமார் அவர்கள் நிகழ்த்தினார்.





## ஞானம் 150வது சிறப்பிதழ் – மட்டக்களப்பு அறிமுக விழா

மட்டக்களப்பு செங்கதிர் இலக்கியவட்டம், 27-12-2012 அன்று காலை 10 மணிக்கு, மட்டக்களப்பு பொது நூலக மண்டபத்தில், ஞானத்தின் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழுக்கு அறிமுக விழா ஒன்றை த.கோபாலகிருஷ்ணன் தலைமையில் வெகு விமர்சையாக நடத்தியது. இவ்விழாவின்போது ஞானம் ஆசிரியர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.



விழாவில் பேராசிரியர் சி.மௌனகுரு கௌரவ விருந்தினராகவும் செல்வி தங்கேஸ்வரி சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். தலைவர் த. கோபாலகிருஷ்ணன், அன்புமணி, கவிஞர் குணரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.




## திருகோணமலையில் அறிமுகவிழா

திருகோணமலையில் 28-12-2012 அன்று மாலை 5 மணிக்கு, எழுத்தாளா வீ. என். சந்திரகாந்தி அவர்கள் ஞானத்தின் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழுக்கு அறிமுக விழா ஒன்றை திருமலை நவம் அவர்களின் தலைமையில் நடத்தினார்.




## வவுனியாவில் அறிமுகவிழா

வவுனியாவில் 29-12-2012 அன்று காலை 10 மணிக்கு, வவுனியா கலை இலககிய நணபர்கள் வட்டம், ஞானத்தின் ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழுக்கு அறிமுக விழா ஒன்றை கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடத்தியது.



உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் 'ஞானம்' 150ஆவது சிறப்பிதழுக்கான அறிமுக நிகழ்வு 30.12.2012 ஞாயிறு காலை 9.30 மணிக்கு யா/தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு எழுத்தாளர் சீனா உதயகுமார் தலைமை வகித்தார். சிறப்பிதழ் பற்றிய அறிமுகவுரையை ஞானம் நிர்வாக ஆசிரியர் திரு. ஞா. பாலச்சந்திரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன. கட்டுரைகள் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளரும் எழுத்தாளருமாகிய இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார். கவிதைகள் பற்றிய உரையை கவிஞர் கருணாகரனும், சிறுகதைள் பற்றிய உரையை சின்னராஜா விமலனும், நேர்காணல், கருத்தாடல், இதழ் வடிவப்பு பற்றிய உரையை தானா விஷ்ணுவும் நிகழ்த்தினர். சிறப்பிதழின் முதற்பிரதியை கலாபூஷணம் மா. ஆனந்தராசன் பெற்றுத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

## 'ஞானம்' சஞ்சிகை நடத்திய செம்பியன் செல்வன் ஞாபகார்த்தக் கவிதைப் போட்டி - 2012 முடிவுகள் முடிவுகள்



❖ **முதற்பரிசு : ரூபா 5000/= மும் சான்றிதழும்**
**கவிதை: 'வன்ம தேசம்',**
எழுதியவர் - 'சத்தியமலரவன்' -
ஆ.வெ. கெங்காதரன் குமாரவளவு, வியாபாரிமூலை, பருத்தித்துறை.

❖ **இரண்டாம் பரிசு : ரூபா 3000/= மும் சான்றிதழும்**
**கவிதை: "மறை பொருள்"**
எழுதியவர்– புதுவைப்பிரபா உ. பிரபாகரன்,
எண் –02, முத்து வாழியம்மன் கோயில் தெரு,
புக்கமுடையான் பட்டு, புதுச்சேரி – 605 008, தென் இந்தியா.

❖ **மூன்றாம் பரிசு : ரூபா 2000/= மும் சான்றிதழும் –**
**கவிதை: 'கலைஞர் பென்சனெடுக்கப்போன கவிஞர்',**
எழுதியவர்– செ. குணரத்தினம், 3ஆம் குறுக்குத் தெரு, அமிர்தகழி, மட்டக்களப்பு.

பரிசுச் சான்றிதழ் பெறும் கவிதைகள் :

(1) 'மலையகப்பெண் காணும் காலைக்காட்சி' – ஆர்.தம்பித்துரை, இல– 58, ரொஸிட்டா வீட்டுத்திட்டம், கொட்டகலை

(2) 'சாடியிலே கன்றெதற்குச் சாற்று' – கிண்ணியா ஏ.எம்.எம் அலி, 25, அடப்பனார் வயல், கிண்ணியா– 05.

(3) 'வாசிப்பை நேசிப்போம்' – கே. மகேஷ், 249/1, நாயன்மார் வீதி, யாழ்ப்பாணம்.

(4) 'மேன்மையை ஈட்டும் மனித விழுமியங்கள்' – வ. சின்னப்பா, தனங்கிழப்பு, சாவகச்சேரி.

(5) 'நாடு நலம் பெற' – உ.நிசார், 70/3, புதிய கண்டி றோட், மாவனல்லை.

(6) 'சாவதற்கா நாம் பிறந்தோம்' – கண.மகேஸ்வரன், 66, முருகமூர்த்தி வீதி, நெல்லியடி, கரவெட்டி.

பரிசளிப்பு 25-11-2012 அன்று மாலை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்ற 'ஞானம்', "ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்" வெளியீட்டு விழாவில் இடம்பெற்றது.

**– தி. ஞானசேகரன்,** ஞானம் ஆசிரியர்


"ஞானம்" ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்
வெளியீட்டு விழா – (25.11.2012)





### "திறனாய்வுக் கலாவித்தகர்" கே. எஸ். சிவகுமாரன்

காய்தலுவப் பின்றிக் கருத்துன்னிச் செய்யுதிறன்
ஆய்கலையில் வல்லார் எனப்படுவார் - ஓய்வகற்றிக்
கற்றாய்ந் தேதொடருங் கே.எஸ். சிவகுமாரன்
நற்பணியைப் போற்றல் நலம்



### "காவியப் புலவர்" ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

காவியங்கள் செய்தே கவிக்கலைக்குத் தொண்டியற்றுஞ்
சேவைமிகப் பாரிதாம் செய்கின்ற - காவியக்கோ
ஜின்னாஹ் ஷரிபுத்தீன் செய்தமிழை நற்றமிழின்
பொன்னா மெனப்போற்றல் சீர்



### "கலை இலக்கியக் காவலர்" அல்ஹாஜ் ஹாசிம் உமர்

கலைஞர் எழுத்தாளர் கைதாங்கி அன்னார்
நிலையுயரக் கோடிப்பொன் நாடிப் - பலபடவே
தந்துதவும் சான்றோனாம் ஹாஷிம் உமர்சேவை
சந்ததமும் போற்றத் தகும்



### "மிருதங்கக் கலாகீர்த்தி" பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா

விரல்நுனியில் வல்லபத்தை வைத்துமிரு தங்க
விருந்தளிக்கும் வித்துவத்தில் வல்லோன் - திருவாம்
சுவாமிநாதன் சர்மா சிறப்புரைப்ப தென்னில்
இவனுலகில் வார்த்தையிலை காண்



### "ஓவியக் கலாகீர்த்தி" ஓவியர் ஆசை இராசையா

ஓவியத்தைத் தம்மின் உயிர்மூச்சாய்க் கொண்டுலகம்
நாவார வாழ்த்த நலஞ்சேர்க்கும் - ஓவியராம்
ஆசைரா சையாவின் ஆற்றலுக்கோர் ஈடில்லை
பேசிடவும் வார்த்தையில்லைத் தான்

# வாசகர் பேசுகிறார்

## அடையாள அட்டை இலக்கமும் ஏ.எம்.எம்.அலியும்

இம்மாத ஞானம் இதழில் கொடகே சாகித்திய பரிசு பற்றிய எழுத்தாளர் ஏ.எம்.எம். அலியின் பத்தி எழுத்தைப் பார்க்கக் கிடைத்தது. ஏற்கனவே எங்கள் தேசம் பத்திரிகையிலும் இது பற்றி அலி அவர்கள் எழுதியிருந்தார். உண்மையில் அவரது ஏமாற்றம் வருத்தத்தைத் தருகிறது. யாரோ ஒரு அநாமதேயம் அடையாள அட்டை இலக்கத்தைக் கேட்டதற்காக பரிசு தனக்கென அவர் நம்பியது. உண்மையில் தவறுதான், அடையாள அட்டை இலக்கத்திற்கும் பரிசுக்கும் என்ன சம்பந்தம்? பரிசுப் பணத்திற்கான காசோலை எழுதுவதாக இருந்தாலும் பெயர் பற்றி விசாரிப்பார்களே தவிர அடையாள அட்டை இலக்கத்தை யாரும் விசாரிக்க மாட்டார்கள். யாரோ அலியை ஏமாற்றுவதற்காக கொடகேயிலிருந்து பேசுவதாக பாவனை காட்டி அலியை ஏமாற்றியிருக்கிறார்கள். பாவம் அலி 64வது வயது வந்தவராயிருந்தும் ஏமாற்றப்பட்டு விட்டார். அவரது தொகுதி கொடகே சிறுகதைத் தேர்வில் 5க்குள் ஒன்றாக வந்திருக்கிறது. அரச சாகித்திய தேர்வில் 3க்குள் ஒன்றாக வரவில்லை. அதே நேரம் இலங்கை இலக்கியப் பேரவைத் தெரிவிலும் அவரது தொகுதி தெரிவு செய்யப்படவில்லை. கிழக்கு மாகாண சிறந்த நூல் 2012இலும் அவரது தொகுதி பரிசு பெறவில்லை. இந்தப் போட்டிகளின் நடுவர்களின் தீர்ப்பு தவறானதா? இதில் ஒன்றிலாவது அவர் பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவர் பக்க நியாயம் உண்மைப் படுத்தப்பட்டிருக்கும், எனவே அவரது அடையாள அட்டை இலக்கம் விசாரிக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக அவரது ஆதங்கத்தை நியாயப்படுத்த முடியாது. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு. கொடகே மத்தியஸ்தம் சரியானதுதான் என்பதை ஏனைய முடிவுகள் நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அலி அவர்கள் தம்மை தேற்றிக் கொள்வாராக

-அன்புடன் எஸ்.எம்.சிஹார் முகமட்

ஞானம் இதழ்களில் அவ்வப்போது வெளியாகும் சில பயனுள்ள கதை, கட்டுரை, கவிதைகளை நான் வாரந்தோறும் (புதன்களில்) சர்வதேச தமிழ் வானொலி (ITR) மூலம் கொடுப்பேன். சென்ற வார நிகழ்ச்சியில் எழுத்தாளர், ஜீவகுமாரனின் "தாம்பத்தியம்" எனும் சிறுகதையும், குடந்தை பரிபூரணனின் "பூமி வெப்பமும் மனிதன் நிலைப்பாடும்" எனும் கவிதையும் இடம்பெற்றது. "ஞானம்" - இதழ் படிப்படியாக மெருகேறி வருவது, உண்மையில் பெருமகிழ்ச்சியே. கம்போடிய பயணக் கட்டுரை மிகவும் பயனுள்ளது மட்டுமல்ல நன்றாக எழுதப்பட்டும் உள்ளது - பாராட்டுகள் கட்டுரையாளருக்கு. சபாஷ்! ஞா. பாலச்சந்திரன்.

திருமதி யோகா பாலச்சந்திரன் (கனடா)

ஞானம் சிறப்பு மலர் ஈழத்தின் போர்க்கால இலக்கியங்களை தொகுத்திருப்பது சாலப்பொருத்தமானதே!. உதாரணத்துக்கு கூட சில உண்மைகளை எடுத்துக்கூற விரும்பாத சூழலில், தம் படைப்புகளில் பயம் கருதி சுட்டிக்காட்டாமல் தப்பிக் கொண்ட பல வரிகளை ஒரு தொகுப்பு முழுவதும் காண்பது ஞானத்தின் சமூகப் பொறுப்பை பிரதிபலித்து நிற்கின்றது. நிச்சயமாக இது ஒரு ஆவணத்தொகுப்பாய், ஆறுதலாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

கவிஞர் குரும்பையூர் தம்பி.ஐங்கரன்

'ஞானம்' நூற்றி ஐம்பதாவது இதழ் 'ஈழத்து போர் இலக்கிய சிறப்பிதழாக அறுநூறு பக்கங்களுடன் வெளிவந்து அசத்தியுள்ளது.

ஒரு சிற்றிதழ் சிறப்பிதழ் இத்தனை சிறப்புடன் இதுவரை வந்ததில்லை. இனி வரப் போவதுமில்லை.

இவ்விதழ் முழுவதும் ஈழத்துப்போரின் தாக்கங்கள் குறித்தும், விமானம் பொழிந்த குண்டுகளாலும் செல்வீச்சுக்களாலும், உயிரிழந்தும், கால், கை, கண் இழந்தும் உடல் சிதறியும் அழிந்து போன அப்பாவி மக்களின் துன்பங்கள், துயரங்கள் என்பனவற்றையும், அகதிமுகாமிற்குள் அகப்பட்டு அல்லல்பட்ட அப்பாவிகளின் சோகக் கதைகளையும், பதுங்கு குழிக்குள் குண்டுவிழுந்து அழிந்து போன குடும்பங்களின் கதறலையும், இடப்பெயர்வினால் ஏற்பட்ட கொடுமைகளையும் நீதி நியாயமின்றி கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட மனிதப் படுகொலைகளின் கொடூரத்தையும், அபலைகளை கற்பழித்துக் கொன்ற கொடுமைகளையும் இந்த போர் இலக்கிய இதழ் விபரிக்கிறது.

இதனுள் அடங்கியுள்ள சிறுகதைகளும், கவிதைகளும், கட்டுரைகளும் சொல்லும் நிகழ்வுகள் கற்பனையல்ல. எல்லாம் நிஜங்களே இன்னும் கொடுமைகளைச் சித்தரிக்கும் ஓவியங்களும், போர் எழுச்சிப் பாடல்கள், மெல்லிசைப்பாடல்கள் போன்றவற்றை உள்ளடக்கி மகி மிக கனதியாக, அழகாக வெளி வந்துள்ளது. இதன் அட்டைப்படம் போரின் குறியீடாக அமைந்து சிந்திக்க வைக்கிறது. இத்தகைய பெருநிலையில் தன்னை உயர்த்திக்கொண்ட 'ஞானம்' இந்தப் பெருமையை தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

ஞானத்தின் தரம் என்றும் குறைந்ததில்லை. அதனை நிரூபிக்கும் வண்ணம் அண்மையில் 'தகவம்' நடத்திய விழா அமைந்தது. 2011ஆம் ஆண்டில் வெளிவந்த சிறுகதைகளை 'தகவம்' மதிப்பீடு செய்து பன்னிரண்டு பரிசுகளை வழங்கியது. கேடயம், பணப்பரிசு சான்றிதழ் என்பன வழங்கப்பட்ட போது 'ஞானம்' அதிகூடிய ஐந்து பரிசுகளைத் தட்டிக் கொண்டமை அதன் தரத்தின் தன்மையை குன்றின் மேலிட்ட தீபமாகக் காட்டியுள்ளமை அதன் புகழுக்குச் சான்றாகும்.

புசல்லாவ குறிஞ்சிநாடன்

போர்க்கால இலக்கியங்கள் கடந்த மூன்று வெளிப்பாடுகள் கண்டேன்; தினக்குரலில். அவை அவசியமான ஆவணங்கள். வேறு எவரும் நுழைய முடியாத - முனைந்து பாராத 'பத்மவியூகத்தை' உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்திருக்கிறீர்கள். உங்கள் பணி காலத்தால் அழியாதது. இந்தச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கூர வேண்டியது.

மூத்த எழுத்துலகின் விலைமதிப்பற்ற 'வைரம்' மு.பொ.அவர்கள். இளைய படைப்புலகின் 'பகலவனாக' எழுந்து வருகிறவர் 'மது'. இருவரிடமிருந்தும் நீங்கள் பிடுங்கி எடுத்துக் கொண்ட, எண்ண வெளிப்பாடுகள் - இலக்கியச் செய்திகள் - வரலாற்று உண்மைகள் மகத்தானவை.

ஐயா! இந்த அற்புதமான 'தெரிவு'தனையும் உங்கள் அயராத உழைப்பையும் எப்படிப் பாராட்டுவது!

–மா.குலமணி

## தமிழ்க் கதைஞர் வட்டம் – (தகவம்) சிறுகதை மதிப்பீட்டு முடிவுகள் – 2011

| தகவம் | எழுத்தாளர் | சிறுகதை | பத்திரிகை/ சஞ்சிகை |
|---|---|---|---|
| **முதலாம் காலாண்டு** | | | |
| முதலாம் இடம் | வி.ஜீவகுமாரன் | நாணயம் | ஞானம் |
| இரண்டாம் இடம் | பா.தனபாலன் | அப்பாவேணும் | ஜீவநதி |
| மூன்றாம் இடம் | மு.அநாதரட்சகன் | திருப்பம் | மல்லிகை |
| **இரண்டாம் காலாண்டு** | | | |
| முதலாம் இடம் | தாட்சாயணி | பொய்மையும் வாய்மையிடத்து | ஜீவநதி |
| இரண்டாம் இடம் | சூசை எட்வேட் | பக்தர்கள் செய்த பாவம் | தினக்குரல் |
| மூன்றாம் இடம் | சுதர்ம மகாராஜன் | அவன் என் நண்பனாக இருந்தான் | ஞானம் |
| **மூன்றாம் காலாண்டு** | | | |
| முதலாம் இடம் | வழங்கப்படவில்லை | | |
| இரண்டாம் இடம் | களுவாஞ்சிக்குடி யோகன் | மன்னிப்பீர்களா அம்மா | தினக்குரல் |
| மூன்றாம் இடம் | தேவமுகுந்தன் | இவன் | கலைமுகம் |
| சிறப்புப் பாராட்டு | எம்.எஸ்.அமானுல்லா | ஒரு பெண்ணின் கதை | ஜீவநதி |
| **நான்காம் காலாண்டு** | | | |
| முதலாம் இடம் | வி.ஜீவகுமாரன் | மாங்கல்யம் தந்துதானே | ஞானம் |
| இரண்டாம் இடம் | எஸ்.முத்துமீரான் | முதியான் கண்டுத்தயிரு | ஞானம் |
| மூன்றாம் இடம் | யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | மயான காண்டம் | ஞானம் |

## 'ஞானம்' "ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்"




கடந்த முப்பெரும் தசாப்தங்களான ஈழத்துப் போர்க்காலத்தில் மொழியையும் அதன் வழியான இலக்கியத்தையும் கலாசார ஆயுதமாக ஏந்திய பேனா மன்னர்களின் போரிலக்கியம் தொடர்பான படைப்பு, ஆய்வு, மதிப்பீடு, கருத்தாடல், ஆவணம் பற்றிய பெருந்தொகுப்பாக இச் சிறப்பிதழ் 600 பக்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ளது.

**இலங்கையில் இதழின் விலை ரூபா 1500/=**

---

"ஞானம்" அலுவலகத்தில் இவ்விதழ் **ரூபா 1000/=** மாத்திரமே!

தபாலில் பெற விரும்புவோர் தபாற்செலவு **ரூபா 250/=** சேர்த்து அனுப்ப வேண்டும்.

தொடர்புகளுக்கு : **0777 306506**

---

அவுஸ்திரேலியாவில் இதழின் விலை - அவுஸ்திரேலிய டொலர் **25**

தபாலில் பெறவிரும்புவோர் தபாற்செலவு வேறாக அனுப்ப வேண்டும்.

தொடர்புகளுக்கு: **(0061) 408 884 263**

## "ஞானம்" சஞ்சிகை கிடைக்கும் இடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
202, 340, செட்டியார் தெரு, கொழும்பு-11

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
309A/ 2/3, காலி வீதி, வெள்ளவத்தை.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**துர்க்கா**
சுன்னாகம்

**ஜீவநதி**
அல்வாய். தொலைபேசி: 077 5991949

**லங்கா சென்றல் புத்தகசாலை**
84, கொழும்பு வீதி, கண்டி.

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/43/News/2013

*With Best Compliments from*

Luckyland

உலக சாதனை எங்கள் பாரம்பரியம்
பிஸ்கட்டிலும் தான் !




LUCKYLAND BISCUIT
MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740
Email: luckyland@sltnet.lk

இச்சஞ்சிகை தி. ஞானசேகரன் அவர்களால் இல.48 B புளுமெண்டால் வீதி, கொழும்பு 13. யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.